# சரபேந்திர
# வைத்திய ரத்னாவளி



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்,

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 179

# சரபேந்திர வைத்திய ரத்னாவளி

(இரண்டாம் பாகம்)

*பதிப்பாசிரியர் :*

**ராஜஸ்ரீ ஆ. கிருஷ்ணஸ்வாமி மாடிக் ராவ்ஸாஹேப்,** B. A.,

அரண்மனை, தஞ்சாவூர்

*தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்*

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2005 ] [ விலை : ரு. 70-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு



| | |
|---|---|
| நூற்பெயர் | : சரபேந்திர வைத்திய ரத்னாவளி பாகம் - II |
| பதிப்பாசிரியர் | : A. கிருஷ்ணஸ்வாமி மாடிக் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 179 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : ஜுன், 2005 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 140 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : ராப்பர் கட்டு |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ. 70-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகம் மக்களுக்குப் பயன்படும் வகையில் அரிய ஆயுர்வேதம், சித்தமருத்துவம் சார்ந்த நூல்களை ஏட்டுச்சுவடிகளிலிருந்து தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. சரபோஜி மன்னரின் அரிய சேகரிப்புச் சுவடிகள் வரிசையில் மராட்டி மொழியில் அமைந்த **வைத்திய ரத்னாவளி** எனும் சுவடிகளின் (எண். 1906, 2562, 2564) தமிழ் மொழிபெயர்ப்பாக இந்நூல் இரண்டாம் பதிப்பாக மீண்டும் மலர்ந்துள்ளது.

இந்நூலில் சிந்தூரம், பஸ்மம், லேகியம், ரசாயனம், வடகம், சூரணம், மாத்திரை, குளிகை, தைலம், கடுகு, மெழுகு, கஷாயம், பத்து, கலம்பகம் எனப்பல்வேறு மருந்து வகைகளின் தயாரிப்பு, கட்டுப்படுத்தும் நோய்கள், அனுபானம் எனப்பல பாரம்பரிய மருத்துவச் செய்திகள் விவரிக்கப் பெற்றுள்ளன. இந்திய மருத்துவ முறைகளைப் பயில்வோர், பயிற்றுவிப்போர், நோய்வாய்ப்பட்டோர் ஆகிய அனைவர்க்கும் உதவும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

இதனை அமரர் ஆ. கிருஷ்ணசாமி மாடிக் ராவ் ஸாகேப் அவர்கள் மிக அருமையாகப் பதிப்பித்துள்ளார். அரிய இப்பணி செய்த அவரை நினைவுகூர்வதோடு, இதனைப்

பதிப்பிக்கத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் டாக்டர். குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மா. வீர சண்முக மணி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*16-6-2005*

# PREFACE

Among the many valuable manuscripts in the Sarasvati Mahal Library Thanjavur, dealing with various subjects, there are several manuscripts relating to Ayurveda and Siddha Systems. This Publication, the Second Volume of "Sarabhendra Vaidya Ratnavali" is a Medical treatise on Indian Medicine of Ayurveda and Siddha Systems.

The First Volume of Sarabhendra Vaidya Ratnavali was published in the year 1954 in Marathi as well as in Tamil by the editor of this book. The second volume deals with the remaining recipes and prescriptions that were left out in the First Volume.

It is known from this book that Thiru Muthuswami Dikshitar, Ayyakkannu Pillai, Purushottama Tirthar, Chidambara Vaidyar, Ambalavana Pillai, Babu Vaidyar, Appu Rao, Vattathu Gnaniar, Shake Saheb were the authors of the recipes and prescriptions.

This book is based on the Marathi manuscripts bearing Nos. 1906, 2562, 2564 etc. The manuscripts are written in Devanagari script.

Sri A. Krishnaswami Mahadick Rao Saheb has edited this book in Marathi and Tamil languages with an elaborate introduction. Our thanks are due to him for his valuable service.

Our thanks are due to the Government of India for their timely grants which has enabled us to publish this book from the valuable manuscripts of this Library.

Our thanks are also due to the entire staff of the Library for their co-operation in bringing out this edition expeditiously. The Library Press deserves our appreciation for the neat excution of the work.

We have no doubt that this book will be found very useful to the general public.

Thanjavur,
3-10-81

**D. SUNDARESAN,** I.A.S.
DISTRICT COLLECTOR & CHAIRMAN,
T.M.S.S.M. Library Administrative Committee.

# Sarabhendra Vaidya Ratnavali

VOLUME SECOND

# Introduction by the Editor

## Serfoji Raja's Contribution to Indian Medicine.

Before narrating Serfoji Raja's Contribution to Indian Medicine a word about this present publication appears to be necessary. The present publication and two other previous publications of Sarabhendra Vaidya Ratnavali contain hundreds and thousands of recipes for all kinds of human ailments, and maladies. Serfoji's Contribution to mitigate the agony of diseases are classic. He had under his warm protection numerous physicians who practised the three main systems of Indian Medicine, Ayurveda, Siddha and Unani. He attracted a large following of such Medical Men from for and wide and got them together in his Medical Institution called "Dhanvantri Mahal" Each one of the physician was an expert or a specialist in his own system of Medicine or in some particular disease. They produced not only hundreds of works on Medical Science, but were responsible in preparing valuable and efficacious Medicines of repute as prescribed in ancient books on Ayurvedic & Siddha Medicines. His Unani Hakims or Vaidyas who practiced Unani System of Medicine came from distant parts of India and abroad.

As a result of Serfoji's grand plan, we find in his Library thousands of tested recipes of those talented Physicians written on palm-leaf or paper manuscripts. The Medicines were mostly of Ayurvedic & Siddha orgin, clothed in verses in Sanskrit, Tamil & Marathi languages. For the use of the Marathi speaking people and for the use of his faming Serfoji caused selected tested recipes translated in Marathi, and they are now preserved in this Library, and some such works are also in the chrished possession of several Maratha noble houses. The present work is based on such recipes meant for the use of Maratha people. They contain reference of authors and those who have copied them on the orders of Raja

Serfoji. Most of the translatos were themselves physicians of rare merit. The aim of Serfoji was not merely to serve medical but also non-medical people by introducing to them numerous cheap and efficacious Medicines of indigenous orgin, so that they might use the large number of simple Medical Drugs, herbs, fruits and vegetables "got at little or no cost or collected from fields, roadside or gardens."

Men's effort to subdue pain is that from the begining men resented suffering and resolutly set himself to the task of "vanquishing pain by virtue of his indomitable determination" to find some recipes to reddress or banish the suffering Formula for the ancient & medieval physicians are much less common, and difficult to say which of two systems of Indian Medicines Ayurvedic or Siddah is older, since both are inter dependant. Ayurveda was widly practised in the northern States of India while Siddha is confined to the southern regions, the one consists more of vanaspathi, while the other of arsenic, metallic and mineral derivatives. The fundamental base such as Tridhatu Physiology *(உடல்கூறு)* and the Tridosha Pathology *(நோய்க்கூறு)* are common ground between both the systems. Whatapplies to Ayurveda applies generally to Siddha and Unani as practiced in the south. The renouned Hakim Ajmal Khan Bhadur of Delhi says that Arabian Medicinesare found on Ayurvedic system. To be precise, Serfoji paid a little greater attention towards Siddha system, the main practicing system of the South especialy of the Tamil region. The fundamental principles of Thridosha and Tridhatu are common to both systems. Thridoshas of Vata, Pitha, and Kapha are the three elementary and fundamental units or principles on which the building and substance of the body depend. Hence they are called Dhatus which denotes that they are "supportersof the body". When they are in normal equlibrium body is healthy and when the equilibrium changes it causes ill-health and the state of ill-health is called Dosha or faults. "Pitha, Kapha and Vata are respectively responsible for the vision as opposed to perception which occurs due to Vayu. This is understood by Nidhana which goes into the root cause of diseases, and offers clue to diagnosis of diseases." Prognosis *(முன்குறி)* proceeds diagnosis

(ரோகநிதானம்) and it appears even before the disease sets in right earnest, and this leads one to arrive at Samprapti or pathology (நோய்க்குறி). Thereafter one knows in what strength and stage the disease is, whether severe, moderate or mild type. The Siddha Munis or Rishies who enunciated the Siddha system of Medicine, from time immemorial have practised this art of healing in the South. Sage Agastia for all practical purposes can be said to be the proginator of this system. The word Siddha indicate one who had attained beatification & supreme state of Siddhi or fulfilment or have attained enlightenment. No wonder Serfoji's Collections called Attavanais and other works in Southern langue are one of the Siddha base. Naturally the Marathi verson of such books are mostly of Siddha orgin. The Ayurvedic part of the work are slightly less, The Bheshajapragna or knowledge of Drugs and Diseases of the Physician are colossal.

The present publication consists of Medicaments for various diseases, their 'Nidhana' or Diagnosis and Owshadhis or Medicines (Pathologya). Hundred's of recipes for Athisaras of various types (Diarrohea), Ama Athisara (Dyscentary) and their species, similarly Aruchika (Anorexia, loss of appetite), Shula (Colic Pain), Panduroga (Anemea), Chayaroga (Pithisis), Arsa (Piles), Chardhi (Cough and Cold), Thrshna (Thirst), Murcha (Fainting), Daha (Body burning), Vata Vyadhi (not Vayu but Nervous Diseases), Mukhavarta (Hemaflagia Facial Paralysis), Amavata (Rhematism), Kushta Vatavakta (Leprosy) Amlapitta (Dispepsia, Acidity), Sopha (Swelling), Jalodhara (Asites, Dropsy), Prameha (Urethral Discharges, Gonorrehea), Muthra Krichra (Dysuria, Strangury), Asmari (Stone in Bladder, Kidney & Gall), Vrshna Roga (Scrotum or Testis Diseases), Visarpas (Ericipalas), Netraroga (Eye Diseases), Vajikarana (Dhatu Pushti, Virility), Balaroga (Paedeatrics) Asthibhagna (Bone Fracture, Dislocation), Aghadhaga (Burns), Swasakasa (Asthma, Striroga (Pradaravarta etc.), Vishpota (Boils), Gulmam, Raktagulman (Cancer), Vibhrama Janni (Diliriem) Bhagandara (Fistula), Sukra (Gonorrehea), Raktapitta (Hemorrage) Yekathala Udhara (Hepatetis), Kavila (Jaundice), Jwara prakarana Udhara (Hepatetis) Kavila (Jaundice) Jwara prakarana (Varieties of Fever), Penasi (Ozaena, Penisam,

Obstruction of the Nose), Nasal (catarrahae), Hikka (Hiccough), Raktarsa (bleeding Piles), Nadi Vrana (Sinus); Vrana (Wounds), Apasmara (Epilepsy) Vamana (Vomit), Urusthambah, Hridhroga (Heart Disease and Palsy), and several other dieases like Tetanus, Diabetes & Scabbes are given. Medicines prescribed for the diseases are classified similarly into Sinduras (Atomised Powders) Bhasmas (Powders through firing process), Lehya (condiments), Avaleha (Semi-solid condiments Churana (Powders), Kwath (Infusion) Samankari (Sedatives), Virecchanas (Laxatives, Purgatives) Raktasthanakari (Blood Coagulents), Bhavatantras (Tinctures), Liniments (Ex tracts), Tailas (Medicated Oil), Grta (Ghee), Gulikas, Mathras ( Pills, Dragees), Lepa (Pastes and Poultices), Molama (Plasters) and several kinds of Medicines.

Our Rishies & Saints who have written Medical Sciences knew that most of the Drugs, including those of vegetable origin have both beneficial as well as bed effects when administered individualy or in combination with other Drugs. They have efficient knowledge of Taxicology and knew which of such Drugs are useful to mankind, and devised method of eliminating such toxins and tranquilise their virulence or malefic effects when administered with other Drugs. Their method of Sedation or elimination of poisonous effects are known as Suddhi process a purification method. It is a common knowledge that Arsenics, Mercurial, Metallic and other Drugs of vegetable orgin are highly toxic and at the same time effective on varulence and to retain their benefical poteney. Herein are given some common method of purification of Drugs before they are added to the recipes.

As regords the cheapness, efficacy, and availability of Indian drugs Dr. Col. G. T. Brodwood I. M. S., in his book on "Bazaar Medicines (1926)" says that there is no question that the Indian medicine obtained in bazaar is much cheaper than European medicines". If bazaar medicines are used intelegently, have sufficient practical range to meet most of the maladies". Dr. Harold Brown I. M. S. of Calcutta says that there are a great many idigenous drugs of extreme utility but little known to students of western medicines. The tendency of the students to go blindly

after foreign drugs of recent production than looking into their own system of medicines which contain most potent and effective drugs". How phophetic and true, after the passage of 60 years, is the statement of this talented I. M. S. Doctor made in the year 1920. How true is, even to find, that our bazaar medicines are by far cheaper than Allopathic patent drugs. It can not be denied that to Indians who Re brought up onIndian soil, food, claimate and Indian habit of life, temprament mainly to suit European constitution built up on their peculior food, climate, habit, manners of life. This may perhaps be the reason why in numerous cases, where Allopathic treatment fails, indigeneous system of medication succeed. In October 1918 in the "British Medical Journal" Sir Havelock Charles, Col. King of Madras, Dr. Turner of Bombay says that "the longer we live in India, the more we learn that the westhas still much more to learn from east & particularly from India." Therefore we can feel that the Europen education of Serfoji & his employment of several European Doctors in his court and in some of his hospitals (Arogyashala), did not have any effect on him, since he had in his employment very large number of native physicians who left immortal records of their experience as practicing doctors in Serfoji's employment. It will convince one to conclude that one & half centuries ago Serfoji was swept away by the feeling of swadeshi which excited him to give more patronage & protection to Indian vaid & Hakins than any other system. But when Indian medicines failed, he did not fail to seek the help of European doctors. Influence of western physicians, as also his early education under Rev. Gerik & his association did not deter him from patronising Indian medicines & medical men. There are varius records in Modi showing details of expenses incurred in sending several of his native doctors to Madras & such other places to treat European and natives alike where allopathic drugs have failed. Modi Records also contain numerous medical prescriptions.

**Serfoji Raja & his Dhanvantari Mahal**

On 22nd January 1786 Raja Tulajaji (adoptive father of Serfoji) having no male issue decided to take in adoption 11 year old Serfoji son of an agnate Accordingly with all pomp & splendour

he adopted Serfoji on 20th January 1786 and put boy Serfoji under the regency of his illegetimate brother Amarsingh & under the wardship of one Danish missionary Rev. Swartz. After Tulajaji's death on 31-1-1786 the regent Amarsingh chose to usurp the throne for himself on 2nd April 1786 and thus Serfoji had to face a life of incarceration and humiliation for some years which led to Serfoji's removal to Madras by Britishers on the entreaties and pleadings of Rev. Swartz & of the then Resident Mr. Ram to the British at Madras. He was accomodated in a spaceius building in Black Town with proper arrangement for his education under Rev. Germick. Later the British realising the mistake of having permitted Amersingh to usurp the throne, restored Serfoji on his ancestral seat on 22nd June1978 amidst great rejoicing and he ruled till 1832. The stay with British grately influenced the moulding of his charactor. It was from then he got his love of foreign language and literature, and became highly accomplished and a linguist. He was proficient in Sanskrit, Telugu, Tamil, English and Marathi besides french, Greak, Latin and German. He acquired great passion for collecting books and manuscripts dealing with various subjects, which grately grew, with the passage of years and his Library was the richest and rarest collection in the world if not in bulk. While studying at Madras, he was also provided with native education. The meeting of the western and eastern currents of thought, provided for-reaching effect on the development of his life. He carefully made a judicious selection of the best in both culters and guarded and enriched the ancient heritage of eastern culture assiduously cultivated by his famous ancestors particularly Rajah Shahaji, whose reign was a golden period of Rajah Shahaji; whose reign was a golden period of literary upleavel. Serfoji's ambition was to combine all that was best in the cultures of the east and west so as to be beneficial to him as well as to the future generation; and it is this synthesis of oriental and accidental cultures and systems in music, education, and medicine that gives him an unique place among scholars and Kings.

Like his famous ancestors who were uniformly & highly cultured and accomplished scholars, he patronised music, dance, drama, and several arts & sciences. His work in varius languages

on variegated subjects, are too many to be compressed in this introduction.

For purpose of this publication, suffice it to restrict his contribution to only his services towards the advancement of Medical Science. His interest in medicine did not stop with his effort to subdue human suffering from diseases, but also to find effective remedies for diseases of animals like Elephants, horses & Cattle, not to speak of birds, hunting Falcon, and trained leopards. He himself has written on Elephantoleogy (Gaja Shastra Bhasha Prabhandha). Three sanskrit works and fifteen marathi works on the subject of drama, dance & music are attributed authorship. His musical compositions are by for the bestand hailed as marvellous by modern Scholars. He set classical Indian ragas to English notation capable of Orchestrisation. He was the father of Carnate Band or orchestra cansisting of Carnatic musical instruments and some English instruments like clarionet., violin, and saxophone. His orchestra was highly praised by both Western and Indian musicians. His Bhratanatya pieces are marvellous. They were composed in Marathi for the benefit of the Maratha public, retaining carnatic ragas and talas, replacing Tamil & Telugu Sahityas by Marathi Sahityas. A century and half after Serfoji's death the people of Maharashtra have realised the greatness & utility of Bharatanatya in Marathi which retains all the characteristics of Carnatic Bharatanatya, and they have shown keen interest in such Marathi pieces. Today one can find a number of dance institutions in Maharashtra teaching Bharatanatya in Marathi. What realy Serfoji wished to achieve 150 years ago, have now come to fruition. Several hundreds of songs composed by Serfoji in Marathi for Bharatanatya, set to carnatic ragha & tala can be seen in his Library.

His contribution towards advancement of Indian Medicine was so effective and comprehensive that one is amazed how one man was capable of making such vast and searching study with such fruitful result.

His Central Medical Institution known as "Dhanwantri Mahal" (named after the divine master-physician Dhanwantri) looked after the medical needs of his people. In it, he assembled distinguished physicians and surgeons from far & wide who worked togather with zeal, as one team and eontributed their knowledge and practical experience by recording the result of their researches in the shape of numerous "Attavanais" or list of Recipes for specific diseases. In order to memorise easily, such prescriptions, Serfoji asked his physicians, who were poets by themselves, to write them in verses. Such receipes in Tamil & Sanskrit were in turn translated into Marathi by Marathi physicians & poets for the use of the Marathas & for the use of the Marathas & for Raja's personal use. They were known as "Anubhoga Vaidya Bhaga" which in turn means receipes tested by experience. He not only caused them to write down such medical works but made them prepare efficient & famous medicines of Siddha & Ayurvedic origin. Certain kinds of Sinduras & Bhasmas were compressed by a special process, called kattu process, into unbreakable tables with the names of the medicine & year imprinted on them. The tablets or the dragees were of such high density that they have to be rubbed with some liquid like ghee or honey on a stone plater. Such kattu medicines of Serfoji times can still be seen in the Library as also in some old Maratha families. Famous medicines like Vasanta Kusumakaram, Swarnamalika Vasantham, Rajamrigankam, Maharajamrigankam, Panchamrutam, Rasabhupathi, Hemabhupathi, Kanakasundara Rasa, Panchamuthi, Triloka Chintamani, Kalakanta, Sahasraputa Abraka and other sophisticated condiments, Infusions, pills, plastets were manufactured at Dhanwantri Mahal for free distribution to several rural & urban hospitals called Arogyasalas and for the personal use of Raja Serfoji's family. Sindhuras, Bhasmas and kattu Matras are said to retain their potency for over 500 years.

To facilitate easy manufacture of such drugs he established several herbariums, and directed his court painters & artists to reproduce in true - to - life colours such of the plants that are of real medicinal value for easy identification by lay people.

The physicians employed in this Institution belong to various castes & creeds. Some wrote down in Sanskrit while others wrote in Tamil. These manuscripts bear the names of the authors & the name of their partron Serfoji and the dates of completion. The Marathi physicians translated them into Marathi from Sanskrit & Tamil. It is such manuscripts & many more of Serfoji's time provide the basis for this book. Many manuscripts appear to have been copied by lay-people as a result the Marathi langue used is not erudite & some words bear peculiar pronounciation. In order not to mar the originality of the manuscripts, the original version as they are found are published. The scribes have used wrong Varnasamaskaras, Dhirgha and Hrswa words (Long & Short words) are negligently handled. Hence the readers will rather look at the substance than embelishments of sytaxes etc, like the legendary swan which seperates water from milk. Serfoji clllected a large number of manuscripts on medicine & other branches of learning during his wide travels all over India. He purchased at great cost hundreds of manuscripts and gotmany copied which cannot be acquired; as a result his Library contains the best & largest single collection of manuscripts on medicine. His largest collection on medicine. His largest collection on medicine is in Tamil and is next only to his Sanskrit collections. Marathi manuscripts are mostly translations of either Tamil or Sanskrit manuscripts some rare & original works & in Marathi are also available.

Some rare and ancient works on medicine in Sanskrit are Vagbhatta's Ashtanga Hrudaya Vyakhya & Padartha Chandrika, Vararuchi's Ashtakarma Sthanam , Arundatta's Sarvanga Sundari, Hathakanka's Ashtanga Hrudaya Dipika, Suashenas Ashtanga Mahodadhi, Varahamihira's Uthpala Parimala, Tulaja Raja's (Serfoji's great-grandfather) Dhanvantri Sara Nidhi and Dhavantari Vilasa, Bhoja's Mela Samhita, Mahadeva's Madhava Nidhana, Bharadwaja's Bheshaja Kalpa, Lolimbaraja's Vydhya Jivanamu, Suaruta's Susruta's Susruta Samhita, Shiva's Malika Prakarana, and many more manuscripts of this kind are his collections.

Next to Sanskrit medical manuscripts Tamil medical manuscripts take the second place. The works of Agastiyar, ABhrahma Muni, Theraiyar, Mastsya Muni, Yugi Muni, Tirumoolar, Konganar and a number of saints. Besides works on medicine there are works on Alchemy and Aphrodiacc Raja Pratap Singh grandfather of Serfoji has written Madana Sanjivana (Science of erotics), and quite a good number of manuscripts on veternary sciences.

He was not content only with collecting such works, but sincerly wished to have them printed for widespread distribution to the people. During his time there were not much lead types, but he got them imported from England & some Stone types; were used to imprint on paper in his printing press "Navavidya Kalanidhi Varnayanthra Sala". Those were days when printing in Indian languages was not widely introduced in india. It is thirty years after Serfoji Raja had started printing his books in Indian languages, similar works were undertaken in other parts of India. Unluckily before his ambition fruitioned he was called to eternal rest. Had he survived some more years, he would have set the noblest example by speeding up rinting all ancient works in several languages for the use of posterity. It is sight to see those stonetype printed books of Serfoji preserved in his Library.

He did not stop with this. He ran several hospitals (Arogyasala) in his domainunder expert supervision of both Indian and Europeon Doctors where not only free treatment was given, but the patients, when discharged, were given some cash to have proer diet. The case records maintained in such hospitals can be seen even today in Sarasvati Mahal Library.

In addition to his collection of Manuscripts in native languages, he secured for his Library almost all the latest publications on Medical Science in English on various subject especially on Medicine, Surgery, Botany, Anatomyand Veternary Science. He was a member of the Royal Asiatic Society, Royal Geographical Society of England and Similar Societies functioning in Calcutta, Madras and Bombay and contributed liberally for

their Reviews, Jornals and Magazines. Pictorial Books on Anatomy were collected and they were either translated or reproduced in Marathi Language. His collection on Veternary Science are also of rare value. Ancient Rishies like Palakappiarishi auther of Gaja Sastra (Elephantology), Shalihotra's Aswa Shastra (Veternary Science on horses), and books on Cattle, Hunting falcons (Bajnamah) and Leopards (Yujanamah) with their diseaser and treatment were collected at great expense. Works on Veternary Science in Sanskrit and Tamil were got translated in to Marathi by his court poets.

His activities in the field of Music, Bharathanatya, Drama, Religion, Charity and Archeitcture are legions and too many to be abridged in this short introduction. Therefore the introduction is confind purely to the services rendered by Serfoji for the cause of Medicine. His Library consists of 90 percent his own collections and the rest by his equally illustrious ancestors Raja Pratapsingh, Raja Tulajaji and Raja Shahaji, and that of the Nayak rulers who preceeded the Marathas. His son Shivaji the last rular of Thanjavur (Great grand-father of the Editor) who is also a talented scholar has further added very valuable Collections to this Library left by his father Raja Serfoji.

Modi Records preserved in this Library will reveal hundreds of references regarding purchases of manuscripts and expences incurred for acqusition or for copying some, which could not be acquired or purchased. Details of salary paid to copyists and amount paid for acquiring rare works are systematicaly recorded in the accounts maintained in Modi scripts, since Modi was the official script of Maratha Court. These records will throw considerable light on the social, cultural and adminidtrative activities of succesive Maratha rulers of Thanjavur.

The services of Serfoji Raja to the people of the South is beyond assessment and he has left his imprint in every sphare of social and cultural life of /south India. Perhaps his contribution to the whole of India is his formidable Library. In it be assembled thousands of manuscripts in palm-leaf and paper dealing in all

branches of study and prosterity owe tramendous debt to this farsighted and sagacious scholar-King Raja Serfoji. But for his shrewdness, thousands of rare and valuable works would not have been available to the public.

Several legacies and mementos of Maratha influence and rule over South India have vanished into thin air but Serfoji's Library stands as an imperishable and ageless monument of benevolent rule of the Maratha Kings who identified themselves with the people of the land they ruled over and merged one with them.

Another significant legacy left by Serfoji is his inscription on the walls of Sri Brahadeeswaraswami Temple. He proved himself to be a realist and that time is the destroyer of dynasties, cultures, kingdoms and infact nothing is a sure match before 'Time'. Knowing that many things he leaves behind are of transitory nature and hence he rightly wished to record the history of his dynasty and their achivements and bounties conferred on the people of the South, in stone inscriptions on the walls of Sri Brahadeeswaraswami Temple. Thanjavur has seen rise and fall of many dynasties and empires and there are little or no trace of the founders of these dynasties or their achivement, but Raja Serfoji's magnificient Library at Thanjavur and the great Emperor Rajaraja Choladeva's coladeva's colossal Big Temple, will be eternal and serve as reminders of their greatness and large-heartedness and devotion to their people. May the name and glory of Serfoji and Rajaraja live long.

# Sarabhendra Vaidya Ratnavli

VOLUME SECOND

## BIBILIOGRAPHY


| S. No. Title | Author |
|---|---|
| 1. Maharashtra Sabdhakosa | - Joshi Publications, pune |
| 2. Indian Materia Medica | - Dr. N. D. Nadkarni |
| 3. Indian Materia Medica | - Dr. Jagannatha Naidu |
| 4. Marathi Bhavaprakash | - Sri Tulpule of Bombay |
| 5. Gunapadam - Tamil | - Sri Murugesa Mudaliar |
| 6. Yugimuni Vaidyachintamant's | - Yugimuni |
| 7. Sarabhendra Vaidya Ratnavali (Marathi - Part I) | - A. Krishnaswami Mahadik Rao Saheb |
| 8. Sarabendra Vaidya Ratnavali (Tamil - Part I) | - A. Krishnaswami Mahadik Rao Sahib |
| 9. Gunmarogha Chikitsa | - Dr Venkatarajan |
| 10. Indian Medicine | - Dr. Lakshmipathi |
| 11. Indian Bazaar Medicine | - Dr.B. T. Birdwood, I. M. S. |

# EDITOR'S PREFACE

The present publication is the Second Volume of Sarabhendra Vaidya Ratnavali a medical treatise dealing on Indian Medicines of Siddah and Aurvedic systems of Medicine. In the year 1954 two volumes of Sarabhendra Vaidya Ratnavali were published seperatly in Marathi and Tamil by the Library, and edited by the editor of this volume. It is now suggested that a publication of a second volume of Sarabhendra Vaidya Ratnavali with the remaining recipes and prescriptions that were left out from the first two publications, will be useful. Hence the present work is taken up to complete the series. The original manuscripts referred to in this work are all paper manuscripts bearing numbers No. 1906, Ara 250; No. 2249, Ara 307: No. 1913, Ara 250; Nos. 2014, 2242, 2012, 1916, 2558, 1906, 2558, 2560, S. No. 1 and many others. This volume is also based like the previous ones, on Marathi originals, and the Tamil verson given here are translations of Marathi originals. Two other works of immense value in Marathi of Serfoji Raja's times and campiledon his orders in the year 1824 are of real help in editing this work.

All these Marathi manuscripts are meant for the use of Marathi speaking people of the south as is evident from Tamil names used to denote several Drugs in Marathi script. Great care is now taken to give appropriate equalentns in Marathi for Tamil words and Tamil equqlents for Marathi names in this publication. Similarly tables of weight, measures and other details about atomising by means of "Putas" (firing process) and other methods to reduce the medicines to finest texature as well as to reduce the medicines to finest texture as well as to reduce the virulency of arsenics, Metalic & mineral Drugs. Great effort and pain is taken to see that, as for as possible, the receipes and prescriptions published in Marathi and Tamil volumes are not repeated h here.

In the introduction to this work I have dealt at some length the contribution of Raja Serfoji for the advancement of the three Indian systems of medicines, namely Ayurveda, Siddha, and Unani.

Iam greatly indebte to Doctor J. K. Raje Mahadik R.I. M. P. a renowned native physician and a close relation of the Raja's family for having perused this work and offering timely suggestion and advice while editing this work, and lending some of this precious medical manuscription for colating with the manuscripts of the Library.

My thanks are duc to Sri D. Sundaresan, I. A. S., District collector & chairman of the Administrative Committee of this Library, Sri M. Marudamuathu B. A., B.L., District Judge and Member, Srimanth Tulajendra Rajah Saheb Chatrapathy, Donar and Life-Member, Sri P. Jayaraman, B. A., B. L., Advacate and Member for their encouragement and help in bringing out this publication.

I am also greatful to Sri M.N. Sivaraja Dixitar, Curator of this Library, Sri Parswanathan B. A., Administrative Officer, Sri Panchanathan, M. A., B. Lib. Sc., and Sri T. R. Bhima Rao Goswami, Marathi Pandit for their co-operation.

Finaly I cannot fail to pay my homage and reverence to Raja Serfoji my illustrious ancestor and the archetect of this world renowned Library.

Thanjavur
24-10-80

**A. KRISHNASWAMI MAHADIK,**
Guest Editor & Editor of this work.

# சரபேந்திர வைத்திய ரத்னாவளி

(இரண்டாம் பாகம்) பக்க எண்.

## பொருளடக்கம்

### சிந்தூரம்

அப்பிரகச்சிந்தூரம் விசேட முறை - 1
கிருஷ்ணாப்பிரகச் சிந்தூரம் - 2
மூர்தார்சிங்கு சிந்தூரம் - 4
அயகாந்த சிந்தூரம் - 4
லோஹ அய சிந்தூரங்களின் அனுபானங்கள் - 7
தண்டவாளச் சிந்தூரம் - 8
காலகண்டடேக நாராயண சிந்தூரம் - 10
அக்னிகுமார் சிந்தூரம் - 14
பிரமத [illegible] குச ரசச் சிந்தூரம் - 15
லகுஹயவங்கச் சிந்தூரம் - 16
சகல ரோகத்திற்கும் வங்ககுரு சிந்தூரம் - 17
வெடி உப்பு சுண்ணச் சிந்தூரம் - 18

### பஸ்மங்கள்

கோமூத்திர சிலாசத்து பஸ்மம் - 19
வங்க பஸ்மம் (வேறுவிதம்) - 19
வங்க பஸ்மம் (மற்றும் வேறு முறை) - 20
கருவங்க பஸ்மம் (வேறுவகை) - 21
நாகபஸ்மம் - 21
சுவாச குடோரி பஸ்மம் - 22
தாமிர பஸ்மம் - 23
தாமிர பஸ்மம் (வேறுமுறை) - 24

## 24லேகியம், ரசாயனம், வடகம்


மகாவில்வாதி லேகியம் - 24
இலகு வில்வாதி லேகியம் - 25
கண்டங்கத்திரி லேகியம் - 26
தசமூலாதி லேகியம் - 27
மன்மத சிந்தாமணி லேகியம் - 27
மன்மத சிந்தாமணி மேவா (இனிப்பு) - 29
மகாவில்வாதி லேகியம் (வேறுமுறை) - 30
குண்டலாதி லேகியம் - 32
அஷ்டசிஞ்சாதி லேகியம் - 33
பல்லாதிக ( சேங்கொட்டை) லேகியம் - 34
பல்லாதிக ( இரண்டாவது முறை) லேகியம் - 34
பல்லாதிக ( மூன்றாவது முறை) லேகியம் - 35
பல்லாதிக ( நான்காவது முறை) லேகியம் - 35
பல்லாதிக ( ஐந்தாவது முறை) லேகியம் - 36
பரங்கிப்பட்டை லேகியம் - 37
மதுஸ்னுஹி லேகியம் - 37


**ரசாயனங்கள்**


மகாபல்லாதக ரசாயனம் - 39
மதுஸ்னுஹி ரசாயனம் - 40
குக்குலாதி ரசாயனம் - 41
கந்தக ரஸாயனம் - 41
குஷ்டத்திற்குக் கந்தக ரசாயனம் - 42


**வடகம் கூடபாகம் (வெல்லப்பாகு)**


வாய்விடங்க நெய் - 42
சித்திரககுடபாகம் - 43
தாலிம்பாதி வடகம், மாதுளை வடகம் - 43
கண்டாத்ரிகாதி வடகம் - 44
வசாகண்டம் செய்யும் விதம் - 45
ஜம்பீர கடுகு - 45

### சூரணங்கள்


| | |
|---|---|
| தாதுபுஷ்டிக்கு மாதுளை விரைச் சூரணம் | - 47 |
| பூவரசுகாயிலுள்ள விழுதின் சூரணம் | - 47 |
| பற்களின் ரோகத்திற்குச் சூரணம் | - 47 |
| தாக்ஷிணா பல்பொடி | - 48 |
| சுவாசகாச விக்கலுக்குச் சூரணம் | - 48 |
| பித்தத்திற்கு நெல்லிப்பானகம் (சூரணம்) | - 48 |
| சரீர சுகத்திற்கு சங்கவேரின் சூரணம் | - 48 |
| கோதுமை சூர்ணம் | - 49 |
| சுக்கு சூரணம் | - 49 |
| கீழாநெல்லிச் சூரணம் | - 49 |
| மேகத்திற்குச் சூரணம் | - 50 |
| சீனா கல்கண்டு சூரணம் | - 50 |
| சோழிச்சுண்ணம் | - 50 |
| மஞ்சள்காமாலை நோய்க்குச் சூரணம் | - 50 |
| குவத்துக்குச் சூர்ணம் | - 51 |
| பாருஷகாதி சூர்ணம் | - 52 |
| கிராணிக்கு உடும்பின் சூர்ணம் | - 52 |
| பிருங்காதி சூரணம் | - 53 |
| புஷ்பானுக சூரணம் | - 54 |
| நெக்ரோதாதி சூரணம் | - 54 |
| சர்தி (வாந்தி) ரோகத்திற்கு ஏலாதி சூரணம் | - 54 |
| ஸம்ஸக்த சூரணம் | - 55 |
| கருவேப்பிலைச் சூரணம் | - 56 |
| சீந்தில்கொடிச் சூரணம் | - 57 |
| சீனபாக சூரணம் | - 57 |
| வாதராக்ஷச சூர்ணம் | - 58 |


### மாத்திரை, குளிகை வகைகள்


| | |
|---|---|
| கிராணி கபாடகம் | - 59 |
| விரேசனத்திற்கு உருண்டை (பேதிக்கு) | - 59 |

(வெண்கல) சஞ்சீவி மாத்திரை - 60
வாதராக்ஷஸ மாத்திரை - 60
ஆபத்தாரண மாத்திரை - 61
விஷபூபதி மாத்திரை - 61
சுராங்குச மாத்திரை - 62
சர்வசுராங்குச மாத்திரை - 62
தேங்காய் மாத்திரை - 63
ரசபூபதி மாத்திரை - 64
குன்மகுடோரி மாத்திரை - 66
சூலைகணகுடோரி மாத்திரை - 66
ஆனந்தபைரவ மாத்திரை - 67
பூர்ணசந்திரோதய மாத்திரை - 67
அர்த்தநாரீஸ்வர மாத்திரை - 68
காலானந்த வாதராக்ஷஸ மாத்திரை - 68
உருக்கு வாதராக்ஷஸ மாத்திரை - 69

## தைலம், கடுகு வகைகள்

மஹாசந்தனாதி தைலம் - 69
இலகு சந்தனாதி தைலம் - 69
மேகத்தினால் உண்டாகும் சகல மேகவியாதிக்கும் தைலம் - 71
எலும்பு முறிவுக்கு எண்ணெய் - 72
விரணத்திற்கு சிவப்பு எண்ணெய் - 72
விரணத்திற்கு எண்ணெய் (மற்றொரு விதம்) - 72
கணத்திற்கு எண்ணெய் - 74
உஷ்ணகாந்திற்குக் கற்றாழைத் தைலம் - 74
நீலி எண்ணெய் (கர்ப்பவதிகளுக்கு) - 75
லாக்ஷா தைலம் - 75
தலைமுழுக இலந்தைத் தைலம் - 76
சாம்பிராணித் தைலம் - 77
பூண்டுத் தைலம் - 77
கந்தகத் தைலம் - 78

ஸ்நானத்திற்கும் - தலைக்குத் தடவவும் - 78
கணை எண்ணெய் - 79
மேகனாதி தைலம் - 80
மஞ்சட்காமாலைக்கு (விருகங்கிழங்கு) தைலம் - 81
ஐந்துவித தைலம் - 81
சுடர் தைலம் - 82
நொச்சித் தைலம் - 83
வெள்ளருகுத் தைலம் - 85

## நெய், மெழுகு வகைகள்

ஜீவந்தி நெய் - 86
பல்லாரி கீரை, நெய் - 87
கல்யாண நெய் - 87
மூல வியாதிக்கு நெய் - 89
புளியாரை நெய் - 89
அருகம்புல் நெய் - 90
மகாதிக்த நெய் - 91

## மெழுகு வகை

18 வித குட்டங்களுக்குக் கந்தக மெழுகு - 91
பஞ்சரத்தின மெழுகு - 92
திருவிக்ரம மெழுகு - 93

## கஷாய வகைகள்

தனுர்வாயு கஷாயம் (திமிர்வாதம்) - 94
வத்ஸகாதி கஷாயம் - 94
ஆடாதோடை கஷாயம் - 94
பேறாமுட்டி கஷாயம் - 95
விளாமிச்சை வேர் கஷாயம் - 95
கோஷ்டாதி கஷாயம் - 96
திரிபலாதி கஷாயம் - 96
கண்டங்கத்திரி கஷாயம் - 96

தான்யாதி கஷாயம் - 97
சதுர்தசாங்க கஷாயம் - 97
அஷ்டாதசாங்க கஷாயம் - 7

## பிளாஸ்திரி, பத்து

மஞ்சள் பிளாஸ்திரி - 97
வெள்ளை பிளாஸ்திரி - 98
பச்சை பிளாஸ்திரி - 98
சிகப்பு பிளாஸ்திரி - 99
கருப்பு பிளாஸ்திரி - 100
காயம், புண் ஆறுவதற்கு மஞ்சள் பிளாஸ்தி - 100
பத்து, வகைகள் - 100
கட்டி, சிரங்கு, புண் முதலியவைகளுக்கு
மேலே போட துவளை - 101
வாயுகட்டிக்கு லேபனம், பத்து துவளை - 101

## கலம்பகம் (பிரகீரணம்)

தாம்பிரகிண்ணி பதங்கம் - 102
ஒரு மூலிகையின் பிரயோகம் - 102
இலிங்கம் கட்டும் விதம் - 102
இலிங்கத்தைப் பொன்னிறமாகச் செய்யும்முறை - 103
பாதரசத்தினால் வாய் வெந்ததற்கு கொப்பளிக்கத் தண்ணீர் - 105
புடபாகம் - 105
மாதுளை புடபாகம் - 105
வெட்பாலைப் புடபாகம் - 106
ஏலாதி குடிகா - 106
பஞ்சலவணம் (ஐந்துப்பு) - 106

## சுத்தி முறைகள்

தாமிர சுத்தி - 107
கருவங்கம், வெள்வங்க சுத்தி - 107
இரசகற்பூரத்தின் சுத்தி - 107

இலிங்கசுத்தி - 107
இரசச்செளவீரத்தின் சுத்தி - 108
மனோசிலை சுத்தி - 108
சிவதையின் சுத்தி - 108
எட்டியின் சுத்தி - 108
கௌரீபாஷாண சுத்தி - 108
முர்தார்சிங்கின் சுத்தி - 108
வத்ஸநாபியின் சுத்தி - 108
துருசு சுத்தி - 109
நேர்வாளத்தின் சுத்தி - 109
சேங்கொட்டையின் சுத்தி - 109
வெங்கார சுத்தி - 109
பொட்டுலுப்பு சுத்தி - 110
குங்கிலிய சுத்தி - 110
பூரத்தின் சுத்தி - 110
தாளகத்தின் சுத்தி - 110
லோகபொடி - 110
எடை, அளவு, பரிமாணம் முதலியவற்றின் விளக்கம் - 111
எரிப்புத் திட்டம், புடம், இயந்திரம்
இவைகளின் அட்டவணை - 111



# ஸ்ரீ சரபேந்திர வைத்ய ரத்னாவளி

## சிந்தூர வகைகள்

### அப்பிரகச் சிந்தூரம் - விசேஷமுறை

(அய்யாக்கண்ணு பிள்ளை)

நவனீதம் செய்த அப்பிரகம் ¼ சேர், ஊசிக்காந்தம் 3 பலம் இவ்விரண்டு மருந்துகளையும் கல்வத்திலிட்டு காடிவிட்டு 4 சாமம் அரைத்து, வில்லைத்தட்டி, வராகபுடத் தீயினால் மறுபடியும் அதை எடுத்து காடியில் 4 சாமம் அரைத்து வராகபுடம் போடவும். எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று புடங்களும், முள்ளங்கிச் சாற்றில் 5 புடமும், நாவல்பழச்சாற்றில் 5 புடமும், அதன்பின்பு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு மூன்று புடமும், ஆலம் விழுதின் சாறுவிட்டு 5 புடங்களும், மறுபடி எலுமிச்சம் பழச்சாற்றில் 3 புடமும், வெங்காயச்சாறுவிட்டு 5 புடங்களும், அந்திமல்லிக் கிழங்கின் சாற்றில் 20 புடமும், பிறகு எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு புடமும் இவ்வாறு 52 புடங்களும் வராக புடத்தீயினால் எரிக்கச் சிந்தூரமாகும். இவ்விதம் புடம்போட்ட சிந்தூரத்தில் தளுக்கு (ஒளி) இருக்காது. ஆயிரம் புடம் போட்ட சிந்தூரத்திற்குச் சமமான சிந்தூரம் ஆகும்.

***இம்மருந்தினால் தீரும் நோய்கள் :*** 21 மேக நோய்கள், ஜலமேகம் 21 வகைகள் தீரும்.

***இதற்கு அனுபானம் :*** வெண்மேகத்திற்குக் கீழாநெல்லியின் வேரை அரைத்து அரைக் கழற்சிக்காய் அளவு எடுத்து, அதில் அதே அளவு வெண்ணெயும் கலந்து, ½ வராகனெடை அப்பிரகச் சிந்தூரத்தையும் கூட்டி இருவேளையும், ஒரு மண்டலம் வரையில் சாப்பிட்டால் சுக்கிலமேகம் 21 வகையும் தீரும். ஜலமேகத்திற்கு அனுபானம். சீந்தில்ச் சர்க்கரை 1 பணவிடை, வெண்ணெய் 1 வராகனெடை, அப்பிரகச் சிந்தூரம் 1 பணவிடை இவைகளைக் கலந்து ஒரு மண்டலம் (நாற்பது நாட்கள்)வரை இருவேளையும் கொடுத்துவந்தால் 21 வகை ஜலமேகங்கள் தீரும். இதற்கு இச்சாப்பத்தியம்.

## கிருஷ்ணாப்பிரகச் சிந்தூரம்

### (புருஷோத்தம தீர்த்தர்முறை)

கொள்ளுக்கட்டு, வடிகட்டி ஒரு பாத்திரத்தில் எடுத்து வைக்கவும், கிருஷ்ணாப்பிரகக் கட்டியை கொல்லன் உலையில் துருத்தியால் ஊதியதும் சிவந்த நிறம் வந்ததும் கொள்ளுக்கட்டில் போடவும். பிறகு எடுத்து உரலிலிட்டு கடப்பாறையால் இடித்துத் தூள் செய்துகொள்ளவும். பிறகு கெட்டியான துணியை இரண்டு கம்பங்களிடை அகலமாகக் கட்டி, அதில் இடித்தத் தூளை சிறிது போட்டு நெல், உமிக் கலந்து நன்றாகத் துணிமேல் தேய்க்கவும். துணிக்கடியில் ஒரு பாத்திரத்தை வைத்துத் துன்னியதாக விழும் அப்பிரக விழுதை எடுத்து நீரை மட்டும் வடித்து, அத்தூளை வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும். பிறகு எடுத்துக் கல்வத்திலிட்டு வெண்மை அல்லது சிவந்த நிற அம்மான் பச்சரிசியின் சாற்றை எடுத்துப் போட்டு கைவிடாமல் 8 சாமம் அரைத்து, சிறுசிறு வில்லைகளாகத் தட்டி வெயிலில் உலர்த்தி, பூமியில் பள்ளந்தோண்டி, அதில்கஜபுடத்துடன் முறைப்படி தீயிட்டு எடுத்துப்பார்த்தால் நிச்சயமாகச் சிந்தூரமாயிருக்கும், இச்சிந்தூரத்தை சகல மருந்துகளிலும் கலந்தும் கொடுக்கலாம். தனியாக 1 வராகனெடை தேனிலும் சிந்தூரத்தைக் கலந்து இருவேளை சாப்பிட சகல வியாதிகளும் தீரும். மாதுளைப் புடபாகத்திலும் சேர்த்துக் கொடுக்கலாம்.

## இம்மருந்தின் (அப்பிரகச் சிந்தூரத்தின்) சில முக்கிய அனுபான முறைகள்

(இம்முறைகள் ரசரத்ன சமுச்சயம் என்ற நூலிலிருந்து எடுத்து எழுதியது)

***அனுபானம் I :*** மஞ்சள், சுட்ட திப்பிலி இவைகள் சம எடை எடுத்துச் செய்த தூள், வேளை ஒன்றிற்கு ½ வராகன் எடையுடன் அப்பிரகச் சிந்தூரம் இரண்டு குன்றிமணி எடை இவைகளைத் தேனில் மத்தித்துக் கொடுப்பது. இவ்விதம் கொடுக்க 20 வகைப் பிரமியங்கள் தீரும்.

***அனுபானம் 2 :*** சீந்தில்ச் சர்க்கரை ¼ வராகனெடை, இரண்டாம்முறை களைந்த பச்சரிசி கழநீர் ¼ சேர், இவ்விரண்டில் அப்பிரகச் சிந்தூரம் 2 குன்றிடை கலந்துகொடுக்க 20 வகை மேகரோகங்கள் தீரும்.

***அனுபானம் 3 :*** சீந்தில் சர்க்கரை ¼ வராகனெடை வெள்ளைத் தண்ணீர்விட்டான்கிழங்கின் சாறு 3 பலம் அப்பிரச் சிந்தூரம் 2 குன்றிடை இம்மூன்றுடன் தேன் ¼ வராகனெடை கலந்து சாப்பிடுவது, வாதத்தினால் ஏற்பட்ட பிரமிய நோய் தீரும்.

***அனுபானம் 4 :*** வெண்ணிற தண்ணீர்விட்டான் கிழங்கு, மஞ்சள், பூசணி இம்மூன்றும் சமஎடை எடுத்து இடித்து ¼ சேர் சாறு எடுத்து அதில் சிலாசத்து பஸ்மம் 1 பணவிடை, அப்பிரகச் சிந்தூரம் 2 குன்றிடை, இவைகளையும் கலந்து சாப்பிட பித்தத்தினால் ஏற்படும் பிரமேக நோய்கள் தீரும்.

***அனுபானம் 5 :*** லோகச் சிந்தூரம் 2 குன்றிடை, அப்பிரகச் சிந்தூரம் 2 குன்றிடை, சுட்ட திப்பிலித்தூள் ¼ வராகனெடை, கடுக்காய்த்தூள் ¼ வராகனெடை இவைகளைத் தேனுடன் கூட்டி கொடுக்க சிலேத்துமத்தினால் உண்டான பிரமேக நோய்கள் தீரும்.

***அனுபானம் 6 :*** அமுக்குராக்கிழங்கின் தூள் 1 வராகன் எடை, சுத்தி செய்த சேங்கொட்டையை நெய்யில் வறுத்தெடுத்த நெய் மட்டிலும் அந்நெய்யில் ¼ வராகனெடை, அப்பிரக சிந்தூரம் 2 குன்றினிடை இவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து சாப்பிடவும். இதனால் பாம்பு கடி, ஐந்துவித குன்ம ரோகங்களும் தீரும்.

***அனுபானம் 7 :*** நிலாவாரை விதையின் தூள் 1 வராகன் எடை, அப்பிரகசிந்தூரம் 2 குன்றிடை தேனில் கலந்து சாப்பிட மூன்று நாள் முறைக்காய்ச்சல் தீரும்.

***அனுபானம் 8 :*** சுக்கு, திப்பிலி, மிளகு, சீந்தில் வகைக்கு கால் வராகனெடை எடுத்துத் தூள் செய்து இத்துடன் அப்பிரக சிந்தூரம் 2 குன்றிடையுடன் தேன் கலந்து சாப்பிட தீபன சக்தி உண்டாகும்.

## முர்தார்சிங் சிந்தூரம்
## (அய்யாக்கண்ணு பிள்ளை)

முர்தார்சிங்கு 1 சேர் எடுத்து நைவாக அரைத்துத் தூள் செய்து, தேனில் மூன்று நாட்கள் போட்டுவைக்கவும். பிறகு எடுத்து இரும்பு கரண்டியில் போட்டு உருக்கி ஊற்றினால் ஈயம் உண்டாகும். அதை எடுத்து அடிகனமாயுள்ள மண்சட்டியில் வைத்து அடுப்பிலேற்றி கண்டங்கத்திரி, பொற்றலை, கையாந்தகரை, பூவரசம்பூ இம்மூன்றையும் சம எடைகொண்டு இடித்துக்கொள்ளவும். முர்தார்சிங்கில் சிறிது சிறிதாக இடித்து வைத்திருக்கும் மூலிகைகளைப்போட்டுப் பொறிக்கவேண்டும். சிந்தூரமாகும் வரையில் இம்மூலிகைகளைப் போட்டு காடாக்கினி தீயால் சுடவேண்டும். சிந்தூரமான பிறகு எடுத்துக் கொள்ளவும்.

***அளவு, அனுபானம், தீரும் வியாதிகள் :*** ஒருவேளை வீதம் ஒரு மண்டலம் இச்செந்தூரத்தைக் கொடுத்துவந்தால் மேகவிரணம் தீரும். இச்சாபத்தியம் இருக்கவும். தேனில் கொடுக்கவும்.

## அயகாந்த சிந்தூரம்
## (முத்துச்சாமி தீக்ஷிதர் முறை)

தீக்ஷிண்ய இரும்பு (அயம்) என்றால் எஃகு, இதன் அரப்பொடி முதலில் இதைச் சுத்தி செய்யவும். (சுத்தி செய்யும் விதம்) இரும்பு வாணலியில் அரப்பொடி அதை மூடும்படியாக முயலின் இரத்தத்தைவிட்டு, அடுப்பிலேற்றி தீயிட்டு இரத்தம் முழுமையும் தீர்த்து இரும்பு அரப்பொடி நெருப்புபோல் சிவந்தவுடன் அதை ஆறவைக்க கோமூத்திரத்தைச் சிறிதுவிட்டு வாணலியை கீழே இறக்கி விடவும். பிறகு இரும்புக் கரண்டியால் நன்றாக கிளறிவிடவும். உலர்ந்தபின் மறுபடியும் முயலின் இரத்தத்தை இருமுறை முன்பு செய்த மாதிரி செய்து எடுத்தால் எஃகு சுத்தியாகும். ஆக மும்முறை இவ்விதம் முயல்

இரத்தத்தினால் சுத்தி செய்தபின் இரும்புப்பொடி ஒரு சேருக்கு 3 பலம் நெய் வீதம் அதில்போட்டு, மேலும் திரிபலாதி கஷாயம் சேர் ஒன்றையும் கலந்து, அடுப்பின் மேலேற்றி கஷாயம், நெய் இவ்விரண்டும் வற்றும் வரையில் தீயிட்டு, பிறகு இரும்புச் சட்டியை கீழே இறக்கி மருந்துத் தூள் ஆறும் வரையில் இரும்புக் கரண்டியால் கிளறிக்கொண்டே இருக்கவும். இவ்விதம் செய்ய எஃகுப்பொடி சுத்தியாகும்.

***திரிபலாதிக் கஷாயம் செய்யும் விதம் :*** கடுக்காய் 1 சேர், தான்றிக்காய் 1 சேர், நெல்லிமுள்ளி 1 சேர் எடுத்து விதைகளை நீக்கி இத்துடன் 12 சேர் தண்ணீர்போட்டு 3 சேர் கஷாயம் இறக்கவும். இதுதான் திரிபலாதிக் கஷாயம் என்பது.

இவ்விதம் சுத்தி செய்த எஃகின் தூள் ஒரு சேர் எடைக்கு அரை சேர் பாதரசம், 1 சேர் கந்தகம் இவ்விதம் எடை தூக்கி பார்த்துக்கொள்ளவும்.

முதலில் பாதி அளவு ரசத்தையும், கந்தகத்தையும் கல்வத்திலிட்டு, எவ்வித திரவமும் போடாமல் 4 சாமம் அரைத்து எடுத்தால் கருநிறத் தூளாகும். இதில் 1 சேர் எஃகுத்தூள் சேர்த்து ஒருபொழுது காலை முதல் மாலை வரை கற்றாழைச் சாற்றை விட்டு கைவிடாமல் அரைத்து, மாலையில் அதை எடுத்து ஒரு உருண்டை செய்து அதன்பேரில் ஆமணக்கிலையை கவசம் செய்து ஒரு பாத்திரத்தில் வைத்து, இரவு முழுவதும் மூடிவைக்கவும். மறுநாள் இலைகளை எடுத்துவிட்டு உருண்டையை உடைத்துத் தாமிர பாத்திரத்தில் போட்டு ஒருநாள் பொழுது முழுவதும் வெய்யிலில் வைத்து, அதில் விரலை விட்டால் அவ்வளவு மிகுதியான சூடேறி இருக்கும். சில சமயம் அதினின்று புகையும் வரும். அப்பொழுது இம்மருந்தின் கருநிறம் குறைந்து சொல்பம் சிவந்த நிறமாக இருக்கும். இதை மறுபடியும் எடுத்து கல்வத்திலிட்டு, கற்றாழைச் சோற்றினால் 3 நாட்கள் அரைத்து வடைபோல் தட்டி உலர்த்தவும். உலர்ந்தபின் எடுத்து ஒரு மண்சாணாக்கியில் வைத்து மேலொரு

சாணாக்கியினால் மூடி சீலை மண்செய்து ¾ முழ உயரத்தில் புடம் போடவும். மறுநாள் வில்லைகளை எடுத்து அதில் 3 பலம் இலிங்கம், 2½ வராகனெடை சௌவீரம், 2½ வராகனெடை பூநீரும் போட்டு, நெல்லிக்காய்ச்சாறு விட்டு 3 நாட்கள் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி முன்பு கூறியபடி ஒரு மண் சாணாக்கியில் வைத்து மேலும் ஒரு மண் சாணாக்கியினால் மூடி மூன்று சீலைமண்செய்து ¾ முழ உயரத்தில் புடத்தில் எரிக்கவும். இவ்விதமே அரைத்து பத்து புடங்கள் போடவேண்டும். பூநீரை மட்டிலும் முதல் ஒரு தடவை மட்டில் சேர்க்கவும். மேற்கூறிய 9 புடங்களில் ஒவ்வொரு புடத்திற்கும் 3 பலம் இலிங்கம், 2½ வராகனெடை சௌவீரம் முன்பு கூறியதுபோல் போட்டு அரைக்கவும். இவ்விதம் 10 புடங்கள் முடிந்த பின்பு, நாவல்பட்டையின் கஷாயத்தில் ஒவ்வொரு நாளும் அரைத்து முன்போல் மண் சாணாக்கியில் வைத்து மூன்று சீலைமண்செய்து 5 புடம் போடவும். அதன் பிறகு கற்றாழைச் சோற்றினால் ஒவ்வொரு நாளும் அரைத்து முன்புபோலவே சாணாக்கியில் வைத்து ஐந்து புடங்கள் போடவும். இவ்வாறு செய்தால் எஃகு சிந்தூரம் சித்தியாகும்.

***இந்த எ:கு சிந்தூரத்தின் குணங்கள் :*** அக்னி மாந்தம், பாண்டுரோகம், காமாலை, மூத்திர ரோகம், ஸ்திரீ ரோகம், மேகவியாதி, க்ஷயரோகம் இவ்வகையான எல்லா நோய்களும் அந்தந்த நோய்களுக்குத் தக்கபடி அநுபானத்திலும், சரீர பலத்தையும் அனுசரித்து ½ பணவிடை முதல் 1½ பணவிடை வரையில் கொடுத்தால் மேல்கூறிய வியாதிகள் தீரும்.

இம்மருந்தை மேலை கூறியுள்ள நோய்களின் ஆரம்ப காலத்தில் கொடுக்கவும். அல்லது இந்நோயின் சின்னம் மேலும் சிறிது இருப்பின் அதற்கும், இரத்த புஷ்டிக்காகவும், சரீர புஷ்டி ஏற்படுவதற்காகவும் கொடுக்கவும். நோய் பிரபலமாக (அதிகமாக) இருக்கும் சமயத்தில் கொடுக்கக்கூடாது. மேற்கூறிய நோய்களுக்குப் பிரத்தியேகமான அனுபானங்களிலும் கொடுக்கலாம்.

# லோக சிந்தூரம், அய சிந்தூரம்

## இவைகளின் அனுபானங்கள்

***அனுபானம் 1 :*** காமாலைக்கு யுக்த அளவு சிந்தூரத்தை வெங்காயச்சாறு 5 வராகனெடை, ஜாதிக்காய் கால் வராகனெடை, மாசிக்காய் கால் வராகனெடை இவ்விரண்டையும் வெங்காயச் சாற்றில் இழைத்து, அந்தச் சாற்றை இரும்புக் கரண்டியைச் சூடாக்கி அதில் ஊற்றி முறித்துக் கொடுக்கவேண்டும். பாண்டு, காமாலை இவைகள் தீரும்.

***அனுபானம் 2 :*** வாதம், அல்லது கபம் சம்மந்தமான பாண்டு (சோகை) ரோகம் அல்லது காமாலைக்குக் கொடுப்பது. சிற்றாமுட்டி வேரின் மேல் தோல் நீக்கி மற்றதையும், தழுதாழை (வாதமடக்கி), பாதிரிவேர், பிண்டாரவேர், சங்கம், குப்பிவேர், சிறுஇலாவமரவேர், மூக்குத்தி பூண்டின் வேர், சுக்கு இவைகள் வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்து உலர்த்தி கால் சேர் கஷாயமிறக்கி, அதில் அய சிந்தூரம்போட்டு 1 வராகனெடை தேனையும் கூட்டிக்கொடுக்க வாதம், பித்தம், கபம் இவைகள் சம்பந்தமான காமாலை பாண்டுரோகம் (சோகை), சுரம், அதிசாரக்கழிச்சல், கிராணிக் கழிச்சல், வீக்கம், மூச்சு, ருசியின்மை, தொண்டையில் கரகரப்பு, வலி, நெஞ்சுவலி இவ்வகையான உபத்திரவங்கள் தீரும்.

***அனுபானம் 3 :*** கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய் இவைகளின் விதை நீக்கி, சீந்திலின் மேலுள்ள தோல் இதைத் தவிர உள்ளிருக்கும் சோறும், பேய்ப்புடல், ஆடாதோடை வேர், நிலவேம்பு, பழைய வேப்பம்பட்டை இவைகள் வகைக்கு 2 வராகனெடை இதில் 2 சேர் தண்ணீர்விட்டு கால் சேர் கஷாயம் இறக்கி, அதில் அய, காந்தம் இவ்வித சிந்தூரங்கள் தக்க அளவில் கூட்டி 2 வராகனெடைத் தேனையும் கூட்டிக் கொடுக்க பாண்டு, காமாலை இவைகள் தீரும்.

***அனுபானம் 4 :*** மூத்திர ரோகம், மேக ரோகத்திற்குக் கொடுப்பது, நெல்லிமுள்ளி 5 வராகனெடை, இதில் 2 சேர்

தண்ணீர்விட்டு கால் சேர் கஷாயமிறக்கி, இக்கஷாயத்தில் 1 வராகனெடை மஞ்சள் தூள், சீந்தில், சர்க்கரை அரை வராகனெடை, தேன் 2 வராகனெடை இவைகளை ஒன்றுகூட்டி அதில் மேற்படி சிந்தூரத்தைத் தகுந்த அளவு கலந்து கொடுக்க மூத்திர ரோகம், மேகரோகம் இவ்விரண்டும் தீரும்.

***அனுபானம் 5 :*** குரோசாணி ஓமம் அரை வராகனெடை, பேரீச்சங்காய் அரை வராகனெடை இவ்விரண்டையும் கூட்டி இதில் தண்ணீர்விட்டு நைவாக அரைத்து, அதில் லோகசிந்தூரம் தகுந்த அளவில் சேர்த்துக் கொடுக்கவும். இம்மருந்தைச் சாப்பிட்டு ஒரு சாமம் கழித்து சிறிது மயக்கம் வருவதாகத் தோன்றும். ஆனால், இதனால் கெடுதி ஒன்றுமில்லை. இம்மருந்தினால் மதுமேகம் (நீரழிவு), சகல மூத்திர ரோகம், சகல மேகரோகங்கள் தீரும். தற்காலிகமாகப் பத்தியமாக இருக்கவும்.

***அனுபானம் 6 :*** சித்திர ரோகத்திற்கு லோக சிந்தூரம் கொடுக்கும் விதம், சித்திர ரோகமென்றால் வெண்குட்டம். இவ்வியாதிக்கு மஹாபல்லாதக ரஸாயனம் அல்லது பிருங்காதி சூர்ணம் கொடுக்கவும். இச்சிந்தூரத்தை எந்தவிதமான மருந்துகளுடனும் கலந்து கொடுத்தால் வெண்குட்டம் குறையும். பிறகு எல்லாம் மறைந்துவிடும்.

## தண்டவாள சிந்தூரம்

(முத்துச்சாமி தீக்ஷிதர்)

தண்டவாளம் என்றால் தீவ்ர, தீக்ஷிண்யமான இரும்பு என்று பொருள் அதாவது எஃகு என்றும் பொருள்.

இப்பேர்பட்ட தண்டவாளத்தின் அரப்பொடியை வஸ்திரகாயம் செய்து எண்ணெய் இருப்புச் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி தீயிட்டு இரும்புக் கரண்டியால் கிளறிக்கொண்டு இருக்கவேண்டும். இவ்விதம் மும்முறை செய்ய இரும்புப்பொடி சுத்தியாகும். இவ்விதம் சுத்தி செய்த தூள் 1 சேர், நெல்லிக்காய் 1 சேர் இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு கரு ஊமத்தையிலைச் சாறு விட்டு மருந்து காய்ந்து போகாமல் ஏழு நாட்கள் அரைத்து

வில்லைகள் செய்து உலரவைத்து சாணாக்கியில் வைத்துமூடி 5 சீலைமண் செய்து 1½ ஜான் (சான்) உயரத்தில் புடம் போடவும். இவ்விதம் கரு ஊமத்தையிலைச் சாற்றைவிட்டு 4 சாமம் அரைத்து 1½ சாண் உயரத்தில் 5 புடமும், கற்றாழைச் சாறுவிட்டு 4 சாமம் அரைத்து சாணாக்கியில் வைத்து மூடி சீலைமண் செய்து இரண்டு சாண் உயரத்திற்கு 5 புடம் போடவும். இதன் பின்பு சிந்தூரம் பார்வைக்கு சரியாக இல்லை என்று தோன்றினால் மேலும் இரு புடங்கள் போடவும். இவ்விதம் தவறாது செய்தால் சிந்தூரம் சித்தியாகும்.

***இத்தண்டவாள சிந்தூரத்தின் குணங்கள் :*** ஜீர்ண சுரம், அதிசார கழிச்சல், கிராணிக் கழிச்சல், அக்னிமாந்தம், பாண்டுரோகம், குன்மரோகம் இவ்வித ரோகங்களுக்கு அந்தந்த நோய்களுக்குரிய அனுபானங்களில் சரீர பலத்தையும் அறிந்து கொடுக்க மேற்கூறிய நோய்கள் தீரும். மேற்கூறிய வியாதிகளுக்கு ஆரம்ப நிலையில் இம்மருந்தைக் கொடுக்கலாம். அல்லது வியாதியின் சின்னம் இன்னும் இருப்பினும், இரத்த விருத்திக்கும் சரீரத்தில் புஷ்டி உண்டாவதற்கும் கொடுக்கலாம். நோய் மிகுதியாகவும் பிரபலமாக இருந்தால் கொடுக்கக்கூடாது. கீழே சில விசேஷமான அனுபான முறைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

***அனுபானம் / :*** சுக்கு 1¼ வராகனெடை, மல்லி 1¼ வராகன் எடை, இவ்விரண்டையும் சாறு எடுத்து ½ வராகனெடை தேனும் கூட்டி, தண்டவாள சிந்தூரம் தகுந்த அளவு கூட்டி விடியற் காலையில் கொடுக்கவும். மாலையில் சுக்கு 2 வராகனெடை, மல்லி 2 வராகனெடை, கோரைக்கிழங்கு 2 வராகனெடை இந்த மூன்றையும் சேர்த்து 2 சேர் தண்ணீரும் விட்டு ¼ சேர் கஷாயமாக இறக்கி இதில் தண்டவாள சிந்தூரம் தகுந்த அளவு சேர்த்துக் கொடுக்கவும். இவ்விதம் 10 நாட்களுக்குக் கொடுக்க ஜீரண சுரம் தீரும்.

***இதற்குப் பத்தியம் :*** புளி, நல்லெண்ணெய், நெய், தயிர், பால் இவைகளை விலக்கவும்.

***அனுபானம் 2 :*** தண்டவாள சிந்தூரம் தேவையான அளவு, தேன் ¼ வராகனெடை இவைகளைக் கலந்து கொடுத்து இத்துடன் இலவங்காதி மோதகம் செய்துகொடுக்க கிராணி குன்ம ரோகம் இவ்வாறான நோய்கள் தீரும்.

***அனுபானம் 3 :*** இலவங்கம், ஜாதிக்காய் துண்டுகள், சுக்கு துண்டுகள், சிறுநாகப்பூ, ஏலம் இவைகளை வகைக்கு 2 தோலா எடை வீதம் எடுத்து வாதாம்பருப்பை நெய்யில் தனித்தனியே வறுத்து எடுத்துக்கொண்டு எல்லாவற்றையும் ஒன்றுகூட்டி சூரணம் செய்து ஒரு இரும்புப் பாத்திரத்தில் இதை போட்டு, அதில் தேன் ¼ சேர் கலந்து பாத்திரத்தைத் தணலின்மேல் வைத்து நன்றாகக் கலந்து பக்குவம் செய்து கொள்ளவும்.

***இதன் அளவு :*** 2½ வராகனெடை அளவிற்கு உருண்டைகள் செய்துகொள்ளவும். இந்த லவங்காதி மோதகத்தைச் சாப்பிடக் கொடுக்கவும்.

***இதனால் தீரும் வியாதிகள் :*** அதிசாரக் கழிச்சல், கிராணிக் கழிச்சல், மூலவியாதி, குன்மவியாதி இதைத் தவிர அனுபான பேதங்களினால் கொடுக்க அநேக வியாதிகள் தீரும்.

## காலகண்ட மேகநாராயண சிந்தூரம்
### (சிதம்பர வைத்தியம்)

காலகண்ட மேகநாராயண சிந்தூரம் செய்யுமுன் விநாயகருக்கு வழிபாடு நடத்திவிட்டுப் பிறகு இம்மருந்து யாரால் தனக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவருடைய பெயரை ஞாபகப்படுத்தி வணக்கம் செலுத்திச் செய்யவேண்டும்.

***முதலில் திராவகம் எடுக்கவேண்டியமுறை***

நாலாங்காச்சல் வெடியுப்பு 2½ சேர், மனோசிலை 39½ வராகன் எடை, இம்மூன்றையும் நன்றாகத் தூள் செய்து, சிறிய மண் பானையில் வைக்கவும். அதன்மேல் வாலையந்திரம் வைத்து, பானையின் வாயை சீலைமண் செய்து, சிறிதேனும் புகை வாய் வழியாக வராதிருக்கும்படிச் சீலைமண் செய்யவும். வாலுகா

யந்திரத்தின்மேல் பாகத்தில் தண்ணீர்விட்டு கீழ் குழாயினடியில் ஒரு பீங்கான் பாத்திரத்தை வைக்கவும். இதை அடுப்பின் மேலேற்றி தீயிட மேலுள்ள தண்ணீர் உஷ்ணமடைய, அதை அடுத்து மறுபடியும் குளிர்ந்த நீரை விடவேண்டும். இவ்விதம் செய்துகொண்டிருக்கும்போது முதலில் வரும் திரவம் காரமில்லாமல் இருக்கும். அதன்பின் வருவது மஞ்சள் நிறத்தில் இறங்கும். முன்பு இறங்கிய காரமில்லா திராவகத்தைக் கொட்டி விட்டு பின்வந்த மஞ்சள்நிறம் உள்ளதை எடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். இந்தத் திராவகத்தில் சங்கு கரையும். அதனால்தான் இத்திராவகத்திற்குச் சங்குத் திராவகம் என்று பெயர்.

***இலிங்கத்திலுள்ள பாதரசம் எடுக்கும் முறை :*** ஒருபிடி சீந்தில் அல்லது சித்திர மூலம் எடுத்து அரைச் சேர் லிங்கத்தை எடுத்துப் பாதி சித்திரமூலத்தை ஒரு பானையின் அடியில் போட்டு, அதன்மேல் இலிங்கத்தைவைத்து, அதன்மேல் பாக்கி இருக்கும் சித்திரமூலத்தையும் போட்டு, அதன்மேல் அதேவிதமான பானையால் மூடி 2 சீலைமண் செய்து, காற்று புகாதபடி செய்யவேண்டும். பிறகு சிந்தூரம் செய்யும் அடுப்பை வைத்து கிரமமாய் படாக்னி தீயைப் போட்டு எரிக்கவும். மூன்று சாமமானதும் பானையைத் திறந்து பார்த்தால் மருந்துமேல் சாம்பல்போல் பூத்திருக்கும். இவைகளைத் துடைத்து எடுத்து வஸ்திரகாயம் செய்தால் அதினின்று இலிங்கபாதரசம் வெளிப்படும். இப்படி வெளிவந்துள்ள பாதரசம் 30 வராகன் எடை எடுத்துக்கொள்ளவும். ஒருதடவையில் 30 வராகனெடை கிடைக்கவில்லை என்றால் மறுதடவையும் அவ்விதம் செய்து பாதரசத்தை எடுத்துக்கொள்ளவும்.

பாதரசம் 30 வராகனெடை, இலிங்கம் 1 வராகனெடை, மனோசிலை 4 வராகனெடை இவ்வைந்து வகைகளையும் கல்வத்திலிட்டு நன்றாக நைவாகத் தூள் செய்து, மேற்கூறிய திராவகத்தையும் போட்டு 3 நாட்கள் அரைக்கவும். அவ்விதம் அரைக்கும்போது மருந்தின் மஞ்சளும், சிவப்பு நிறமும் மறைந்து வெண்மையில் சிறிது கருநிறமாக இருக்கும். இவ்விதம் நிறம் மாறிய பிறகு இத்தூளைக் காசிக்குப்பியில் போட்டு வாய்க்கு ஏழு சீலைமண் செய்யவும்.

***குப்பியைப் புடத்திற்காக வைக்கும்முறை :*** இக்குப்பி வைப்பதற்கு ஒரு சாண் உயரமும், ஒரு முழ அகலமுமானதாக இருக்கவேண்டும். அவ்விதம் செய்தபிறகு, ஒரு அடுப்பு தயாரித்து, அந்த அடுப்பின்மேல் பாகத்தில் குப்பிவைத்த சட்டி சரியாகப் பொருத்தி கொஞ்சம் இடுக்கு அல்லது சந்து இல்லாதபடி பொருத்தவேண்டும். வைத்த சட்டியில் ஒருபிடி மணலைப் போட்டுக் குப்பிக்குச் சுற்றிலும் அதன்மேல் இரண்டு விரல் உயரம் குப்பி தெரியும் வண்ணம் மணலை நிரப்பி ஏழு சாமம் தீயிட்டு எரிக்கவும்.

***ஏழு சாமம் தீவைத்துப் புடம்போடும்முறை :*** முதலில் ஒரு மணிநேரம் கமலாக்னி தீயாலும் மற்ற 6 மணிநேரம் படாக்னி தீயாலும் எரிக்கவும். இரண்டு மணிக்கொருமுறை இரும்பு ஆணியைக்கொண்டு குப்பியிலிருக்கும் மருந்தைக் கலக்க வேண்டும். இவ்விதம் ஆனதும் குப்பியின் வாயின்பேரில் ஒரு ஓட்டு வில்லையை வைக்கவும். ஒருக்கால் அதிகமான தீயினால் புகை அதிகம் ஏற்படுமாயின் குப்பியின் மேல் வைத்திருக்கும் ஓட்டுக்குப் பதிலாக கற்றாழையின் சோற்றை வைக்கவும். ஏழு நாழிகைக்குள் மருந்து மேலே கட்டிவிடும். ஒருநாள் முழுவதும் சூடுதணியும் வரையில் வைத்து அதன்பின் குப்பியை எடுத்து உடைத்து மருந்தை எடுக்கவும். மேற்படி மருந்தின் வேகம் குறைவதற்காகச் சீந்தில் கஷாயம் செய்து மருந்தில் போட்டு வேகவைக்க மருந்தின் வேகம் குறைந்துவிடும். இம்மருந்து சகல வியாதிகளுக்கும் உபயோகப்படும். ஆனால் அனுபான வித்தியாசத்தில் கொடுக்கவேண்டும். சிறு குழந்தைகளுக்குக்கூட கொடுக்கலாம். சிரேஷ்டமான மருந்தாகக் கருதப்படுகிறது.

***இக்காலகண்ட ரசத்தின் அனுபானம் / :*** தூதுவளை கண்டங்கத்திரி, ஆடாதோடை இம்மூன்றையும் சிறிது வெதுப்ப சாறு பிழிந்து, அதில் சுக்கு, திப்பிலி, நெல்லிமுள்ளி இவைகளிெ தூள் ஒரு சிட்டிகை வீதம் சேர்த்து சிந்தூரம் ½ பணவிடைக் கூட்ட இருவேளையுமாக 20 நாட்களுக்குக் கொடுக்க சுவாசகாசம் க்ஷய சம்பந்த, கப சம்பந்த, எலிக்கடி, மூர்ச்சை இவ்வகையான நோய்கள் நூற்றி எட்டும் தீரும்.

***அனுபானம் 2 :*** திப்பிலியைச் சுட்டு தூள் செய்து, ஒரு சிட்டிகை எடுத்துத் தேனும் கூட்டி ½ பணவிடை சிந்தூரத்தைக் கலந்து 20 நாட்களுக்குக் கொடுக்க 18 சூலை வியாதி, 8 குன்மம், 18 குஷ்டம், விரணம், சிரஸூ சூலை, பீனிசம், நெஞ்சுவலி, காது வலி இத்யாதி நோய்கள் தீரும்.

***அனுபானம் 3 :*** பூண்டுத்தைலம் ½ பணவிடையில் சிந்தூரத்தைக் கலந்து இருவேளையுமாக இருபது நாட்களுக்குக் கொடுக்க, சிலேத்தும மூர்ச்சை, உதரவாயு, வாதமூர்ச்சை, பித்த மூர்ச்சை, மேகவிரணம், ஜன்னி இவைகள் யாவும் தீரும்.

***அனுபானம் 4 :*** ஓமம், சுக்கு, மிளகு இவைகளைச் சுட்டு அல்லது வறுத்தெடுத்துத் தூள் செய்து, ஒரு சிட்டிகைத் தூளில் முருங்கைப் பட்டையின் சாறுவிட்டு 1 பணவிடை சிந்தூரத்தையும் கலந்து ஒரு மண்டலம் வரையில் இருவேளையுமாகக் கொடுத்துவந்தால் ஜன்னிவாதம், சர்வாங்க வாதம், இழுப்பு, உள் இழுப்பு, நெஞ்செரிவு, குன்மம், சத்தி குன்மம், எட்டுவித குன்மம், மூலவாயு, இரத்தகண்டி, கௌசி, மூத்திர கிருச்சரம், துர்மாமிச வளர்ச்சியால் மூத்திரம் தடைபடுதல் இவைகள் சம்பந்தப்பட்ட 300 நோய்களும் தீரும்.

***அனுபானம் 5 :*** நிலாவாரையின் சாற்றில் ஒருநாள்விட்டு ஒருநாள் ½ பணவிடை சிந்தூரத்தைக் கலந்து இருவேளையுமாக 10 நாட்களுக்குக் கொடுத்துவர கர்ப்ப விப்புருதி, (Cancer of the Womp), மாந்த சம்பந்த ரோகம், விலாவிப்புருதி (Cancer of the Ribes) பக்ஷவாதம், அண்டவாதம் (விரைவாதம்) துடைவாதம், யோனிசூலை, இரத்தவாதம் இவ்விதமான 60 நோய்கள் தீரும். இரண சம்பந்தமான சூலை நோய்கள் இதே அனுபானத்தில் கொடுக்கத் தீரும்.

14

## அக்னிகுமார் சிந்தூரம்

(அம்பலவாண பிள்ளை)

குதிரையின் பழைய லாடம் எடுத்து அதை நன்றாக சூடாக்கிச் சாணத்தில் நனைத்து அரத்தினால் பொடி செய்து 1 சேர் பொடி எடுத்துக் காடியில் இரண்டு மூன்று நாட்கள் ஊறவைத்து பிறகு எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து, பிறகு அதை எடுத்து 32 வராகனெடை அளவுக்கு நிலவை செய்து வைத்துக் கொள்ளவும். பிறகு காந்தத்தை டோலா யந்திரத்தில் வைத்து கெள்ளுக்கட்டில் தொங்கவிட்டுக் காய்ச்ச காந்தம் சுத்தியாகும். இவ்விதம் சுத்தியான காந்தம் 16 வராகனெடை, நெல்லிக்காய் கந்தகம் 8 வராகனெடை, பாதரசம் செங்கல் தூளில் போட்டு நன்றாக அரைத்து அதை நெருப்பில் ஊதி எடுத்து, பிறகு மஞ்சள் பொடியைக் கலந்து அது கருநிறமாகும் வரை அரைத்து அதை ஊதி பாதரசத்தை எடுத்துவைத்துக்கொள்ளவும். பாதரசத்தை வடிகட்டி 8 வராகனெடை அளவுக்கு எடுத்துக்கொள்ளவும். மனோசிலை 2 வராகனெடை இவ்வைந்து வகைகளையும் ஒன்றுகூட்டி கற்றாழைச் சோற்றைச் சேர்த்து கல்வத்திலிட்டு 8 சாமம் அரைத்து செம்முள்ளியின் சாற்றில் 2 சாமம் அரைத்து, உத்தாமணிச் சாற்றில் 2 சாமம் அரைத்து, மறுபடி வெற்றிலைச் சாற்றில் 2 சாமம் அரைத்து, உத்தாமணிச் சாற்றில் 4 சாமம் அரைக்கவும். பிறகு சீந்தில் கஷாயத்தில் 4 சாமம் அரைச்சேர் சுக்குக் கஷாயத்தில் 4 சாமம், வெண்மருதம் பட்டைக் கஷாயத்தில் 4 சாமம், நாவல்பட்டைக் கஷாயத்தில் 4 சாமம், கொம்புப்பாகலின் சாற்றில் 4 சாமம், முருங்கைப்பட்டைச் சாற்றில் 4 சாமம். இவ்விதம் அரைத்துப் பெரிய வில்லை செய்து நாவல்பட்டையை இடித்து ஒருமண் சட்டியில் கீழே சிறிது போட்டு அதன்மேல் மருந்து வில்லையை வைத்து அதன் மேலும் நாவல்பட்டைத் தூளைப்போட்டு அதன்மேல் மற்றொரு சட்டியை வைத்து நான்கு சீலை மண்செய்து, 30 சாமம் கிரமமாய்த் தீயிட்டு எரிக்க சிந்தூரமாகும். இதை எடுத்துவைத்துக் கொள்ளவும். இன்னும் வீரியமான மருந்து வேண்டுமென்றால் கற்றாழைச் சாறு போட்டு அரைத்து ஆறுமுறை கஜபுடத்தில்

வைத்து எரிக்க மிகவும் வீர்யமுள்ள சிந்தூரமாகும். ஆயிரக்கணக்கான வியாதிகளுக்குக் கொடுத்து வியாதியைத் தீர்க்கவல்லது.

## பிரமதாபாங்குச ரசசிந்தூரம்
## (புருஷோத்தம தீர்த்தருடைய முறை)

பூநீர், சத்திச்சார், யவச்சாரம், பஞ்சலவணம், நவச்சாரம், வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, ஊமத்தை விதை, மஞ்சள், கடுகு, வெல்லம் இவ்விதம் 20 வகைகளும் 20 பாகம், பாதரசம் 10 பாகம் இவைகளை எல்லாம் கல்வத்திலிட்டு 12 சாமம் அரைத்துப் பிறகு இப்பாதரசத்தை அழுத்தமான துணியில் பிழிந்து எடுக்கவும். பிறகு யோனி புஷ்ப மரத்தின் இலைச்சாறு 1 பாகம், சங்கம், குப்பியிலைச்சாறு 1 பாகம் இம்மூன்றையும் ஒன்றுகூட்டி அச்சாற்றில் பாதரசத்தைக் கையினால் 4 மணி நேரம் நன்றாக மத்தித்து 1 சாமம் தீயிட்டு, அதன்பின் குமரி (கற்றாழை)ச் சாற்றில் 15 தினம் மத்தித்து, சித்ரமூலக் கஷாயத்தில் ஏழு நாட்கள் டோலா யந்திரத்தில் வைத்து கமலாக்னி தீயால் எரித்து, மறுபடியும் அதைக் கல்வத்திலிட்டுச் சீந்தில் கஷாயத்தில் 21 நாட்கள் மத்தித்து, அதன் பின்பு வடக்கே ஓடியிருக்கும் அலரி வேரின் சாற்றில் 21 நாட்கள் மத்தித்து, ஜாதிக்காய் கஷாயத்தில் ஒருநாள் மத்தித்து இவ்வாறு மத்திப்பது முடிந்ததும் பாதரசத்தை எடுத்துக்கொள்ளவும். கரும்பு, பால், நெய் இம்மூன்றில் 1 பாக கந்தகத்ததைச் சுத்திசெய்து, பாதரசம் 4 பாகம் இவைகளில் சில துளி ஆமணக்கெண்ணெய் சேர்த்து பட்டு நூலால் நன்றாகக் கட்டி இரண்டு அகல்களை வாய் பொருந்தும்படித் தேய்த்துச் சீந்தில் வேரின் பட்டையை அகலில் பாதியளவுக்குப் போட்டு அதன்மல் மருந்து உருண்டையை வைத்து, அதன்பேரில் 1 அங்குலம் மணல் போட்டு 4 அல்லது 5 வறட்டியில் புடம் போடவும். இவ்விதம் 5 புடங்கள் போட சிந்தூரமாகும். இச்சிந்தூரத்தை 1 பணவிடை எடுத்து இரு மாலை நேரங்களில் அல்லது மூன்று மாலை நேரங்களில் மெல்லிய சரீரத்திற்கு தேக பலத்தை அறிந்து இருவேளை வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

***இதற்கு அனுபானம் :*** தேன் 1 பாகம், நெய் 2 பாகம், சர்க்கரை 3 பங்கு இவைகளில் கலந்து கொடுக்கவும்.

***இதற்கு உத்தமமான பத்தியம் :*** பால் சாதம், நெய், சர்க்கரையும் சேர்க்கவும். வாபக்ஷ எண்ணெய், கடுகு, மிளகாய் வற்றல் விலக்கி, சிறிது புளி, உப்பு மட்டும் காலைப் பொழுதில் சேர்க்கலாம். இரவில் பால் சாதம், சர்க்கரை இதைத் தவிர வேறு எந்த பத்தியத்தினாலும் குணமேற்படாது. இவ்விதம் 14 நாட்கள் உட்கொள்ள ஜீரணசக்தி, தாதுபுஷ்டி, இரத்த விருத்தி இவ்வளவும் உண்டாகும். 20 வருஷம் தாது நஷ்டமானவர்களுக்கு இம்மருந்தைக் கொடுத்த பின்னர் சந்தான (புத்திர பாக்யம்) உண்டாயிற்று. இம்மருந்தை அனுபவமானவர்களைக் கலந்து அவர்களிடமிருந்து நன்கு அறிந்து இம்மருந்து சேகரிக்கப்பட்டது.

## லகுஹய வங்க சிந்தூரம்

(அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

இரும்பு அரப்பொடி 1 பலம், ஸ்படிக (பலிங்கு தூள்) ¼ சேர், வளையலுப்பு 4½ தோலா, (1½ பலம்), வெங்காரம் 1 பலம் இவைகளில் கோழி முட்டையின் வெண்கருவை விட்டு நைவாக அரைத்து வில்லைத் தட்டி, உலர்த்தி குகை என்ற மூசில் போட்டு மூசு செய்யும் மண்ணால் சீலைமண் செய்து உலரவைத்து கொல்லன் உலையில் வைத்து, துருத்தியால் பக்குவமாய் ஊதி எடுத்துக்கொள்ளவும். ஆறியபின், மறுபடியும் அவ்வாறே ஊதி எடுத்து ஆறியதும் உடைத்துப் பார்த்தால் மணிகள் போலவும் வட்டவில்லைகளைப் போலவும் அதன் சத்து இருக்கும். இதை எடுத்து நவச்சாரம் ½ பலம், தாளகம் ¼ பலம், வெங்காரம் ¼ பலம், சௌவீரம் காலே அரைக்கால் தோலா எடை இவ்வாறு எடுத்துக் கல்வத்தில் போட்டு, எலுமிச்சம் பழச்சாற்றைவிட்டு 2 சாமம் அரைத்து, சிறு சிறு வில்லைகளாகச் செய்து உலரவைத்து, இவைகளை எல்லாம் ஒரு குகையில் வைத்து ஒவ்வொரு வில்லையாக உருக உருக போட்டு எல்லாம் உருகியபின் நன்றாக உருகியதைச் சோதித்து ஆமணக்கெண்ணெயில் ஊற்ற, லோஹ சத்வம் அயவங்கமாக இருக்கும். இந்த ஹயவங்கத்திற்கு அரை

எடை கந்தகம், ஹயவங்கத்தில் ¼ பாகம் தாளகம், ஹயவங்கத்தில் எட்டில் ஒரு பங்கு மனோசிலை, பூநீர் ஒரு வராகனெடை இவைகளைக் கல்வத்திலிட்டு பொற்றலை, கையாந்திரைச் சாறு, கற்றாழைச் சாறு இவ்விரண்டையும் போட்டு 4 சாமம் அரைத்து மணலில் புதைத்து வைத்து, ஒருமுழப் புடத்தில் புடம் போட்டு, இவ்வாறு மூன்று புடங்கள் போடவும். சிந்தூரமானதும் எடுத்து டப்பியில் வைத்துக்கொள்ளவும்.

***அளவு, தீரும் வியாதிகள் :*** ஒருவேளை 1 பணவிடை சிந்தூரம் இருவேளையும் கொடுக்க சகல ரோகங்களும் தீரும். அனுபான பேதங்களில் கொடுத்தால் எல்லாவித பெரிய பெரிய பிணிகளும் தீரும்.

## சகல ரோகத்திற்கும் வங்ககுரு சிந்தூரம்

(அய்யாக்கண்ணு பிள்ளை முறை)

கருவங்கம் 1 வராகனெடை எடுத்து மெல்லிய தகடாகத் தட்டி புளியிலையைப்போல் மெல்லியதாகக் கத்தரித்து, மஞ்சள் தாளகம் 3 வராகனெடை எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் 2 சாமம் அரைத்து அதை கத்தரித்து வைத்திருக்கும் வங்கத்தூளுடன் சேர்த்து ஒரு மூசையில் வைத்து ஒட்டு வில்லையை நன்றாக வாயில் பொருத்தி சீலைமண் செய்து 20 வறட்டியில் புடம் போடவும் பஸ்மமாகும். இப்பஸ்மத்தின் சமஎடை வெள்ளித் தகட்டை மெல்லியதாகத்தட்டி, புளியிலையைப்போல் கத்தரித்துக் கொள்வது. பஸ்மத்தில் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு ஒரு நாழிகை அரைத்து, வெள்ளித்தூளில் கலந்து கையினால் நன்றாகப் பிசைந்து, மறுபடியும் 20 வரட்டியால் முன்பு புடம் போட்டதுபோல் மூசில் வைத்து புடம் போடவும் பஸ்மமாகும். இப்பறபத்தில் எவ்வளவு பாதரசம் கூடுமோ அவ்வளவு சேர்த்துக்கொள்ளவும். பிறகு இதைக் கல்வத்திலிட்டு முலைப்பால் சேர்த்து, பாதரசத்தைக்கூட்டி மெதுவாக மத்தித்தால் வெண்ணெய் போலாகும். இதை உருட்டி ஊமத்தைச் செடியின் பழத்தை (காயை)க் கொண்டுவந்து, அதைப் பாதியாக (துண்டிக்காமல்) அறுத்து நடுவில் பள்ளமாக்கி வெண்ணெய்க் கட்டியை வைத்து மூடி அதன்மேல் சீலைமண் செய்து காடை

புடத்தில் தீயிட்டு எரிக்கவும். இவ்விதம் 21 புடம் போட்டு பாதரசத்தை எடுத்து, அதற்குச் சம எடை சொக்கத்தங்கத்தைக் கலந்து, பாதரசத்திற்கு 4ல் 1 பங்கு கந்தகம், 8ல் 1 பங்கு தாளகம், 16ல் 1பங்கு மனோசிலை இவ்வாறு எடுத்து கலந்து இதை மஞ்சள்பூ, கையாந்தகரைச்சாறு விட்டு 4 சாமம் நைவாக அரைத்து வில்லை தட்டி, உலர்த்தி ஒருமண் (அகல்) சாணாக்கியில் வைத்து, மேலும் மற்றொரு (அகல்) சாணாக்கியைவைத்து சந்து தெரியாமல் சீலைமண் செய்து மணலில் புதைத்து 20 வறட்டியால் புடம் போடவும். இவ்வாறு 5 புடங்கள் 30 வறட்டியால் புடம் போட சிந்தூரமாகும். இதை பொடித்துக் கொள்ளவும். இருவேளையும் வேளைக்கு 1 பணவிடை வீதம் ஒரு மண்டலம் கொடுக்க எல்லா கடினமான வியாதிகளும் தீரும்.

## வெடியுப்பு சுண்ண சிந்தூரம்

வெடியுப்பு 5 பலம், புளி 5 பலம். இவ்விரண்டையும் நைவாக அரைத்து ஒண்ணரை சாண் துணியில் தடவி சுருட்டி ஒரு திரி செய்து, இரும்பு சுளுக்கியில் கோர்த்து கையில் எடுத்துத் திரியைப் பற்றவைக்கவும். எரியும்பொழுது அதினின்று சுண்ணம் விழும். இச்சுண்ணத்தைச் சேகரித்து ஒரு பீங்கான் கிண்ணத்தில் வைத்து இரவு பனியில் வைக்கத் தண்ணீராகும். வெங்காரம் 3 பலம் கல்வத்திலிட்டு அதில் இத்தண்ணீரை ஊற்றி அரைத்து உருண்டை செய்து உலர்த்திப் புடம்போடவும். மறுபடியும் இம்மருந்தைத் தூள் செய்து பீங்கான் கிண்ணத்தில் போட்டுப் பனியில் வைத்தால் தண்ணீராகும். இத்தண்ணீரில் பாதரசத்தைப் போட்டு மத்தித்தால் பாதரசம் உருண்டையாகும். இவ்வுருண்டையை ஊமத்தங்காயின் நடுவில் வைத்து சீலைமண் செய்து 21 புடம் போட சிந்தூரமாகும். இவ்வங்க குரு சிந்தூரத்தை 1 பணவிடை வீதம் இருவேளையிலுமாக ஒரு மண்டலம் உட்கொள்ள சகலவித நோய்களும் தீரும்.

# பஸ்ம வகைகள்

## கோமூத்திர சிலாசத்தின் பஸ்மம்
(புருஷோத்தம தீர்த்தர் முறை)

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி வகைக்கு 3 பலம் எடுத்து அதில் 4 சேர் நீர்விட்டு எட்டிலொரு பங்குக் கஷாயம் இறக்கிக்கொள்ளவும். கால் சேர் சிலாசத்து கல்வத்திலிட்டு நைவாக அரைத்து வில்லைத் தட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து வராக புடத்தினால் தீயிட்டு எரிக்கவும் பஸ்மமாகும் (பற்பம்) ஆகும். இப்பஸ்மத்தைக் கீழ்க்குறிப்பிட்ட அனுபானத்தில் சாப்பிட்டால் சகல மேகரோகம், மூத்திரக் கிருச்சம், மூத்திரதாகம், ஜீர்ண ஜ்வரம் இவ்வாறான வியாதிகள் தீரும்.

***அனுபானம் :*** நெரிஞ்சில் கஷாயத்தில் கலந்துகொடுக்க மேக சம்பந்த நோய் தீரும். விஷ்ணுக்கிராந்தியின் கஷாயத்தில் கொடுக்க நெடுநாளைய சுரம் தீரும். நெய்யில் கொடுக்கக் கர்ப்பிணிகளின் நோய் விலகிக் கர்ப்பம் வளரும். தேன், திப்பிலி இவைகளில் கொடுக்க க்ஷய (காச) ரோகம் விலகும். நெய்யில் கொடுக்க மிகவும் மெலிந்த உடல் புஷ்டியுடனிருக்கும். இச்சிலாசத்து பற்பம் இரண்டு பாகமும், இலிங்க சிந்தூரம் 1 பாகமும், அப்பிரகச் சிந்தூரம் 1 பாகமும் இவ்வாறு மூன்றையும் கலந்து வேளை ஒன்றிற்கு 2 குன்றிடை இத்துடன் 5 மிளகின் தூளையும், தேனுடன் கூட்டிச் சாப்பிட்டால் க்ஷயரோகம் முதலானவைகள் தீரும். மேகவிகாரம் (வியாதி), சூலக்கட்டு மற்றும் சிரங்கு, உடலின் மேலுள்ள தடிப்புத் திட்டுகள் இவைகளுக்குத் தேனில் சாப்பிடத்தீரும்.

## வங்க பஸ்மம்
(வேறுவிதம்)

வெள்வங்கம் 4 பலம், மிக மெல்லியதாகத் தட்டி தகடுகளாக்கிக்கொள்ளவும். கோழி முட்டையின் ஓடு எடுத்துத் தூளாக்கி அதில் பாதித்தூளை ஒரு மண்சட்டியிலிட்டு, அதன்மேல் புளியிலையைப்போல் கத்தரித்துவைத்திருக்கும்

வங்கத் தகடுகளை ஒன்றின்மேல் ஒன்று படாதபடிவைத்து அதன்பேரில் மீதியுள்ள முட்டை ஓட்டின் தூளைப் பரப்பி, அதன்மேல் ஒரு மண்பானையைவைத்து மூடி சீலைமண் செய்து அடுப்பின் மேலேற்றி 10 சாமம் காடாக்னித் தீயினால் தீயிட்டு புடம்போட வங்கம் பற்பமாகும். இதை எடுத்துத்தூள் செய்து, வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொள்ளவும்.

***அளவு, அனுபானம் :*** ½ பணவிடை இருவேளையும் மேகவியாதிகளுக்குக் கொடுக்க மேகம் தீரும். சகல மேகத்திற்கும் கொடுக்கலாம். சாறு எடுக்கமுடியாத வனஸ்பதி (தாவரம்) மூலிகைகளில் இப்பற்பத்தைச் சிறிது கலந்து இடித்துச் சாறு பிழிந்தால் தாராளமாக சாறு வரும். இம்மருந்துக்கு அனுபானம் நெய் அல்லது வெண்ணெயிலும் கொடுக்க நன்மை தரும்.

**வங்க பஸ்மம்** (மற்றும் வேறு விதம்)
**(அய்யாக்கண்ணு பிள்ளை)**

வெள்வங்கம் 3 பலம், ரசம் 1 பலம், வங்கத்தை உருக்கி, அதில் பாதரசத்தைவிட்டு அதைக் கனமான அடியுள்ள ஒரு சட்டியில் இதைவைத்து அடுப்பிலேற்றி 4 பலம் மஞ்சள் தூளையும் அதில் சிறிது சிறிதாகப் போட்டு, இரும்புக் கரண்டியினால் கடைந்துகொண்டு வங்கத்தைப் பொறிக்கவும். இவ்வாறு 4 பலம் மஞ்சள் தூளையும் சிறிது சிறிதாகப் போட்டு பொரிக்க வங்கமானது வெண்ணிறமாக மாறும். அதை இரும்புக் கரண்டியால் சட்டியிலுள்ள வங்க பஸ்மத்தை நன்றாக நான்குபுறமும் சுரண்டி எடுத்து அச்சட்டியின் நடுப்பாகத்திலே குமித்துவைத்து, மேலொரு சட்டிமூடி சந்து பதியும்படிச் செய்து, அச்சட்டியை (மேல் மூடிய சட்டி) மல்லாந்து இருக்கும்படி வைக்கவும். பிறகு தீமூட்டி 1 சாமம் எரிக்கவும்.

மருந்து ஆறியபின் எடுத்துப்பார்த்தால் மிகவும் வெண்ணிறமான பஸ்மமாக இருக்கும்.

***மருந்தின் அளவு, அனுபானம் :*** வேளை ஒன்றுக்கு ½ பணவிடை வீதம் மூன்று வேளையுமாக 20 நாட்களுக்கு நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்க மேக ரோகங்கள் தீரும்.

## **கருவங்க பஸ்மம்** (வேறுவகை)

**(அய்யாக்கண்ணு பிள்ளை)**

இலிங்கம் 1 பலம் எடுத்து, எந்தவிதமான முறையிலும் இலிங்கத்தைக் கட்டிக்கொள்வது, இவ்விதம் கட்டிய இலிங்கம் 1 பலம், கருவங்கம் 1 பலம் இவைகளைக் கல்வத்திலிட்டு கருஊமத்தையிலைச் சாறுவிட்டு 4 சாமம் அரைத்து வில்லைகளாகத் தட்டி, ஒரு மண் சட்டியில் வைத்து மேலொரு சட்டி வைத்து மூடி சீலைமண் செய்து அடுப்பின் மேலேற்றி 4 சாமம் தீபாக்னி, கமலாக்னி, காடாக்னி தீயிட்டு வகையே நான்கு நான்கு மணி நேரமாக 4 சாமம் தீயிட்டு புடம் போடவும். மறுபடியும் அம்மருந்தில் கருஊமத்தையிலைச் சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து வில்லைத் தட்டி சட்டியில் மறுபடியும் வைத்து முன்பு கூறியபடி அடுப்பிலேற்றி காடாக்னி தீயால் 4 சாமம் எரிக்கவும். அதன்பின் மருந்து ஆறியதும் எடுத்துத் தூள் செய்துகொள்ளவும்.

***அனுபானமும், அளவும் :*** இருவேளையும் வேளைக்கு ½ பணவிடை மருந்து வீதம் 20 நாட்கள் நெய்யில் கொடுக்க மேக ரோகம் தீரும். வெண்ணெயிலும் கொடுக்கலாம். இச்சா பத்தியத்தை அனுஷ்டிக்கவும். இம்மருந்தினால் தாது விருத்தி ஏற்படும்.

## **நாக பஸ்மம்**

**(அய்யாக்கண்ணு பிள்ளை)**

நாகம் 3 பலம், இலுப்பை எண்ணெயில் 21 முறை உருக்கி ஊற்றவும் சுத்தியாகும். இவ்விதம் சுத்தியான நாகம் 1 பலம் எடை போட்டு எடுத்து, இரும்புக் கரண்டியில் போட்டு உருக்கி இவ்விதம் உருக்கிய நாகத்தை வேறு ஒரு கரண்டியிலிட்டு பாதி ஆறியதும் 1 பலம் பாதரசத்தை இதில் கலந்து நாகம், ரசம் இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு முள்ளங்கிச்சாறு ஊற்றி 4 சாமம் ஒட்டுப்புல் இலைச்சாற்றில் 4 சாமமும் அரைக்கவும். பிறகு உருண்டை செய்து ஒரு சேர் எடையில் இரும்பு மூசை செய்து அதில் அரைத்த நாக உருண்டையை நீட்டுவாக்கில் வைத்து

மூசையின் வாயின்மேல் ஒரு வட்டமான இரும்புவில்லையைப் பொருத்தி, சந்தில்லாமல் சீலைமண் செய்து தினமும் உபயோகப்படும் அடுப்பின் அடியில் ஒரு சாண் பள்ளம் தோண்டி அதில் இம்மூசையை வைத்து, மூடி ஒரு மாதம் கழித்து மூசையை எடுத்து அதிலுள்ள மருந்தை கல்வத்தில் இடவும். பிறகு அதை முள்ளங்கியிலைச் சாறுவிட்டு 4 சாமம் அரைத்து வில்லைத் தட்டி ஒரு மண் சட்டியில் வைத்து மேலொரு சட்டியை மூடி சீலைமண் செய்து அடுப்பிலேற்றி 4 சாமம் தீபாக்னி, கமலாக்னி, காடாக்னி இம்மூன்றுவகை தீயினால் கிரமமாக 4 சாமம் எரிக்கவும். ஆறிய பிறகு எடுத்துப் பார்க்க சிறந்த பஸ்மமாக இருக்கும். அதைத் தூள் செய்து டப்பியில் அடைத்துவைக்கவும்.

***அளவும், அனுபானமும் :*** வேளை ஒன்றுக்கு ½ பணவிடை வீதம் இருவேளையும் 20 நாட்களுக்குக் கொடுக்க மேக உபத்திரவம், மூத்திர அடைப்பு, சுவாசம், க்ஷயம் (காசம்) முதலான சகல வியாதிகளும் தீரும்.

சரீரத்திற்குத் தக்கபடி அனுபானத்தில் கொடுக்கவும். நெய், சர்க்கரை, தேன் இவைகளில் ஒன்றில் கொடுக்கவும். இந்த நாகபஸ்மத்திற்குச் சமமான வேறு நாகபஸ்மம் காண்பது அரிது கிடையாது. மிகவும் பிரபலமான மருந்து, அநேகம் பேர்களுக்கு இம்மருந்தை செய்துகொடுத்ததில் மிகவும் சித்திக்கு வந்தது. இதன் குணம் எவ்விதமான நோய்களானாலும் தீர்க்கும் வல்லமை உடையது. இதனால் தீராத நோயே இல்லை.

## சுவாசகுடோரி பஸ்மம்

சங்கு பாஷாணம் 1 பலம், சௌவீரம் 1 பலம், பாதரசம் 1 பலம், கந்தகம் 1 பலம் இவைகளைக் கோடசாலையின் சாற்றில் 4 சாமம் அரைக்கவும். 4 பல எடையுள்ள செம்புக்கிண்ணம் செய்து, இம்மருந்தை இக்கிண்ணத்தில் போட்டு நன்றாக நாலுபக்கமும் (லேபனம்) பூசிவிடவும். தாமிரக் கிண்ணத்தின் மேலே பொருந்தும் படியான அளவுக்கு வட்ட மூடியையும் செம்பினால் செய்து, வாயைமூடி சந்துபதிய சீலைமண் செய்து அடி மிகவும் உறுதியாக உள்ள சட்டியில் இருவிரல் உயரத்திற்கு சுண்டுமண்

(Fuller's Earth) போட்டு அதன்பேரில் தாமிரக் கிண்ணத்தை வைத்து சட்டி நிறைய அதே மண்ணால் நிரப்பி, சிந்தூரம் செய்யும் அடுப்பின் மேலேற்றி எட்டு சாமம் படாக்கினி தீயால் எரித்து, பிறகு எடுத்து கிண்ணியிலுள்ள மருந்தை ஜாக்கிரதையாக எடுத்துக் கல்வத்திலிட்டு தூள்செய்து கோடகசாலையின் (Justica Procumbra) சாறுவிட்டு 4 சாமம் அரைத்து உலர்த்தித் தூள்செய்து காசிக்குப்பியில் போட்டு, குப்பியின் வாயை பலபக்கல் (மாவுக்கல்) எடுத்து வட்டமாகச் செய்து மூடி சீலைமண் செய்து, ஒரு மண் சட்டியில் ஒரு விரற்கடை உயரம் மணலைப் போட்டு அதன்மேல் காசிக்குப்பியை வைத்து 4 சாமம் படாக்கினி தீயால் தீயிட்டு எரிக்கவும். சட்டி ஆறியபின் எடுத்துப்பார்த்தால் சிந்தூரம் முடிந்திருக்கும். இதை எடுத்துத் தூள்செய்து டப்பியில் அடைத்துக்கொள்ளவும்.

***அளவும், அனுபானமும் :*** வேளை ஒன்றிற்கு 1 பணவிடை வீதம் இருவேளையும் தேனில் கொடுக்க காசநோய் தீரும். ஜன்னி, சைத்தியம், வாயுவினால் உண்டாகும் தோஷங்கள், சுவாசங்கள் இவைகள் எல்லாம் இம்மருந்தினால் குணமடையும்.

## தாமிர பஸ்மம்

**(அய்யாக்கண்ணு பிள்ளை)**

பழங்கால செப்பு நாணயம் ஒன்றை எடுத்துத்தட்டி மிக மெல்லியதான தகடாக்கிக்கொள்ளவும். ஆலமரக் கொழுந்தின் சாற்றில் மூன்று நாட்கள் ஊறப்போடவும். பிறகு எலுமிச்சம் பழத்தின் சாற்றில் மூன்று நாட்களுக்கு ஊறவிட்டுப் பிறகு எடுத்து அதன்மேல் அருகம்புல்லின் சமூலத்தையும், முட்டையின் வெண்கருவையும் ஊற்றி அரைத்த அவ்விழுதைத் தாமிரத் தகட்டின்மேல் கவசம் செய்து, வெய்யிலில் உலரவைத்து மூசையில் வைத்து மேலே ஓடு மூடி சீலைமண் செய்து நெருப்புத் தணலில் வைத்து ஊதி எடுக்கவும். இவ்விதம் செய்ய தாமிரம் பஸ்மமாகும். இதை எடுத்து அதில் எருமைத்தயிர் (ஆடையுடன் கூடியதை) விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லைத் தட்டி ஆனைக்கல்லின் நடுவில் வைத்து சீலைமண் செய்து கஜபுடமாகத் தீயிட்டு எரிக்கவும், பிறகு இது பஸ்மமாகும்.

அனுபானம் : தேனில் ½ விராகனெடை இரண்டு வேளையுமாகக் கொடுத்துவர சுவாசகாசம் தீரும். இப்பஸ்மத்தைப் பெரிய பிரபலமான மருந்துகளுடன் கூட்டிக் கொடுப்பதற்குரியது.

## தாமிர பஸ்மம் (வேறுமுறை)

தாமிர அரப்பொடி எடை போட்டு 1 பலம், பாகயிலைச் சாறு 8 படி எடுத்துக்கொள்ளவும். இதை ஒரு பெரிய குடத்தில் விட்டு தாமிரப் பொடியையும் அதில் போட்டு மண்சட்டியை மேல்மூடி சீலைமண் செய்து அடுப்பின் மேலேற்றி கொன்னைமர விறகால் 12 சாமம் படாக்கினி தீயால் தீயிட்டு எரிக்கவும்.

இவை ஆறியபின் எடுத்துப் பார்த்தால் பஸ்மமாயிருக்கும். குடத்திலுள்ள பச்சிலைச் சாறும் பஸ்மமாயிருக்கும். அதையும் எடுத்துத் தாமிர பஸ்மத்தில் கலந்து தூள்செய்து டப்பாவில் போட்டு வைத்துக்கொள்ளவும்.

இம்மருந்தை சகல வியாதிகளுக்கும் கொடுக்கலாம். பூபதி, சிந்தாமணி இவ்வித உயர்ந்த மருந்துகளுடன் கூட்டி உபயோகப்படுத்தலாம்.

## லேகிய வகைகள், ரஸாயன வகைகள்

## மஹாவில்வாதி லேகியம்
(புருஷோத்தம தீர்த்தர்)

வில்வ வேர், பாதிரி வேர், தூதுவளை வேர், குட்டிவிலா வேர், வேப்ப ஈர்க்கின் தோல் குறை நாழி 6½ சேர். இவ்வைந்து வகையும் வகைக்கு 1 சேர் எடுத்து மெல்லியதாக நறுக்கி ஒரு பானையிலிட்டு, 20 சேர் தண்ணீர்விட்டு 2 நாள் ஊறவைத்துப் பிறகு அதை அடுப்பிலேற்றி 4 சேர் கஷாயமாகக் காய்ச்சி இறக்கவும். இதில் சுக்கு, திப்பிலி, மிளகு, யானைத் திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சீந்தில், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, இலவங்கப்பட்டை, தமாலபத்திரி, ஏலம், சிறுநாகப்பூ, ஜீரகம், இலவங்கப்பத்திரி, சடாமாசி, கிராம்பு,

நெல்பொரி, பருத்திப்பருப்பு, மல்லிப்பருப்பு இந்த 24 வகைகளும் வகைக்கு 4 விராகனெடை வீதம் எடுத்து எல்லாவற்றையும் தூள் செய்துகொள்ளவும்.

சுண்ணாம்பு நீத்த இஞ்சிச்சாறு ¼ சேர், துருஞ்சிப்பழச் சாறு ¾ சேர், மாதுளைச்சாறு ½ சேர், சீனி சர்க்கரை 2½ சேர் இவைகளை முன்பு இறக்கிய கஷாயத்தில் லேகியம் கிண்டும் பக்குவத்தில் லேகியத்தைத் தயாரிக்கவும். மேலும் அதில் வைத்திருக்கும் 24 வகைத் தூளையும் போட்டு 2½ பலம் பசுவின் நெய்யையும் கலந்து லேகிய பக்குவமாய்த் தயாரித்து எடுத்துக்கொள்ளவும். லேகியம் ஆறிய பிறகு வடிகட்டிய தேன் 3½ தோலா போட்டு நன்றாகக் கலந்து பாத்திரத்தில் எடுத்துவைக்கவும். பாத்திரத்தை நன்றாக மூடி 10 நாட்களுக்குத் தானிய புடத்தில்வைத்து பிறகு உபயோகப்படுத்தவும்.

***அளவு :*** காலை, மாலை இருவேளை ஒருகொட்டைப் பாக்கு அளவு கொடுக்கவும்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம்.

***தீரும் வியாதிகள் :*** சகல பித்தம், வாந்தி, கபம், அக்னி மாந்தம் (பசியின்மை), ருசியின்மை இவைகள் தீர்ந்து இரத்த விருத்தி உண்டாகும்.

## லகு வில்வாதி லேகியம்

(புருஷோத்தம தீர்த்தர்)

வில்வமரத்தின் பெரிய வேரை எடுத்து, மேல் பிராணியை எடுத்துவிட்டு மெல்லியதாய் சீவித் தூள்செய்யவும். அவ்விதம் செய்த தூளில் 10 பலம், ஒரு பானையில் போட்டு 20 சேர் தண்ணீர்விட்டு 2 நாட்களுக்கு ஊறவைத்து, பிறகு வேகவைத்து 2½ சேர் கஷாயமாக இறக்கிக்கொள்ளவும். நீத்த இஞ்சிச்சாறு 1 சேர், சர்க்கரை 2 சேர் இவைகளைக் கலந்து லேகியம் தயாரிப்பது. பிறகு சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, கருவாப்பட்டை, தாளிசபத்திரி, ஏலம், தமாலபத்திரம், சாமாசி, கிராம்பு, கோஷ்டம், அதிமதுரம், ஜீரகம்,

ஓமம், வாயுவிளங்கம், கோரைக்கிழங்கு, மல்லி, திராக்ஷை, பேரீச்சங்காய் இந்த 21 வகையும் வகைக்கு 4 வராகனெடை வீதம் எடுத்து நைவாக அரைத்து முன்கூறிய பாகில் போட்டுப் பக்குவமாய் லேகியம் கிண்டவும். ஆறியபின் ¼ சேர் தேனையும் கூட்டி 10 நாட்களுக்குத் தானிய படத்தில் வைத்துப் பிறகு உபயோகிக்கவும்.

அனுபானமும், அளவும் : இருவேளைகளும் ஒரு கொட்டைப்பாக்கு அளவு கொடுக்கவும். இதனால் அக்னிமாந்தம், ருசியின்மை, இருளம், எலும்பு சுரம், பித்தம், வாதம், கழிச்சல், பித்தசூலை இவைகள் தீரும். இச்சாபத்தியம் வாயு பதார்த்தங்கள் விலக்கவும்.

## கண்டாத்ரிகம் செய்யும் முறை
### (முத்துசாமி தீக்ஷிதர்)

இஞ்சி 16 பலம், கற்கண்டு 10 பலம், மிளகு 12 விராகன் எடை, திப்பிலி 8 விராகனெடை, கண்டத்திப்பிலி 8 விராகனெடை சுக்கு 5 விராகனெடை, ஜாதிக்காய் 5 விராகனெடை, ஏலம் 5 விராகனெடை, கிராம்பு 5 வராகனெடை, மூங்கிலுப்பு 5 விராகனெடை. இஞ்சி, சர்க்கரை இவ்விரண்டைத் தவிர மற்ற எட்டு வகைகளையும் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். இஞ்சியின் மேற்றோலை நீக்கித் துண்டுகளாக்கிப் பசுவின் நெய்யில் கருகாமல் பொன்னிறமாக வறுத்து எடுத்து அம்மியில் வைத்துத் தூள் செய்யவும். அதன் பிறகு சர்க்கரையையும், அத்துடன் சேர்த்து 8 பலம் பசுவின் நெய்யைக் கலந்து சிறிது சூடாக்கி வஸ்திரகாயம் செய்த தூளில் இவைகளைச் சேர்த்து எல்லாவற்றையும் நன்றாகக் கலந்து வைக்கவும்.

***இதன் அளவும், தீரும் வியாதிகளும் :*** 3 விராகனெடை முதல் 5 விராகனெடை வரையில் சரீர பலத்தை அனுசரித்துக் கொடுக்க வாந்தி, அக்னி மாந்தம் (ஜீரணக்குறைவு) இவைகள் தீரும்.

## தசமூலாதி லேகியம்

வில்வ வேரின் மேல்தோலை நீக்கி மற்றதை மட்டும் வாதமடக்கி, பாதிரிவேர், சிறு செருப்படி, சங்கம், குப்பி வேர், கும்மடுதேக்கு மரவேர், கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத்தரி வேர், நெருஞ்சி வேர், மூக்குத்திப்பூடு வேர், பாஷாணபேதி வேர், முருங்கை வேர், திப்பிலி, நாட்டு வேர், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, தேவதாரு, சாரணை வேர், சங்க வேர் இவைகள் வகைக்கு 4 பலம். இவைகளை இடித்து 40 சேர் தண்ணீர்விட்டு மூன்று நாட்கள் தண்ணீர் விட்டு மூன்று நாட்கள் ஊறவைக்கவும். நான்காம் நாள் இதை அடுப்பிலேற்றி 10 சேர் கஷாயமாக சுண்டவைத்து இறக்கி, அதில் பழைய வெல்லம் 4 சேர், இஞ்சி சார் 2 சேர் இவ்விரண்டையும் இக்கஷயாயத்தில் சேர்த்து பக்குவமாய் பாகு ஆகும் சமயத்தில் அதில் சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, லவங்கப்பட்டை, தமாலபத்திரி, ஏலம், கோரைக்கிழங்கு, இரும்பு அரப்பொடி, பொரித்த பெருங்காயம், ஓமம் இவைகள் வகைக்கு 5 வராகனெடை எடுத்து தூள்செய்து வஸ்திரகாயம் செய்து கொண்டு இத்துடன் தேன் 1 சேர் இவைகளை மேற்கூறிய பாகில் சேர்த்து பாகு நன்றாய் பக்குவமானதும் நன்றாக மத்தித்து எடுத்து பத்திரப்படுத்தவும்.

இம்மருந்தின் அளவு : இதன் அளவு இரண்டு வராகனெடை முதல் நான்கு வராகனெடை வரையில் கொடுக்கவும்.

இதன் பத்தியம் : புளி, கடுகு, எண்ணெய், மிளகாய் வற்றல் இவைகளை விலக்கவும். புளிக்காத மோர், வெள்ளாட்டுப்பால், பழைய நெய், அரைக்கீரை இவைகளைப் பத்தியத்திற்குச் சேர்த்துக்கொள்ளவும்.

## மன்மத சிந்தாமணி லேகியம்
### (பாபு வைத்யர்)

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, ஜீரகம், சோம்பு,

கசகசா, சிறுநாகபூ, பறங்கிப்பட்டை, மல்லி, கோஷ்டம், கண்டந்திப்பிலி, அதிமதுரம், சன்னலவங்கப்பட்டை, ராமபத்திரி, குரோசாணி ஓமம், கடலைப்பருப்பு¼ சேர், உளுத்தம்பருப்பு ¼ சேர், நிலவேம்பு, சிறுதேக்கு, காட்டுக் கிராம்பு, சாலாமிசிரி, மைதாலகடி, ருமிமஸ்தகி, இசுபுகோல் விதை, வாதுமைப் பருப்பு, பூனைக்காலி விதை, வாலுழுவையரிசி, ஏலம், குங்குமப்பூ, திராக்ஷைப்பழம், கூகை நீர், நறுவிலி விதை, நெருஞ்சிமுள், ஆடாதோடை விதை, பூலாவிதை, முருங்கை விதை, முசுட்டை விதை, நீர்முள்ளி விதை, நத்தைசூரி விதை, தேத்தான் விதை, நரிப்பயறு, நாயுருஞ்சிவிதை, துத்தி விதை, வாகை விதை, கையாந்தகரை விதை, கண்டங்கத்தரி விதை, துளசி விதை, பொடுதலை விதை, சாரப்பருப்பு, நாகப்பூ, தூதுவளை, வெந்தியம், சித்தரத்தை, பற்பாடகம், கஸ்தூரி மஞ்சள், நாட்டு வேர், கஞ்சான் கோரை, காய்ந்த ஆலந்துளிர், அல்லிக்கிழங்கு, குட்டியக் கிழங்கு, அமுக்கராக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, செங்கழுநீர் கிழங்கு, இக்கிழங்குகளின் வகைகள் யாவற்றையும் உலர்த்தித் தூள் செய்து, அவ்விதம் தூள் செய்தது வகை ஒன்றிற்கு ½ பலம் வீதம் நிறுத்து எடுத்துக்கொள்ளவும். கடைசாமான் யாவும் வகைக்கு 1½ பலம் வீதம் எடுத்து அதில் மேற்கூறிய தூளையும் கலந்து மென்மையாக இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். சீந்தில் சர்க்கரை ½ பலம், பச்சை வெட்டு குங்குலியத்தைச் சுத்தி செய்து அதில் ¼ பலம் இவ்விரண்டையும் சூரணத்தில் சேர்த்து பிறகு ஆலம்பால், அத்திப்பால், இச்சிப்பால், ஓதியன்பால், பிரயம்பால், செவ்வகத்திப்பூச்சாறு, பருத்தி பிஞ்சிச்சாறு, ஆவாரம்பூச்சாறு, பாலும் சாறும் வகைக்கு ½ பலம் இதையும் சூரணத்தில் சேர்த்து சூரணத்தை உலர்த்தி இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து மதனகாமப்பூ ½ வராகனெடை, அபினி ½ வராகனெடை இவைகளையும் கலந்து மக்துமி சர்க்கரை 4 சேர், ஒருபடி தண்ணீரில் சேர்த்து நன்றாகக் கலந்து வடிகட்டி, பாகு செய்து அதில் எல்லா சூரணங்களையும் போட்டு 3 வராகனெடை நெய்யில் கஞ்சாவை வறுத்து கஞ்சா நீங்கலாக நெய் மட்டும், பசுவின் நெய் 3 சேர், தேன் 2 சேர் இவைகள் எல்லாம் லேகியத்தில் சேர்த்துப் பக்குவமாய் லேகியம் செய்துகொண்டு வேளை ஒன்றிற்கு ஒரு கழற்சிக்காயளவு இருவேளையும் கொடுக்கவும்.

## மன்மத சிந்தாமணி மேவா
### (பாபு வைத்தியரின் முறை)

சுக்கு, திப்பிலி, மிளகு, பற்பாடகம், குரோசாணி ஓமம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சிறுநாகப்பூ, அதிமதுரம், ஏலம், சித்தரத்தை, சன்ன லவங்கப்பட்டை, நீர்முள்ளி விதை வகைக்கு 1½ பலம், மைதலாகடி, சாலாமிசிரி, ரூமிமஸ்தகி, இசுபுகோல் விதை, சாரப்பருப்பு, துத்திவிதை, நத்தைசூரி விதை, வாகை விதை, நன்னாரி, வெட்பாலை அரிசி, திராக்ஷைப்பழம், கண்டத்திப்பிலி, கொண்டேஜன்னக் கிழங்கு, கோஷ்டம் இவைகள் வகைக்கு 1 பலம். செங்கழுநீர், கிழங்குவத்தல், நைதல் கிழங்கு வத்தல், ஆம்பல் கிழங்கு வத்தல், அமுக்கராக்கிழங்கு வத்தல், ஆவாரம் விதை, முருங்கை விதை, நாயுருஞ்சி விதை, கசகசா இவைகள் வகைக்கு 2 பலம், சிறுநாகப்பூ, குங்குமப்பூ, தாமரைப்பூவின் கேசரம் இவைகள் வகைக்கு ¼ பலம். வாதுமைப் பருப்பு, அக்ரோட் பருப்பு, பிஸ்தா பருப்பு, கைபாந்தகரை விதை, சிறுகாஞ்சோரி விதை, பூனைக்காலி விதை இவைகள் வகைக்கு ¼ பலம். ஈர வெங்காய விதை 1 பலம், பரங்கிப்பட்டை 1 பலம், கோதுமை மாவு ¼ படி, மூங்கிலரிசி மாவு ¼ படி, அல்லிவிதை, செங்கழுநீர் விதை, சாமை அரிசி, தினை அரிசி, பாசிப்பயறு, உளுந்து, நெல்பொரி, புல் அரிசி, கடலை, திப்பிலி இவைகள் யாவற்றையும் கொண்டுவந்து $^1/_8$ படி மாவு செய்துகொள்ளவும். கடை சாமான்கள் யாவற்றையும் இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்யவும். மேற்கூறிய தூள் யாவும் மாவில் சேர்த்து 4 சேர் கற்கண்டு, பசும்பால் 2 சேர் இவைகளையும் கூட்டிப் பாகு செய்து, சகல சூரணங்களையும் அதில் போட்டு, நன்றாகப் பிசைந்து 4 வராகனெடை வீதம் வில்லைகள் தட்டி இக்கணக்கில் எவ்வளவு வில்லைகள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்துகொண்டு அவைகளை பசுவின் நெய்யில் பக்குவமாய் வறுத்து எடுத்துக்கொள்ளவும்.

***இம்மன்மத சிந்தாமணி மேவாவின் அளவு :*** வேளை ஒன்றுக்கு காலை, மாலை இருவேளையும் இரண்டு வில்லைகள் வீதம் கொடுக்கவும்.

***இதனால் தீரும் வியாதிகள் :*** இதனால் 84 வகையான வாத ரோகங்கள், வாதமேகம், பித்தமேகம், சீழுடன் கூடிய பிரமியம், மூத்திரகிரிச்சரம், கிராணி, யோனிசூலை (சூதகவலி), எலும்பு சம்பந்தமான நோய்கள், எலும்பு சம்பந்த சுரம், க்ஷயம் இவ்வகையான சகல நோய்களும் தீரும். தாதுபுஷ்டி, தேகபுஷ்டி, தேகவர்ணம் இவ்விதமானவைகள் உண்டாகும்.

***பத்தியம் :*** இச்சாபத்தியத்தைக் கைக்கொள்ளவும்.

## **மகாவில்வாதி லேகியம்** (வேறுமுறை)
(பாப்ப வைத்தியர்)

வில்வவேரின் மேற்றோல் மட்டும் நீக்கிய வில்வவேர் 3 சேர், நன்னாரி வேர், கொழிஞ்சில் வேர், சர்க்கரை நார்த்தையின் வேர், எலுமிச்சை வேர், விளாமர வேர், குட்டி விளாவேர், முசுமுசுக்கை வேர், பாஷாணபேதி வேர், கீழாநெல்லி வேர், ஆவாரை வேர், அம்மான் பச்சரிசி வேர், சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், நரிப்பயறு வேர், காட்டுப்பயறு வேர், நெய்ச்சட்டி வேர், அருகம் வேர், அத்தி வேர், துத்தி வேர், நருவிலிவேர், சங்கபுஷ்பியின் வேர், பனை வேர், ஈச்சம் வேர், கருவவேர், அமுக்கராகிழங்கு, நிலத்தாவாரை வேர், சீயக்காய் மரத்தின் வேர் (மேல் தோல்நீக்கி), பொன்முசுட்டை வேர், ஊசிப்பாலை வேர், பெருந்துத்தி வேர், தகரை வேர் (மேல் தோல்நீக்கி), தக்காளி வேர், சீந்தில் வேர் (மேல் தோல்நீக்கி), வெட்டிவேர், விலாமிச்சை வேர் இவைகள் வகைக்கு 1½ பலம் வீதம் எடுத்துக்கொள்ளவும், சீயக்காய் ஈர்க்கு, வேப்ப ஈர்க்கு, ஆவாரை ஈர்க்கு, பெருந்துத்தியின் ஈர்க்கு, குடசப்பாலை ஈர்க்கு, துத்தியிலை ஈர்க்கு, கஞ்சாங்கோரை ஈர்க்கு, நன்னாரி ஈர்க்கு, மாவிலை ஈர்க்கு, ஓதியன் ஈர்க்கு, கருவை ஈர்க்கு, வடுத்தரின் ஈர்க்கு இவைகள் வகைக்கு 1 பலம் வீதம் கொண்டுவரவும். கோரைக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, நீல அல்லிக்கிழங்கு, நெய்ச்சட்டிக் கிழங்கு, நிலாவாரைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, குட்டிக் கிழங்கு, பச்சைநாடன் வாழைக்கட்டை இவ்வகைக்கு கிழங்கு வகைகளை நன்றாக உலர்த்தி வகைக்கு 1 பலம் வீதம் எடுத்துக்கொள்ளவும்.

சுக்கு, திப்பிலி, மிளகு, சன்னலவங்கப்பட்டை, தமால பத்திரி, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, ஜீரகம், மல்லி, மூங்கிலுப்பு, அதிமதுரம், வாயுவிளங்கம், சடாமாஞ்சி, கருஞ்சீரகம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, கோஷ்டம், செவ்வியம், நாட்மூலம், சந்தனத்தூள், பரங்கிப்பட்டை, கருவாப்பட்டை, தகரை, சிறுதேக்கு, கற்கடசிங்கு, துராலபா, பற்பாடகம், அறத்தை, ஜண்பகமொட்டு, வால்மிளகு, நீர்முள்ளிவிதை, தக்கோலம், சோம்பு, வெந்தயம், தாமரைத்தண்டு, இசுபுகோல் விதை, தேத்தான் விதை இவைகளைக் கொணர்ந்து, அதிலுள்ள கல், மணல் முதலியவற்றை நீக்கி வகை ஒன்றுக்கு 10 பலம் வீதம் எடுத்து சூரணித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும்.

வாதுமைப் பருப்பு, பருத்திப் பருப்பு, திராக்ஷை, பேரீச்சம்பழம் இவைகள் வகைக்கு 3 பலம் இவைகளில் சூரணித்த வகைகளையும் போட்டு நைவாக அரைக்கவும். ஜாதிக்காய் 4 வரகனெடை, ஜாதிப்பத்திரி 4 வராகனெடை, ஏலம் 3 வராகனெடை, குங்குமப்பூ ½ வராகனெடை, கிராம்பு 2¼ வராகனெடை, கோரோசனை ¼ வராகனெடை பச்சைக்கற்பூரம் 1/8 வராகனெடை இவ்வித சாமான்களை நைவாக அரைத்து அச்சூரணத்தில் சேர்க்கவும். பிறகு எலுமிச்சம்பழம், நாரத்தம் பழம், கொழுஞ்சிப்பழம், மாதுளைப்பழம், துருஞ்சிப்பழம், ஈரவெங்காயம், இஞ்சி இவைகள் வகைக்கு ¼ சேர் எடுத்து விளாம்பழச் சோற்றையும் கலந்து எல்லாச் சாற்றையும் வடிகட்டிக் கொள்ளவும். முன்பு கூறியவைகளைச் சூரணித்து வைத்திருக்கும் சாமான்களில் சாற்றை சிறிது சிறிதாக விட்டு நன்றாகக் கலந்து வெய்யிலில்வைத்து ஒருநாளில் சூரணத்தில் உள்ள எல்லா சாறும் வற்றும்படியாகச் செய்யவும். பிறகு சூரணம் உலர்ந்ததும் அவைகளை எடுத்து யாவற்றையும் இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும்.

முன்பு கூறிய ஈர்க்கு வகைகளையும், கிழங்கு வகைகளையும் எடுத்து சிறு துண்டுகளாக நறுக்கி பெரிய வாணலியில் போட்டு 8 படி தண்ணீரும்விட்டு ஒருபடி

கஷாயமாகக் காய்ச்சி இறக்கிக்கொள்ளவும். அதை வடிகட்டிக்கொண்டு ஒரு பாத்திரத்தில் எடுத்துவைத்துக் கொள்ளவும்.

பசுவின் பால் 2 சேர் நன்றாகக் காய்ச்சி எலுமிச்சம் பழச்சாறு விட்டு அதை முறித்து, அதன் தெளிவு தண்ணீரை மட்டும் கஷாயத்தில் சேர்க்கவும். கற்கண்டு 4 சேர் கஷாயத்தில் போட்டு பக்குவமாய்ப் பாகு தயாரிக்கவும். பாகு பக்குவமான பிறகு முன்பு தயாரித்துவைத்திருக்கும் இரு சூரணங்களையும் ஒன்றுகூட்டி பாகில் சேர்க்கவும். பிறகு பசுவின் நெய் 3 சேர், தேன் 3 சேர் இவைகளையும் சேர்க்கும்பொழுது லேகியம் மிகுதியான பிசுபிசுப்புத் தன்மையில்லாமல் பக்குவமாய்ச் சேர்த்து செய்ய வேண்டியது. அதன்பிறகு கிண்டி இறக்கிவிடவும்.

வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்களவு காலை, மாலை இருவேளையுமாகக் கொடுத்துவரவும்.

***தீரும் வியாதிகள்:*** வாதம், பித்தம், சிலேத்துமத்தினால் உண்டான நடுக்கல் முதலியன தீரும். வாத, பித்த, சிலேத்துமத்தினால் உண்டான க்ஷயம் முதலானது தீரும்,. கபசுரம், வாதசுரம், பித்தசுரம், நெடுநாளையசுரம், வாயினின்று நீர் ஊறுதல், வாயின் வழியாக சளி வெளிவருவது, விக்கல், ருசியின்மை, இருதய ரோகம், முகவாதம், பித்தம், கொப்பூழ் தோஷம், வறட்சி இவ்வகையான நோய்கள் தீரும், இரத்த விருத்தி, வீர்யவிருத்தி உண்டாகும்.

## குண்டலாதி லேகியம்
(வாட்டத்து ஞானியார்)

சங்கிலையின் வேர், கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, நெருஞ்சில் வேர், குத்தனுகுதம்பை வேர், குமிழம் வேர், பெருமுட்டி வேர், முன்னை வேர், வில்வ வேர், பாதிரி வேர், சிறுதேக்கு, நாட்மூலம், சீந்தில் இவைகளைக் கொண்டுவந்து ஒவ்வொன்றும் 1 பலம் எடையில் எடுத்துக்கொண்டு நன்றாக இடித்து ஒரு பானையிலிட்டு, அதில் 8 மரக்கால் நீரைவிட்டு 1 மரக்கால் அளவுக்குக் கஷாயமிறக்கி வடிகட்டிக்கொள்ளவும். பழைய வெல்லம் ஒரு தூக்கு (6 சேர் அல்லது 144 தோலா) எடை

எடுத்துப் பானையில் போட்டுக் கரைத்து வடிகட்டி அடுப்பிலேற்றிப் பாகு பக்குவமாய்க் காய்ச்சி, பக்குவமாய் வரும் தருணத்தில் அதில் திப்பிலி 20 பலம், கூகைநீர் 4 பலம், ஏலம் 3 பலம், லவங்கப்பத்திரி 3 பலம், இலவங்கப்பத்திரி 3 பலம், இலவங்கப்பட்டை 3 பலம், ஜீரகம் 3 பலம், ஓமம் 3 பலம், பெருங்காயம் 3 பலம், சிறுதேக்கு 2 பலம், கர்கடகசிங்கி 2 பலம், லோகசிந்தூரம் 4 பலம், மிளகு 4 பலம், சுக்கு 8 பலம், மொத்தம் 13 சேரில் லோஹசிந்தூரத்தை மட்டும் பிரத்யேகமாக எடுத்துவைத்து, மற்ற சாமான்களை இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து, அச்சூரணத்தில் சிந்தூரமும் கலந்து, அதை பாகு தயாரித்து வைத்திருப்பதில் போட்டுக் கரண்டியால் மத்தித்து, 2 சேர் தேனையும் கூட்டி மறுபடியும் நன்றாகக் கரண்டியால் மத்தித்து ஒரு பீங்கான் கிண்ணத்தில் வைத்துக்கொள்ளவும்.

இருவேளையும் 20 நாட்களுக்கு இந்த லேகியத்தை உட்கொண்ள சுவாசகாசம் முதலிய நோய்கள் வராது.

***பத்தியம் :*** இச்சாபத்தியம் அனுசரிக்கவும்.

## அஷ்டசிஞ்சாதி லேகியம்
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

கடுக்காய் 90, தான்றிக்காய் 50, நெல்லிமுள்ளி 25, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், இந்துப்பு, பெருங்காயம் இவைகள் வகைக்கு 1½ பலம், லோக அரப்பொடி 1¼ சேர், கோமூத்திரம் 2 படி, கற்றாழைச்சாறு 1 படி, ஆடாதோடைச்சாறு 1 படி, இம்மூன்று வகைச் சாற்றையும் கலந்து ½ லோ (இரும்பு)ப் பொடியும் போட்டு 4 சாமம் அரைக்கவும், மேலே சொல்லிய கடைச்சாமான்களை நைவாகத் தூள்செய்து வஸ்திராகயம் செய்து அரைத்த அரப்பொடியை, அரைத்த சாறுபோக மீதியுள்ள சாற்றில் ½ சேர் தூளைக் கருப்புச் சட்டியில் கலந்து அடுப்பின் மேலேற்றி பாகு பக்குவமாய் வரும் சமயத்தில் அரப்பொடி கலந்த மருந்தையும் போட்டு ½ சேர் தேனையும் கூட்டி லேகிய பக்குவத்தில் இறக்கிக்கொள்ளவும்.

***அனுபானம், அளவு, தீரும் வியாதிகள் :*** ஒரு வேளைக்கு ஒரு குன்றிடை வீதம் கொடுக்கவும். பாண்டு, சோகை, காமாலை, மகோதரம், நீராம்பல், பெரும்வயிறு, குடல்வாதம், இருமல், சுவாசகாசம், பல பித்த ரோகங்கள் இவ்வகையான வியாதிகள் தீரும்.

## பல்லாதி (சேங்கொட்டை) லேகியம் - 1

### (அய்யாக்கண்ணு பிள்ளை)

சேங்கொட்டை 5 பலம், பச்சை நிலக்கடலை 5 பலம், பரங்கிப்பட்டை 5 பலம், நெல்லிமுள்ளி 5 பலம், வெல்லம் 15 பலம், சுத்தி செய்த கந்தகம் ½ பலம் இவைகளை இடித்து லேகியமாகச்செய்து, புங்கவிதைபோல் உருண்டைகள் செய்து கொள்ளவும். ஒரு மண்டலம் இம்மருந்தைக் கொடுக்க மேகவாயு, விஸர்ப்பம், கிரந்தி இவைகள் நீங்கும்.

***பத்தியம் :*** புளிப்பு, கைப்பு விலக்கவும். இவ்வாறு செய்ய வியாதிகள் தீரும். சேங்கொட்டையை நன்றாக சுத்திசெய்து சேர்த்துக்கொள்ளவும்.

## பல்லாதி (சேங்கொட்டை) லேகியம் - 2

### *(வேறுவிதம்)*

### (அய்யாக்கண்ணு பிள்ளை)

பழைய வெல்லம், கொப்பரை, எள், சித்திரமூலம், ஓமம், சேங்கொட்டை, பூண்டு, கடுகுரோகிணி, மிளகு, நீரடிமுத்து இவைகள் வகைக்கு ½ சேர் வீதம் சமபாகம் எடுத்து லேகியம் செய்துகொள்ளவும்.

***அளவு, தீரும் நோய்கள் :*** பெரிய கழற்சிக்காய் பிரமாணம் இருவேளையும் ஒரு மண்டலம் (40 நாட்கள்) உட்கொள்ள மேகவாயு, சூலை, ஊரல் இவைகள் தீரும்.

***பத்தியம் :*** புளிப்பு, கைப்பு நீக்கவும். சகல மேக வாயுவுக்கும் உகந்தது.

## பல்லாதி (சேங்கொட்டை) லேகியம் - 3

*(மற்றொரு விதம்)*

(அய்யாக்கண்ணு பிள்ளை)

சேங்கொட்டை 1 சேர், ஒருதலை வெள்ளைப்பூண்டு 1 சேர், ஓமத்தவிடு 1 சேர், கருவேலம் பிசின் ½ சேர், கொப்பரை 1 சேர், பழைய வெல்லம் 1¼ சேர், சேங்கொட்டையின்முளை எடுத்துவிடுவது, பூண்டின் நடுநரம்பு எடுத்துச் சேர்க்கவும். வெங்காரத்தைப் பொரித்து எடுத்துக்கொள்ளவும், கொப்பரையின் மேற்றோல் நீக்கி சேர்த்துக்கொள்ளவும், எல்லா மருந்துகளையும் கல்லுரலில் போட்டு மென்மையா இடித்து கடைசியில் ½ சேர் விட்டு இடித்துத் தூள் செய்து, பிறகு எடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம், அளவு, தீரும் நோய்கள் :*** காலை, மாலை இருவேளைகளிலும் பெரிய கழற்சிக்காய் பிரமாணம் கொடுத்தால் சகல மேகவாயு, சகல மேகம், சகல சொறி, விஷம் தீரும். ஒரு மண்டலம் சாப்பிட எல்லாவித சொறி முதலியன தீரும்.

***பத்தியம் :*** புளிப்பு, கைப்பு விலக்கவும்.

## பல்லாதி (சேங்கொட்டை) லேகியம் - 4

*(மற்றும் வேறுமுறை)*

(அய்யாக்கண்ணு பிள்ளை)

சேங்கொட்டை 3 சேர், பரங்கிப்பட்டை 3 பலம், சங்கம் வேர், பிரப்பங்கிழங்கு, காட்டு சீரகம், கார்போக அரிசி, கருஞ்சீரகம், வெள்ளருகு, ஓமம், கடுக்காய், தான்றிக்காய், காட்டு மிளகின் தோல், இசுவரிவேர், பொடபத்திரி வேர், சித்திரமூல வேர், திப்பிலி மூலம், சித்தரத்தை வகைக்கு 2 பலம், நீரடிமுத்து 3 பலம், குங்குலியம் 3 பலம், பூண்டு 1 சேர், எள்ளு 2 பலம், வெல்லம் 6 சேர், நெய் ½ சேர், தேன் ½ சேர் இவைகளை ஒன்று கலந்து இடித்து லேகியம் செய்யும்முறை : நீரடிமுத்து, பூண்டு, எள், வெல்லம் நெய், சேங்கொட்டை, தேன் இவைகளைத் தனித்தனியே வைக்கவும். மற்ற மருந்துளை இடித்து

வஸ்திரகாயம் செய்து மறுபடியும் கல்லுரலில் சேங்கொட்டையைப் போட்டு இடித்துத் தூள்செய்து முறத்தில் போட்டுப் புடைத்துக் கப்பியை நீக்கி, பிறகு கப்பியைப் போட்டு மறுபடியும் இடித்துக்கொள்ளவும். இவ்விதம் மும்முறை செய்தபின் மிஞ்சிய கப்பியை நீக்கிவிடவும். இவ்விதம் இடித்தெடுத்த சேங்கொட்டைத் தூள் எண்ணெய் கலந்ததாக இருக்கும். இவ்விதமிருக்கும் சேங்கொட்டைத் தூளை உரலில் போட்டு அத்துடன் முன்பு எடுத்துவைத்த எள், பூண்டு, கசப்பு, விளாம்பழவிதை இம்மூன்றையும் அம்மியில் வைத்து நைவாக அரைத்து, உரலில் போட்டிருக்கும் சூரணத்துடன் கலந்து 6 சேர் வெல்லத்தையும், ½ சேர் நெய்யும், ½ சேர் தேனையும் அதில் சேர்த்து நைவாக அரைத்து லேகிய பக்குவமாய்ச் செய்துகொள்வது. இவ்வாறுசெய்த லேகியத்தை எடுத்து ஒரு பச்சிலையில் வைத்துக்கொள்வது.

***அளவும் தீரும் நோயும் :*** இருவேளையும் கொட்டைப் பாக்களவு ஒரு மண்டலம் கொடுத்துவந்தால் மேகவாயு, சூலை வாதம், கிராணி, பெருவயிறு, அஜீர்ணம், வயிறு இரைதல், முழங்கால் வலி, உள்ளங்கால் வலி, சந்நிவாதம் இவ்வித நோய்கள் எல்லாம் தீரும்.

***பத்தியம் :*** இச்சா பத்தியம் கையாளவும்.

## பல்லாதி (சேங்கொட்டை) லேகியம் - 5

*(மற்றும் ஒருமுறை)*

**(அய்யாக்கண்ணு பிள்ளை)**

சேங்கொட்டை ¾ சேர், நீரடிமுத்து 2½ பலம், வத்ஸநாபி 5 வராகனெடை, கருவத்ஸநாபி ½ வராகனெடை, எள் $^1/_8$ படி, கார்த்திகைக்கிழங்கு 1½ பலம். சேங்கொட்டையின் முளை எடுத்துவிடவும். நீரடிமுத்துவின் தோலையும் எடுத்துவிடவும், கோமூத்திரத்தில் கருநாவி போட்டு மூன்று தினங்கள் அப்படியே வைக்கவும். நான்காம் நாளன்று நாபியை எடுக்கவும். இம்மருந்து எல்லாவற்றையும் இடித்து மெல்லிய தூளாகும். அத்தூளுக்கு சம எடை வெல்லம் சேர்த்து இடிக்கவும். மருந்து உலர்ந்திருப்பின்

நைப்பிற்காக சிறிது தேவையான தேனையும்விட்டு, நன்றாக இடித்து லேகிய பக்குவமாய்ச் செய்து எடுத்துக்கொள்ளவும். பிரபு ஜனங்களுக்கு (பணக்கார பிரபுக்கள்) இம்மருந்தைக் கொடுப்பதனால் மருந்தை மறுபடியும் பெரிய கல்வத்தில் போட்டு 8 ஜாமம் அரைத்து எடுத்துவைக்கவும். மிகவும் மிருதுவாக இருக்கும்.

இருவேளையும் பெரிய கழற்சிக்காயளவு வீதம் கொடுக்க முகத்தின்மேலுள்ள கிரந்திரோகம், சொரி தீரும். 18 குட்டரோகம் குணமாகும். குட்டம் மேலும் வளராமல் செய்யும். மேகரோகங் களுக்குக் கொடுக்கக் கூடாது.

## பரங்கிப்பட்டை லேகியம்
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

பரங்கிப்பட்டை 1 சேர், சுக்கு 2 பலம், கடலுருஞ்சிப் பட்டை 2 பலம், ராயபுரி சர்க்கரை 2 சேர், தேன் 2 சேர், நெய் ½ சேர், ஜீரகம் ¼ சேர். ஜீரகத்தை மட்டும் சிறிது நெய்விட்டு வாட்டி எடுக்கவும். சர்க்கரையைத் தனியாக வைத்து மற்றதை இடித்து வஸ்திரகாயம் செய்து, சர்க்கரையை பாகாகக் காய்ச்சி, சூரணம், நெய், தேன் இவைகளைச் சர்க்கரைப் பாகில் போட்டு லேகியம் பக்குவமாய் கிண்டி எடுத்துக்கொள்ளவும்.

***மருந்தின் அளவும், தீரும் நோய்களும் :*** காலை, மாலை இருவேளைகளிலும் கழற்சிக்காய் அளவு கொடுக்க சகல மேக நோய்களும் தீரும்.

## மதுஸ்னுகி லேகியம்
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

பரங்கிப்பட்டை 3 சேர், கஷாயம் செய்வதற்கு வேண்டிய சாமான்கள் : மூக்கரட்டை, குப்பைமேனிவேர், கள்ளி, முதியார் கூந்தல், சிற்றாமுட்டி, பேறாமுட்டி, தும்பை வேர், சிறுகுறிஞ்சான் வேர், எருமை ஆட்டாங்கொடி, சித்திரமூலவேர், சத்திச்சாரணைக் கிழங்கு, கோரைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு,

அமுக்கரா கிழங்கு, முருங்கை வேர், வெள்ளருக்கு வேர், சங்கம் வேர், பிரப்பங்கிழங்கு, மாவலிங்க வேர், முற்றிய வேப்பம்பட்டை, வில்வ வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, பற்பாடகம், நிலாவாரை, வெள்ளைக் காக்கரட்டான், சிவதை வேர் இவைகள் வகைக்கு 1 தூக்கு. இவைகளைச் சிறிய துண்டுகளாக்கிப் பெரிய பானையில் போட்டுத் தண்ணீர் விட்டு எட்டில் ஒரு பங்காகக் கஷாயம் இறக்கிவைக்கவும். பச்சிலைச் சாறுகளின் விபரம் : மஞ்சள் இலை, கையாந்தகரை, தும்பை, வாதமடக்கி, இஞ்சி, பொடுதலை, நொச்சியிலை, எருக்கம் இலை, பிரமிய பூண்டு, கையாந்தகரை, செருப்பட்டியிலை இவைகள் வகைக்கு 3 தூக்கு வீதம் எடுத்து சாறுபிழிந்து கஷாயத்தில் சேர்க்கவும். முலைப்பால் ஒரு படி, பசும்பால் 2 படி இவைகளையும் சேர்க்கவும். பிறகு கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி வகைக்கு 7 பலம், திப்பிலி, தமாலபத்திரி, செவ்வியம், சிறுநாகப்பூ, வாயுவிளங்கம், ஓமம், கருஞ்சீரகம், சித்தரத்தை, திப்பிலிமூலம், பற்பாடகம் இவைகள் வகைக்கு 4 பலம். கற்கடகசிங்கி, தக்கோலம், வால்மிளகு, மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கிராம்பு, மல்லி, இந்துப்பு, சடாமாஞ்சி, ஏலம், சீரகம் இவைகள் வகைக்கு 2 பலம். குங்குமப்பூ 2 வராகனெடை, ராயபுரி சர்க்கரை 90 பலம், நெய் 45 பலம், தேன் 45 பலம். மேற்கூறிய கஷாயம், பச்சிலைச்சாறும், பாலும் சேர்த்து, அதில் சர்க்கரையைப்போட்டுக் கரைத்து, வடிகட்டி, பாகுசெய்து மேற்கூறிய மருந்துகளையும், பரங்கிப் பட்டையையும் நன்றாய் இடித்துத் தூள்செய்து, வஸ்திரகாயம் செய்து இந்தச் சூரணம் தேன், நெய் இவைகளைப் பாகில் போட்டு லேகியமாகப் பக்குவமாய்க் கிண்டி எடுக்கவும்.

***மருந்தின் அளவும், தீரும் நோய்களும் :*** இந்த லேகியத்தைக் காலை, மாலை இருவேளைகளிலும் புன்னைக்காயளவு கொடுக்க 4448 வித நோய்களும் தீரும். இம்மருந்தை வைத்தியர்கள் கொடுக்கும்பொழுது வியாதியைக் குணப்படுத்தினால் தனக்கு பொற்கடயம் கொடுக்கவேண்டும் என்று பேசி முடித்து இம்மருந்தைக் கொடுக்கலாம். அவ்வளவு உயர்ந்த மருந்து.

## மஹாபல்லாதக ரசாயனம்
## (முத்துசாமி தீக்ஷிதர்)

அய சிந்தூரம் ½ சேர், கருஞ்சேங்கொட்டை, செந்நிற சேங்கொட்டை இவைகளின் முளைகளை நீக்கிவிட்டு 4 சேர் எடை எடுத்து ஒரு முறட்டுத்துணிப்பையில் சேங்கொட்டை களையும், அத்துடன் செங்கல் சிறுதுண்டுகளையும் சேர்த்து பையை நன்றாகமூடி கட்டி அப்பையை நன்றாக தேய்த்தால் சேங்கொட்டை சுத்தமாகும். அத்துடன் சுத்தியுமாகும். பிறகு அதை எடுத்து இரண்டாக வெட்டி இத்துண்டுகளை நெய் வைத்து பழகிய பானையிலிட்டு 32 சேர் தண்ணீரையும் ஊற்றி அடுப்பில் ஏற்றி 8 சேர் கஷாயமளவில் இறக்கி வடிகட்டிக் கொள்ளலாம், மிஞ்சிய சேங்கொட்டையையும் அதன் அடி மண்டியையும் எரித்துவிடவும். அக்கஷாயத்தில் 8 சேர் பாலைச் சேர்த்து, அதே பாத்திரத்தில் போட்டு, அடுப்பின் மேலேற்றி தீயிடவும். கஷாயமும், பாலும் வற்றி கெட்டியாகும் சமயத்தில் 4 சேர் கற்கண்டு, 2 சேர் நெய்யும் கலந்து நைவாக அரைத்து (மத்தித்து) இறக்கிக்கொள்ளவும். ஆறியபின் அதில் கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், ஜீரகம், மிளகு இவைகள் சமஎடை கொண்டு சூரணம் செய்து அச்சூரணத்தில் ½ சேர், வஸ்திரகாயம் செய்த கடுக்காய்த் தூளில் ½ சேர், சித்திரைமாத நெல்லிக்காயை நசுக்கி எடுத்தது ½ சேர் சாறு, தேன் ½ சேர். இவைகளை ஒன்றாகக் கலந்து மேற்கூறிய லோக பஸ்மத்தையும் கலந்து நெய் பானையில் போட்டு எல்லாவற்றையும் நன்றாக ஒன்றுபட கலந்து தினமும் சூரிய புடத்தில் வைத்து உபயோகிக்கவும்.

***இதன் அளவு :*** வேளைக்கு 5 வராகனெடை வீதம் கொடுக்கவும்.

***இதனால் தீரும் வியாதிகள் :*** வெண்குஷ்டம், குஷ்டம், மூலரோகம், அக்னிமாந்தம், க்ஷயம், காசம், சுவாசம், பல்லசைவு, ரோமம் வெண்மை ஆவது, கைகால் உறுப்புகள் குறைவது இவ்வித குஷ்ட ரோகத்தின் சின்னங்கள் தீரும். சந்தேகமில்லாமல் நோய் தீரும்.

## மதுஸ்நூஹி ரசாயணம்

(அய்யாக்கண்ணு பிள்ளை)

பரங்கிப்பட்டை 10 பலம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, குரோசணி, ஓமம், வாயு விளங்கம், ஓமம், அரத்தை, சிறுதேக்கு, செவ்வியம், திப்பிலி மூலம், மல்லி, சீரகம், சடாமாஞ்சி, கோஷ்டம், விலாமிச்சம் வேர், அமுக்கரா கிழங்கு, சிறுநாகப்பூ, வெப்பாலை, அரிசி, வாழுலுவையரிசி, அரேணுகம், கசகசா, நீர்முள்ளிவிதை இவைகள் வகைக்கு 2½ வராகனெடை, நுரஞ்சிக்காய் ½ பலம், தண்ணீர்விட்டான்கிழங்கு 1 பலம், தூதுவளைப்பூ 1 பலம், முந்திரிச்சம்பழம் ½ பலம், பேரீச்சம்பழம் ½ பலம், சீந்தில் சர்க்கரை ½ பலம், கற்கண்டு 5 பலம், தேன் ½ பலம், நெய் ¼ படி இவைகள் ஒன்றுகூட்டி ரசாயனம் செய்யும் விதத்தில் செய்து கொள்ளவும்.

***தீரும் வியாதிகள் :*** சகல உஷ்ண சம்பந்தமான நோய்கள், மேகரோகங்கள், ருசியின்மை இவைகள் தீரும்.

## குக்குலாதி ரசாயணம்

(அய்யாக்கண்ணு பிள்ளை)

குங்குலியம் 3 பலம் சுத்தி செய்துகொள்ளவும். வேப்பம்பட்டை, கண்டங்கத்திரி, சீந்தில்தண்டு, இம்மூன்று மூலிகையினால் குங்குலியத்தைச் சுத்தி செய்துகொள்ளவும். மல்லி, ஏலம், ஜாதிக்காய், கிராம்பு, வாழுலுவையரிசி, அதிமதுரம், அறத்தை, சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகள் வகைக்கு 2 வராகனெடை, சர்க்கரை 5 பலம், தேன் 5 பலம், பசுவின் நெய் 2½ பலம், கடைச் சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து, சர்க்கரைப்பாகு செய்து, நெய், தேன் இவைகளை அதில் கலந்து ரசாயனம் முறையே செய்து கொள்ளவும்.

***மருந்தின் அளவு, தீரும் வியாதிகள் :*** இருவேளையும் கழற்சிக்காய் அளவு கொடுத்துவரக் கீழ்க்கண்ட நோய்கள் தீரும். சுரம், குன்மம், அதிசாரகழிச்சல் இவைகள் தீரும். தாது விருத்தி உண்டாகும். உடல் நன்றாக பெருகும். மேகரோகங்களும் குணமாகும்.

***பத்தியம் :*** புளிப்பு, கைப்புப் பதார்த்தங்களை விலக்கவும்.

## கந்தக ரசாயனம்

(அய்யாக்கண்ணு பிள்ளை)

சுத்தி செய்த கந்தகம் 6 பலம், மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, இலவங்கப்பட்டை, தமாலபத்திரி, ஏலம், சணப்புல்விதை, சேங்கொட்டை (இதன் தண்டு நீக்கி), வாயுவிளங்கம் இவைகள் வகைக்கு 1 பலம். இவ்வகை மருந்தை எடுத்து கந்தகத்தைத் தவிர மற்றதை நன்றாக இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து, கந்தகத்தை நைவாக அரைத்து அதில் இச்சூரணத்தைப் போட்டு 4 சாமம் அரைக்கவும். கந்தகம், மற்ற சூரணம் நன்றாக ஒன்றுபட கலந்தபின் உருண்டைகள் செய்வதற்கு எவ்வளவு தேன் தேவையோ அவ்வளவு மட்டும் தேன் சேர்த்து 2 சாமம் நைவாக அரைத்து பெரிய கழற்சிக் காயளவு உருண்டைகள் செய்து கொள்ளவும்.

***அனுபானம் :*** ரோகத்திற்குத் தக்கபடி உடலுக்குகந்தபடி அனுபானம் வெண்ணெயிலோ அல்லது நெய்யிலோ ஒரு உருண்டையை தேன் விட்டு மத்தித்துக் கொடுக்கவும். மருந்தை ஒரு மண்டலம் கொடுக்கவும்.

***இதற்குப் பத்தியம் :*** நல்லெண்ணெய், புளி, உப்பு, விலக்கவும். வியாதியின் பலம் சிறிது இருந்தால் மறுபடியும் மருந்து கொடுக்கவும்.

***இதனால் தீரும் நோய்கள் :*** இம்மருந்து உட்கொள்வதால் யானைக்கு இருக்கும் பலத்தைப்போல் அவ்வளவு பலமேற்படும். குதிரையின் வேகம்போல் சரீரத்தில் வேகம்

சுறுசுறுப்பு உண்டாகும். தேகம் திவ்ய காந்தியுடன் விளங்கும். மலமூத்ரகாதிஜன்ய (மலமூத்திர கோளாறினால் உண்டாகும்) 18 குஷ்ட ரோகங்கள் யாவும் தீரும். நெஞ்சுவலிக்கு இந்த மருந்து கொடுத்து பலருக்குக் குணமாயிருக்கிறது.

## குஷ்டரோகத்திற்குக் கந்தக ரஸாயனம்

### (அய்யாக்கண்ணு பிள்ளை)

சுத்திசெய்த கந்தகம், குங்கிலியம், பரங்கிப்பட்டை, வாயுவிளங்கம், நீரடிமுத்துபருப்பு இவைகள் வகைக்கு கால் சேர், சேங்கொட்டை (முளை நீக்கியது) 10 பலம், கந்தகத்தைத் தவிர மற்றதைக் கல்லுரலில் போட்டு இடித்து மெல்லியதாகத் தூள் செய்துகொண்டு உரலில் இருக்கும் குங்குலிய மருந்தை எடுத்துக் கந்தகத்தில் கலந்து இதை கல்வத்திலிட்டு 4 சாமம் அரைத்து உருண்டை செய்வதற்குத் தேவையான அளவு தேனைக்கூட்டி 2 சாமம் மறுபடியும் அரைத்துப் பெரிய கழற்சிக்காயளவு உருண்டைகள் செய்து வைத்துக்கொள்ளவும்.

***அளவும், தீரும் வியாதிகளும் :*** ஒருவேளைக்கு ஒரு உருண்டை வீதம் ஒரு மண்டலம் (40 நாட்கள்) சாப்பிட்டுவந்தால் குஷ்டம், ராஜபிளவை, மேகம், சொறிசிரங்கு, கண்டமாலை இவைகள் தீரும். நெடுநாட்களுக்கு இம்மருந்தைச் சாப்பிட குஷ்டம் தீரும். இச்சாபத்தியம் அனுசரிக்கவும்.

## வாய்விடங்க நெய்

### (முத்துசாமி தீக்ஷிதர்)

வாயுவிடங்கம் 1 பலம், எட்டிக்கொட்டை (கருப்பு) 1 பலம், சித்திரமூலவேரின் மேல் தோல் 1 பாகம், தோல் நீக்கிய சீந்தில்கொடியின் உள்பாகம் 1 பலம், தோல் நீக்கிய சுக்கு 1 பலம், இவ்வைந்து வகைகளையும் கல் உரலிலிட்டு நன்றாக இடித்துத் தூள்செய்து வஸ்திராகாயம் செய்து, சூரணத்தின் சமபாகமாக மிகப்பழைய வெல்லைத்தை இத்துடன் கலந்து, பசுவின் நெய்விட்டு கலந்து நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டியது. இம்மருந்தின் அளவு 2½ வாரகனெடை இதனால் அதிசாரம், மூலவியாதி முதலானவைகள் தீரும்.

## சித்ரகுடபாகம் (அதன் அனுபானமும்)

(முத்துசாமி தீக்ஷிதர்)

சித்திரமூலம் 5 சேர், கண்டங்கத்திரி வேர், முள்ளிக்காய் வேர், நெருஞ்சில் வேர், பத்ரஜூடுப வேர், சீந்தில் வேர், சிறு இலவமரவேர் இவைகள் வகைக்கு 2½ சேர் இவைகளை உலர்த்தி, சூரணித்து ஒரு கலயத்திலிட்டு 4 மரக்கால் தண்ணீர்விட்டு ஒருநாள் வைத்து மறுநாள் தேவையான தீயிட்டு 1 மரக்கால் அளவில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும், அதில் பழைய வெல்லம் 12½ சேர் சேர்த்து நன்றாகக் கலந்து வடிகட்டிக் கொள்வது. பிறகு கஷாயத்தை அடுப்பின் மேலேற்றி காய்ச்சி தண்ணீர் இல்லாமல் கால் பக்குவமான உடன் கீழே இறக்கிக் கொள்ளவும். மறுநாள் அதில் 4 சேர் தேனையும் சுக்கு, திப்பிலி, மிளகு, கருவாப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம் இவைகளின் தூள் வகைக்கு 2 பலம் வீதம் எடுத்து ஒன்று கூட்டி இப்பாகில் கலந்து அரைத்து வைக்கவும்.

***இதன் அளவு :*** 5 வராகனெடை அளவு இம்மருந்தினால் அக்னி (ஜாடராக்னி) அதிகரிக்க மேற்கூறிய மருந்தை அசுவினிக் கடவுளால் சொல்லப்பட்டிருக்கிறது.

***தீரும் வியாதியும், அதன் அனுபானங்களும் :*** இதனால் குஷ்டரோகம் தீரும். இதைத் தவிர இருமல், சுவாசம், க்ஷயம், குன்மம், இரத்தமூலம், பீனிசம், வயிற்றில் நாக்குப்புழுக்கள் அதிகமானாலும் இவைகள் தீரும், பல மருந்துகளால் தீராத அக்னிமாந்தம், பீனிசம் தீரும். அண்டவாயுவும் (விரைவாதம்) தீரும்.

## தாலிம்பாதி வடாகம்

ஜாதிக்காய், கிராம்பு, சிறுநாகப்பூ, அதிவிடயம், இலவம் பிசின் இவைகள் சமபாகம் கொணர்ந்து நல்லெண்ணெயில் பிரத்தியேகமாக ஒவ்வொன்றையும் வறுத்து எடுத்துக்கொள்வது. பிறகு இவைகளைத் தூள் செய்து, அத்தூளில் 14ல் ஒரு பங்கு அபின் சேர்த்து யாவற்றையும் நன்றாகப் பொடித்துக்

கொள்ளவும். இதன்பின் முக்கால் பாகம் பழுத்திருக்கும் ஒரு மாதுளையைக் கொண்டுவந்து நன்றாகக் கீறி, முன்பு சொல்லிய தூளைக் கொள்ளுமளவுக்கு உள்ளே திணித்துப் புடபாகத்திற்குச் சொல்லிய கொழுந்தை மேலே சுற்றி நன்றாகக் கயிற்றால் கட்டி சாணியால் கவசம் செய்து உலர்த்தித் தணலில் சுடவேண்டும். சுட்டபின் மேலுள்ள கவசம் முதலியவற்றை நீக்கிவிட்டு மாதுளையை மட்டும் எடுத்து நைவாக அரைத்து அதனை வடைகள் செய்து வெய்யிலில் காயவைத்துப் பிறகு ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம் :*** மருந்து கொடுக்கும்பொழுது 1 வராகனெடை கிராம்பைச் சுட்டு ½ சேர் கழநீரில் கலந்து 3 பலம் எடை கஷாயமாகக் காய்ச்சி அதில் மாதுளையின் வடகத்தை 1 வராகனெடை அளவில் எடுத்து கஷாயத்தில் கூட்டி கொடுக்கவும். கிராம்பு கஷாயம் பொருக்காவிட்டால் தயிரில் கலந்து கொடுக்கவும்.

## கண்டாத்ரிகாதி வடகம்
### (முத்துசாமி தீக்ஷிதர்)

மிளகு 4 பலம், திப்பிலி 3 பலம், கண்டத்திப்பிலி 7 விராகனெடை, சுக்கு 5 வராகனெடை, ஜாதிக்காய் 5 விராகனெடை, மூங்கிலுப்பு 5 விராகனெடை. ஏலக்காய் 5 வராகனெடை. இந்த எட்டு வகைகளையும் சூரணித்துக்கொண்டு தனியே ஒரு பாத்திரத்தில் வைக்கவும். இஞ்சி 16 பலம் எடுத்து அதைச் சாறு பிழிந்து சுண்ணாம்பை நீக்கி, அத்துடன் 16 பலம் கற்கண்டையும் கூட்டி அதனைப் பாகு செய்யவும். பாகு பக்குவத்தில் வரும்பொழுது மேலே கூறியுள்ள சூரணத்தைச் சேர்த்து ½ சேர் பசுவின் நெய்யையும் கூட்டி நன்றாக மத்தித்து அதை ஒரு பலகையின் மேல் கொட்டி தட்டி கத்தியால் வடை அளவில் அறுத்து எடுத்துக்கொள்ளவும். இவ்வடையை முதலில் உண்ணக் கொடுத்துப் பிறகு மருந்தைக் கொடுக்கவும், இதனால் வாந்தி நிற்கும். அக்னி மாந்தம் தீரும். இந்த வடகத்தைப் பிரசவித்த பெண்களுக்கு 16 நாட்களுக்குப் பிறகு கொடுக்கவும். இதனால் சூதகவாயு, சூதக கிரஹணி இவைகள் இவர்களை அணுகாது, இரத்தவிருத்தி உண்டாகும், சரீரம் கெட்டிப்படும்.

## வசாகண்டம் செய்யும் விதம்
### (முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

ஆடாதோடையிலையும் பூக்களும், பூச்சி அரித்ததை நீக்கி விடவும். 12½ சேர் ஆடாதோடையிலையை 100 சேர் தண்ணீருடன் சேர்த்து 25 சேர் கஷாயமாகச் சுண்டவைத்து எடுத்துக்கொள்ளவும். இக்கஷாயத்தில் 8 சேர் கடுக்காய்த் தூள் சேர்த்து, மறுபடியும் சிறிது சுண்டவைத்து அதில் திப்பிலித் தூள் 2 பலம், கருவாப்பட்டை, தமாலப்பத்திரி, சிறுநாகப்பூ இவைகள் வகைக்கு 1 பலம் தூள்செய்து சுண்டிய கஷாயத்திலிட்டு பக்குவமாய் லேகிய பதத்தில் காய்ச்சி எடுத்துப் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

அதன் அளவும், தீரும் வியாதிகளும் : 2 ½ வராகனெடை முதல் 5 வராகனெடை வரையில் (தேகபலம் ரோக நிதானம் பார்த்துக்) கொடுக்கவும். இதனால் பித்தக்ஷயம், ரத்தபித்தம், இருமல், மூச்சு (இரைப்பு) முதலானவைகள் தீரும்.

## ஜம்பீர கடுகு
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகிணி, சுக்கு, மிளகு, திப்பிலி, அசமதாகஜீரகம், கிட்டம் (கிட்டான்), இந்துப்பு, கல்லுப்பு, சீனாகர்ரம், சௌகாரம், வெங்காயம், பெருங்காயம், ஜாதிக்காய், கிராம்பு, பூண்டு இவைகள் வகைக்கு 1 பலம், லோஹஅரப்பொடி 2 பலம் இவைகளை எல்லாம் வெள்ளாட்டு மூத்திரத்தில் நைவாக அரைத்து, காட்டுமல்லிகை, கையாந்தகரை, கீழாநெல்லி, நொச்சி, மணத்தக்காளி இவைகளை அரைத்து ஒரு எலுமிச்சம்பழத்தளவு விழுதை எடுத்துவைக்கவும். மேல் சொன்னவைகளைத் தனித்தனியே அரைத்து விழுதை உருண்டை செய்துவைக்கவும். அவ்வைந்து உருண்டைகளையும் வெள்ளாட்டு சிறுநீரில் அரைத்துவைத்திருக்கும் மருந்துகளுடன் கலந்து கொள்ளவும். இதைத்தவிர 2 வராகனெடை பாதரசம், குப்பைமேனிச்சாற்றை விட்டு தனித்தனியே ஒவ்வொரு சாமம் அரைத்து அதையும், அம்மருந்துடன் கலந்து பிறகு எல்லாம் ஒன்றுபடக் கலந்து ஒரு

சாமம் அரைத்து பிறகு இம்மருந்தை 20 பங்குகளாகச் செய்து வைக்கவும். 20 எலுமிச்சம்பழத்தை எடுத்து அதில் ஒரு பழத்தை நாலு பாகமாகத் துண்டு செய்யாமல் கீறி பிளந்து ஒவ்வொரு பழத்தில் ஒவ்வொரு பாக மருந்தை உள்ளே வைத்து, இருபது எலுமிச்சம் பழத்தில் இருபது பங்கு மருந்தையும் அடைத்து ஒரு பானையில் நழுவாமல் வைத்து, உபயோகத்திலிருக்கும் மாட்டுக் கொட்டைகையில் மாட்டு மூத்திரம் ஓடிக்கொண்டிருக்கும் படியான இடத்தில் இக்கலயத்தைப் புதைத்து, மூன்று நாட்கள் முழுவதும் முடிந்தபின், நான்காவது நாள் கலயத்தை எடுத்து காட்டுமல்லிகை இலைச்சாறு 2 படி அதில்விட்டு, அடுப்பின் மேலேற்றி தீயிட்டு சாறுமுழுவதும் வற்றியதும் உள்ளிருக்கும் மருந்தை எடுத்து அம்மியில்வைத்து நைவாக அரைத்து சிறிது தேனையும் கூட்டி நன்றாக அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவும்.

***அனுபானம் :*** 20 நாட்கள் தேன்விட்டு இருவேளையும் உட்கொள்ள மகோதரம், பாண்டுரோகம், காமாலை, சோகை, குடல்வாதம், குன்மம் இவ்வித நோய்கள் தீரும்.

***பத்தியம் :*** உப்பைச் சுட்டு உபயோகிக்கவும். கைப்பு, புளிப்புப் பதார்த்தங்களை விலக்கவும். மருந்தை நிறுத்தியதும் இச்சாபத்தியத்துடன் 20 நாட்கள் இருக்கவேண்டும்.

# சூர்ண வகைகள்

## தாதுபுஷ்டிக்கு மாதுளவிரைச் சூரணம்

மாதுளம் பழத்தைக் கொண்டுவந்து அதை உடைத்து அதனுள்ளிருக்கும் விதைகளை மட்டும் எடுத்துக்கொண்டு நன்றாக உலர்த்திக்கொள்ளவும். பிறகு இவ்விதைகளைத் திருவையில்போட்டு மிக நுண்ணிய மாவாக அரைத்து எடுத்து வைத்துக்கொள்ளவும். பசும்பாலை நன்றாகக் கொதிக்கவைத்து, கொதி வந்ததும் கீழே இறக்கி மேற்படி மாவை இதில் கொஞ்சம் போட்டுக் குடிக்கவும். இவ்விதம் ஒரு மண்டலம் சாப்பிட தேக புஷ்டி ஏற்படும்.

***இதற்குப் பத்தியம் :*** இஷ்ட பத்தியம்.

## பூவரசு காயிலுள்ள விழுதின் சூரணம்

பூவரசங்காயினுள் உள்ள விதைக்குள் இருக்கும் விழுது போன்றதை அரைத் தோலா எடை, வாகை மரத்தின் காயிலுள்ள விழுதை மட்டும் அரை தோலா எடுத்துக்கொண்டு இவ்விரண்டையும் சேர்த்து, இத்துடன் அலரியின் பழுத்த இலை 7ம் சேர்த்து கல்வத்திலிட்டு நைவாக அரைத்துத் தூளாக்கி எடுத்துக்கொள்ளவும். இப்பொடியில் ஒரு சிட்டிகை எடுத்து மூக்குப்பொடி போடுவதுபோல் மூக்கில் இழுக்க தலைவலி, பீனிசம் முதலானவை தீரும்.

## பற்களின் ரோகத்திற்குச் சூரணம்

மயில்துத்தம் 8 நிஷ்க்கம், சேங்கொட்டை 8 நிஷ்க்கம், கடுக்காய் 8 நிஷ்க்கம், களிப்பாக்கு 8 நிஷ்க்கம், பொறித்த சீனாக்காரம் 8 நிஷ்க்கம், காசுக்கட்டி ஒரு விராகனெடை, ஏலம் 4 விராகனெடை, மிளகு 4 விராகனெடை, கோரைக்கிழங்கு 4 விராகனெடை இவைகளை நன்றாக வறுத்து எடுத்துத் தேங்காய் கொட்டாங்கச்சி டப்பாவில் வைத்துக்கொண்டு தினமும் பல் துலக்கிவர பல்வலி முதலிய தந்தரோகங்கள் தீரும்.

## தாக்ஷிணா பற்பொடி

இரும்பு அரப்பொடி 10 விராகனெடை, மாசிக்காய் 10 விராகனெடை, துருசி 7 விராகனெடை, கடுக்காய்த்தோல் 1 விராகனெடை, படிகாரம் அரை விராகனெடை, சேங்கொட்டை கால் வராகனெடை இவைகளை அரைத்து, எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு அரைக்க அரைக்கத் தூளாகும். இதுவே தாக்ஷிணா பொடி என்பது. பல் துலக்கி வந்தால் ஈறு பலப்பட்டு, பல் அசைவு, பல்வாயு, பல்வலி முதலானவைகள் தீரும்.

## ச்வாஸகாச, விக்கலுக்குச் சூரணம்

தான்றிக்காயின் விதையை அகற்றிவிட்டு, மேல்தோல் மட்டும் எடுத்துக்கொண்டு அதை சுத்தி செய்துகொண்டு அதனை நன்றாக இடித்துத் தூள்செய்து, வஸ்திரகாயம் செய்து கொள்ளவும்.

5 தோலா சூரணத்தை எடுத்துத் தோலுடன் கூட்டிச் சாப்பிட விக்கல், காசநோய் தீரும். விக்கலும், காசத்தினால் ஏற்பட்ட சிரமமும் குறையும்.

## பித்தத்திற்கு நெல்லிப் பானகம் (சூரணம்)

பித்தம் அதிகமானால் : நெல்லிமுள்ளி (உள்ளிருக்கும் பருப்பு நீங்கலாக) எடுத்துக்கொண்டு நன்றாக உரலிலிட்டு மரத்தாலான உலக்கையால் இடித்து நன்றாகப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொள்ளவும். அத்தூளின் எடைக்குச் சம எடை சீனிச் சர்க்கரையையும் கலந்து, வேண்டும் பொழுது தேவையான அளவு சூரணத்தை எடுத்துப் பானகம் செய்து குடித்தால் பித்தாதிக்கம் குணமடையும்.

## சரீர சுகத்திற்குச் சங்கவேரின் சூரணம்

சங்கம் வேரை கொணர்ந்து அவ்வேரின் மேல்தோலை மட்டும் எடுத்துக்கொள்ளவும். அத்தோலை நன்றாக நிழலில் உலர்த்திக்கொண்டு தூள்செய்து, வஸ்திரகாயம் செய்து எடுத்து வைத்துக்கொள்ளவும்.

இச்சூரணத்தில் தேன் அல்லது நெய் (தேவையான அளவு) சேர்த்துக்கொண்டு சாப்பிட்டுவர தேகசுகம் ஏற்படும்.

## கோதுமைச் சூரணம்

கோதுமையை நன்றாகப் பொறுக்கிக் கால் சேராக எடுத்துக்கொண்டு ஒரு பாத்திரத்தில் போட்டு கோதுமை முழுவதும் முழுகும்படி எருக்கம்பாலை ஊற்றிவைக்கவும். இரண்டாம் நாள் அதை எடுத்து உலர்த்தி ஒரு சட்டியிலிட்டு கருகும்படி வறுத்து எடுத்துக்கொள்ளவும். இதை ஒரு சிட்டிகை வைத்து இலையைச் சுற்றி சாப்பிடக்கொடுக்கவும். இவ்விதம் மூன்று நாட்களுக்குக் கொடுக்க ஸ்வாசகாசம், கபத்தினால் உண்டாகும் இருமல் இவைகள் குணமடையும்.

## சூதகவாயு, சீத, இரத்த பேதிக்குச் சுக்குச் சூரணம்

கால் சேர் சுக்கை இரண்டு சாமம் நைவாக அரைத்து, பிறகு தண்ணீரில் கலக்கி 5 நாழிகை தெளியவைக்கவும். நீர் தெளிந்த பிறகு மேலுள்ள தெளிவை ஊற்றிவிட்டு கீழ் உள்ளதை (வண்டலை) எடுத்து அத்துடன் சமஎடை பாலை ஊற்றிப் பால் வற்றும்வரையில் நன்குக் காய்ச்சி அது வற்றும் சமயத்தில் ஜாதிக்காய் , கிராம்பு, ஏலக்காய், சிறுநாகப்பூ, மாம்பருப்பு இவைகளைப் பொடித்துப்போட்டு வைத்துக்கொள்ளவும். பிறகு வேண்டும்பொழுது அத்துடன் தேனையும் கூட்டிச் சாப்பிட சூதகவாயு, இரத்த சீதபேதி குணமாகும்.

## கீழாநெல்லிச் சூரணம்
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

பூலாங்கிழங்கு, கீழாநெல்லி, ஓரிலைத்தாமரை, கோரைக் கிழங்கு இந்நான்கு வகைகளையும் நன்றாகக் காயவைத்து, வகைக்கு இரண்டு பலம் வீதம் எடுத்து இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து இச்சூரணத்திற்குச் சம எடை சர்க்கரையும் கூட்டி நன்றாகக் கலந்து இரண்டு வேளையும் இருபது நாட்களுக்குக் கொடுத்துவர சகல மேக ரோகங்களும் தீரும். பத்தியம் : இஷ்டபத்தியம்.

## மேகத்திற்குச் சூரணம்
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

கொட்டைக் கரந்தை, செருசெருப்படி (சிறுசெருப்படி) வெள்ளருகு இவைகளைச் சம எடை எடுத்து நன்றாக உலர வைத்து இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்துகொண்டு இந்த சூர்ணத்துக்குச் சம எடை சர்க்கரையும் இத்துடன் கூட்டி கலந்துவைத்துக்கொண்டு தினமும் இருவேளையும் இருபது நாட்களுக்கு உட்கொள்ள சகல மேகரோகங்களும் தீரும். இச்சாப்பத்தியம் இருக்கவும்.

## சீனாகல்கண்டு சூரணம்
### (முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

சீனாகல்கண்டு 16 தோலா, மூங்கிலுப்பு 8 தோலா, திப்பிலி 4 தோலா, ஏலம் 2 தோலா, கருவாப்பட்டை ஒரு தோலா இவைகளை ஒன்றுகூட்டி மென்மையாகத் தூள் செய்து கொள்ளவும். இச்சூரணத்தை ஒருதோலா வரையில் தங்கபஸ்மத்துடன் கலந்துகொடுத்தால் மிகவும் நல்ல குணம் தரும். எல்லாவித ரோகங்களும் இதைக் கொடுக்கலாம்.

## சோழிச் சூரணம்

சோழி வேண்டியதை எடுத்துத் துண்டு செய்து ஒரு மண் கலயத்திலிட்டு, அதன்மேல் முழுகும்படி நாயுருவியின் சாற்றினை அதில் புடம்போட்டு அதன் வாயை மூடி (சீலைமண்) புடம்போட சுண்ணமாகும். இச்சுண்ணத்தை பல்துலக்க் தந்த வாயு தீரும். இம்மருந்தினால் பல் அசைவு, பல் வாயு முதலிய வியாதிகள் தீரும். பல் துலக்கிய பின் வாயை நன்றாகக் கொப்பளிக்கவும்.

## மஞ்சள்காமாலை நோய்க்குச் சூரணம்
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

சந்தனத்தூள், அதிமதுரம், கோரைக்கிழங்கு, தக்கோலம், கோஷ்டம், நெய்ச்சட்டி, திராக்ஷை, பேரீச்சம்பழம், பொடுதலை, விளாமிச்சை வேர், ஏலத்தின் வேர் இவைகள் வகைக்கு $1^1/_2$ பலம்

எடுத்து ஒன்றுகூட்டி நன்றாய் இடித்துத் தூள்செய்து, வஸ்திரகாயம் செய்து பிறகு சூரணத்தின் சம எடை ராயபுரி (நாட்டுச்) சர்க்கரை சேர்த்து நன்றாக ஒன்றுபட கலந்து ஒரு புதுப்பானையில் எடுத்து வைக்கவும்.

***மருந்தின் அளவும், தீரும் வியாதிகளும் :*** காலையில் 2 தோலா, மாலையில் 2 தோலா வீதம் பச்சரிசி கழநீரில் கலந்து 20 நாட்களுக்குச் சாப்பிடவும். கழநீர் சுமார் ¼ சேர் வரையில் வேளை ஒன்றுக்குச் சேர்க்கவும். இச்சாபத்தியம். இவ்விதம் உட்கொண்டால் காமாலை தீரும். கழநீர் இல்லாவிடில் இருவேளை சூரணம் மட்டும் சாப்பிட்டால் பித்தமூலம், கை, கால் எறிவு முதலியவைகள் தீரும்.

## குவத்துக்குச் சூரணம்

குங்குலிய மரத்தின் இலைகளை உலர்த்தி, இடித்து வஸ்திரகாயம் செய்த தூள் 4 பலம். மேற்கூறிய குங்குலிய மரத்தின் இலைகளை கால்படி கையாந்தரைச் சாற்றில் நாள் முழுவதும் ஊறவைத்து மறுநாள் வெய்யிலில் உலரவைக்கவும். இவ்விதம் ஏழுதடவை, ஏழு நாட்களுக்குச் செய்து எவ்வளவு எடை தூள் இருக்கிறதோ அவ்வளவு எடை வாதுமைப் பருப்பு, சாரப்பருப்பு, சாலாமிசிரி, நீர்முள்ளி விதை, உமி நீக்கிய ஓமம், வழுவையரிசி இவைகள் எல்லாவற்றையும் இடித்துத் தூள்செய்து, குங்குலிய இலைத்தூளுடன் கலந்து, இவைகள் எல்லாம் எவ்வளவு எடை உள்ளதோ அதன் சம எடை சர்க்கரை கூட்டி மறுபடியும் இடித்து எடுத்துக்கொள்ளவும்.

***அளவு, அனுபானம் :*** வேளை ஒன்றுக்கு 5 வராகனெடை வரையில் உபயோகப்படுத்தவும். இருவேளையும் கொடுக்கவும். இவ்விதம் பதினோரு நாட்கள் உட்கொள்ள வியாதி குணமாகும். பிறகு தேவையானால் மறுபடியும் இவ்விதமே உட்கொள்ளவும். இம்மருந்தைச் சாப்பிட்டவுடன் 1 சேர் பசும்பால் சாப்பிட வேண்டும். வாயு பதார்த்தங்களை விலக்கவும்.

## பாருஷகாதிச் சூரணம்
## (அய்யாக்கண்ணு பிள்ளை)

சண்டமரம் அல்லது பாருஷ மரம் (Heart wood tree) இதன் பூக்கள் 6 தோலா, பரங்கிப்பட்டை 3 தோலா, கந்தகம் 1 வராகனெடை, சீனி சர்க்கரை 7½ தோலா, லோமானி சாம்பிராணி 2 வராகனெடை, பாருமரப்பூவையும் சாம்பிராணியையும் ஒன்றாய்க் கலந்து பக்குவமாய் நெருப்பில் வாட்டி மற்ற சாமான்களையும் சூரணித்து, சம எடை சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளவும்.

***மருந்தின் அளவு :*** இருவேளையும் ஒருகடி (ஐவிரலில் கொள்ளுமளவு) ஒரு மண்டலம் அல்லது ½ மண்டலம் உட்கொள்ள சகலவித மேக ரோகங்களும் தீரும். உடம்பிலுள்ள தடிப்புத்தன்மை தீரும்.

## கிராணிக்கு உடம்பின் சூரணம்

நன்றாக முற்றிய வயதுடைய உடும்பைக் கொண்டுவந்து அதன் தலை, நகங்கள், வயிற்றினுள்ளிருக்கும் குடல் முதலான கல்மிஷங்களை நீக்கிவிடவும். பிறகு பெருங்காயம் ¼ பலம், இந்துப்பு ½ பலம், வளையலுப்பு ¼ பலம், பூண்டு 1 பலம், சுக்கு 1 பலம், திப்பிலி ½ பலம், மிளகு 1 பலம், சவுட்டு மண் 1 பலம், ஓமம் 1 பலம் இவைகளை நன்றாக இடித்துச் சூரணித்து மேலே கூறிய உடும்பின் உடலுக்குள் நிரப்பி, கயிற்றால் சுற்றிலும் நன்றாகக் கட்டி, வல்லாரை இலைச்சாறு 4 படி ஒரு பானையிலிட்டு கயிர் சுற்றியுள்ள உடும்பை உள்ளே வைத்து சாறு வற்றும்வரை நன்றாக வேகவைத்து, அதை எடுத்து உலர வைக்கவும். உலர்ந்ததும் உடும்பை நன்றாக இடித்துத் தூள்செய்து வஸ்திராகயம் செய்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

***அளவு, பத்தியம், தீரும் வியாதிகள் :*** வேளை ஒன்றுக்கு ஒருகடி தூள் தேனில் குழைத்துக் கொடுக்கவும். அரை மண்டலம் கொடுத்துவந்தால் 6 விதமான கிராணி, மூலவாயு, சூதகவாயு இவ்வகையான வியாதிகள் தீரும். இச்சாபத்தியம்.

## பிருங்காதிச் சூரணம்
### (முத்துசாமி தீக்ஷிதர்)

கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, ஜீரகம், கழுவிய எள்ளு, கருஞ்சேங்கொட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி வகைக்கு 10 வராகனெடை எடுத்துக்கொள்ளவும். நிழலில் உலர்த்திய கையாந்தகரை 1½ சேர். இவைகள் யாவற்றையும் ஒன்றுகூட்டி சூரணம் செய்துகொள்ளவும்.

இச்சூரணத்தில் 3 வராகனெடை எடுத்து இத்துடன் லோக சிந்தூரம் மற்ற உயர்ந்த மருந்துகளுடன் கூட்டி நெய்யும் கலந்து மத்தித்துக் கொடுக்கவும், மூலவியாதி, ஸ்திரீ ரோகம், மூத்திர ரோகம் முதலானவைகள் தீரும்.

## புஷ்பானுகச் சூரணம்
### (முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

பொன்முசுட்டை (வட்டத்திருப்பி), நாவல்பழக்கொட்டை மாம்பருப்பு, கல்மதம், இலவம்பிசின், தொட்டால்சிணுங்கி விதை, தாமரைப்பூவின் கேசரம், சுட்ட பெருங்காயம், கஸ்தூரி மஞ்சள், அதிவிடயம், கோரைக்கிழங்கு, விளாங்காய், லோத்திரப் பட்டை, சுத்தி செய்த செங்காவி, பிண்டாப மரத்தின் வேர், மிளகு, சுக்கு, தீபதிராக்ஷை, இரக்தசந்தனம், குங்குலிய மரப்பட்டை, வெட்பாலையரிசி, காட்டாத்திப்பூ, அருகம்புல் (கணு நீக்கியது), அதிமதுரப்பட்டை, இவைகள் யாவற்றையும் புஷ்ய நக்ஷத்திரத்தன்று கொண்டுவந்து, உலர்த்தி ஒவ்வொன்றையும் சம எடை எடுத்துத் தூள்செய்து வைத்துக்கொள்ளவும்.

***இதன் அளவு :*** இரண்டிலிருந்து ஐந்து வராகனெடை சூரணம் எடுத்து, அதில் 9 தோலா கழநீரும் தேனும் கூட்டி மத்தித்துக் கொடுக்கவும்.

தீரும் வியாதிகள் : மூலரோகம், இரத்தத்துடன் கூடிய மலம், அதிசாரக்கழிச்சல், குழந்தைகளுக்குச் சுபாவமாக ஏற்படும் இரத்தக்கழிச்சல், பூதசேஷ்டையினால் பயந்து ஏற்படும் இரத்தம், யோனி வியாதிகள் யாவும், யோனியினின்று உண்டாகும் வெண்

இரத்தம் (Luecomea), பித்த இரத்தம், சுபாவமாக ஏற்படும் இரத்த ஒழுக்கு மிகுதியாக ஏற்படின் (Dismenoreah) இவ்விதமான வியாதிகள் தீரும்.

## நெக்ரோதாதிச் சூரணம்

ஆலம்பட்டை, அத்திமரவேரின் பட்டை, அரசப்பட்டை, காட்டுவாகை மரப்பட்டை, கொன்னைப்பட்டை, மாமரப்பட்டை, விளாமர வேரின் பட்டை, பிண்டாரமர வேர்ப்பட்டை, அதிமதுரம், இலுப்பமரப்பட்டை, லோத்திரப்பட்டை, கடலுரிஞ்சிப்பட்டை, பற்பாடகம், வலம்புரிக்காய், நாகநந்தி வேர், சித்திரமூலம், புன்னைப்பட்டை, காட்டுக்கமுகின்பட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, பேய்த்தும்மட்டிவேர், சுத்திசெய்தகருஞ்சேங்கொட்டை இவைகள் யாவற்றையும் சம எடை எடுத்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்துவைத்துக் கொள்ளவும்.

***அளவும், தீரும் வியாதிகளும் :*** 2½ வராகனெடை சூரணம் முதல் 5 வராகனெடை சூரணம் வரை எடுத்துத் தேன்விட்டு மத்தித்து தேகபலத்தை அனுசரித்து உயர்ந்த மருந்துகளையும் கூட்டிக்கொள்ளவும். இது உட்கொண்டபின் திரிபலாதிக் கஷாயம் சாப்பிடவும். திரிபலா என்பது கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி இவைகள்.

## சர்தி* (வாந்தி) ரோகத்திற்கு ஏலாதிச் சூரணம்

**(முத்துசாமி தீக்ஷிதர்)**

**விளாமிச்சை வேர், கிராம்பு, கருவாப்பட்டை, இலவங்க பத்திரி, சிறுநாகப்பூ, உலர்த்தித் தூள்செய்து வஸ்திரகாயம் செய்த இலந்தை, அரிசிப்பொரி, பொரித்த மரத்துவெள்ளை, கோரைக் கிழங்கு, மலாக்கா சந்தனம், பருத்திப் பருப்பு இவைகள் வகைக்கு 2 வராகனெடை, பச்சைக்கற்பூரம், திப்பிலி இவ்விரண்டும் வகைக்கு 1 வராகனெடை இவைகள் யாவற்றையும் நைவாகத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து இத்தூளின் சமஎடை சர்க்கரைத் தூளையும் சேர்த்துக்கொள்ளவும்.**

---

*** சர்தி என்பது வாந்தியைக் குறிக்கும்.**

***அளவும், தீரும் வியாதிகளும் :*** 2½ வராகனெடை முதல் 5 வராகனெடை சூரணம் தேன்விட்டு நன்றாக மத்தித்து வியாதியையும், நோயளியின் பலத்தை அறிந்து அதன் பிரகாரம் கொடுக்கவும். இவ்விதம் கொடுத்தால் வாதம், பித்தம், கபம் இவைகள் சம்பந்தப்பட்ட வாந்தி, பித்தம், கபம் இவைகள் சம்பந்தப்பட்ட வாந்தி நோய்கள் தீரும்.

## ஸம்ஸக்தச் சூரணம்
### (அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

அதிமதுரம், ஜீரகம், சோம்பு, கறிவேப்பிலையின் ஈர்க்கு, நெல்லிமுள்ளி, உயர்ந்த ஏலம், ஜடாமாஞ்சி, வேங்கை மரச் சுள்ளியின் தூள், நாகப்பூ, இலவங்கப்பட்டை இவைகள் வகைக்கு 2 வராகனெடை, மல்லி 22 வராகனெடை, கற்கண்டு 44 வராகனெடை எடுத்து அதிலுள்ள கல், தூசி முதலியவைகளை நீக்கி வெய்யிலில் உலர்த்தி கற்கண்டைத் தவிர மற்றதை இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து, கற்கண்டைத் தனியே பொடித்து இம்மருந்துடன் சேர்த்து ஒரு புதிய மண்பாண்டத்தில் எடுத்துவைத்துக்கொள்ளவும்.

***மருந்தின் அளவு :*** வேளை ஒன்றிற்கு 2 வராகனெடை வீதம் இருவேளையும் கொடுக்கவும்.

***தீரும் வியாதிகள் :*** நீர் கடுப்பு, நீர் எரிவு, கண் எரிவு, பித்த மேகத்தினால் ஏற்படும் கைகால் எரிவு, விடியற்காலையில் வயிற்றில் ஏற்படும் எரிவு, பித்தரோகம், ருசியின்மை, உஷ்ண நோய், விக்கல், வாந்தி, தாகம், சிரங்கு இவைகள் தீரும். பித்த ரோகத்தினால் மெலிந்த உடல் புஷ்டி அடையும். மேக ரோகத்தின் வேகம் குறையும். இவ்வகையான ரோகங்கள் யாவும் இம்மருந்தினால் குணமாகும். சூரணம் ஒரு மண்டலம் (40 நாட்கள்) சாப்பிடவும். குணாகுணங்களை அனுசரித்து மேலும் மருந்து உட்கொள்ளவும்.

***பத்தியம் :*** இச்சாப்பத்தியம். ஒரு மண்டலம் முழுவதும் சூரணம் சாப்பிட வேண்டுமானால் மேல் கொடுக்கப்பட்ட சாமான்களின் அளவை மும்மடங்கு எடுத்துச் செய்யவும்.

இச்சூரணத்துடன் காந்த சிந்தூரம், லோஹசிந்தூரம், அம்ஸ மண்டுகம், வங்க பஸ்பம், நாகபஸ்பம் இவைகளைச் சாப்பிடும் பொழுது ஒரு நெல்லிக்காய் அளவு சூரணத்தை எடுத்து மருந்துகளுடன் கலந்து உட்கொள்ளவும். சிந்தூரங்களுக்கு இச்சூர்ணமே அனுபானமாகவும் அமையும்.

## கறிவேப்பிலைச் சூரணம்

(அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

கறிவேப்பிலை ஈர்க்கு, பருத்திப் பருப்பு, மஞ்சள், மரமஞ்சள், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி வகைக்கு 1 பலம், கடலுருஞ்சிப்பட்டை 7 பலம். இவ்வகையான் 8 சாமான்களையும் உரலிலிட்டு மெல்லியதாக இடித்துத் தூள் செய்து புதுக் கலையத்தில் எடுத்துக்கொள்ளவும்.

***மருந்தின் அளவு, அனுபானம், தீரும் வியாதிகள் :*** இரு வேளையும் 3 பலம் சூரணம் எடுத்து சிறிது சுட்டு, பாதித் தூளைப் போட்டு கால் சேர் கஷாயமிறக்கி, பாதியைக் கஷாயத்துடன் சாப்பிடவும். ஏழு நாட்களுக்கு இவ்விதமே புதிதாகக் கஷாயம் தயாரித்து மருந்தை உட்கொள்ளவும்.

இவ்விதம் ஏழு நாட்களுக்கு சாப்பிட்டுவர எவ்விதமான மதுமேகம், ஜலமேகம் இவைகள் கால் பங்கு குறையும். அதன் பின்பு மறுபடியும் முன்பு கூறியபடியே கஷாயமும் மருந்தும் (சூரணமும்) சாப்பிட்டுவர மதுமேகம், ஜலமேகம் முழுமையும் குணமடையும். முதல் முறை ஒரு மண்டலம் உபயோகிக்கும் பொழுது மட்டும் மைதுனத்தை விலக்கவும்.இந்நோய் குணம் அடைந்தபின் மக்கட்பேறு உண்டாகும். இக்கஷாயம் சாப்பிடும் பொழுது பித்த உபரி (பித்தம் அதிகரித்தல்) ஏற்படின் நான்கு நாட்களுக்குக் கஷாயத்தை நிறுத்திவைத்து பிறகு உட்கொள்ளலாம். மதுமேகம், ஜலமேகம் நோய் இருந்தால் இக்கஷாயத்தைத் தொடர்ந்து சாப்பிடவும், இக்கஷாயத்தை உட்கொண்ட ஏழு நாட்களில் ஏதேனும் குணம் காணவில்லை யாயின் எப்பேர்பட்ட வேறு மருந்துகளைச் சாப்பிட்டாலும் தீராது என்று நிச்சயமாக அறியவும். இக்காயத்தைக் கொடுக்குமுன் வைத்தியர் இந்நோயைக் குணமாக்கிவிடமுடியும் என்று பந்தயம் கட்டி கொடுக்கத் தடையில்லை.

## சீந்தில்கொடிச் சூரணம்
(அய்யாக்கண்ணு பிள்ளை)

சீந்தில் சர்க்கரை 2 பலம், கருவப்பட்டை, தாளிசப்பத்திரி, நாககேசரம் (சிறுநாகப்பூ), ஏலம், சந்தனம், வால்மிளகு, ஜாதிக்காய், கோஷ்டம், நெருஞ்சிமுள், மரமஞ்சள், பூனைக்காலிவிதை, திராக்ஷை, பேரீச்சங்காய், நெல்லிமுள்ளி, கருணைக்கிழங்கு, பரங்கிப்பட்டை, கோரைக்கிழங்கு, இலவங்கப்பத்திரி, தேத்தான்கொட்டைப்பருப்பு, வெள்ளரி விதை, வெட்டிவேர், அமுக்கிராக்கிழங்கு, ஆவாரை வேர், ஆவாரையின் பட்டை, விளாமிச்சவேர், தாமரைக்கிழங்கு, கீழாநெல்லி, நிலாவாரை, நன்னாரி, அதிமதுரம், இலவம்பிசின், நீர்முள்ளிவிதை, ஜாதிப்பத்திரி, கிராம்பு, ஜீரகம், தண்ணீர் விட்டான்கிழங்கு இவைகள் வகைக்கு அரை பலம். எல்லாவகை மருந்தின் சம எடை கல்கண்டு, தேன் 1 சேர் இவைகள் யாவற்றையும் கலந்து லேகியம் செய்யும் முறைப்படி பக்குவமாய் லேகியம் செய்யவும், இந்த லேகியத்தில் 6 தோலா (பலம்) அப்பிரகச் சிந்தூரத்தையும் கலந்து சாப்பிடுவது மிகவும் உத்தமம் ஆகும்.

இதனால் அநேக பித்தநோய், மேகநோய், இருமல் முதலியவைகள் தீரும். இதற்கு இச்சாபத்தியத்தைக் கையாளவும்.

## சீனபாகச் சூரணம்
(அய்யாக்கண்ணு முறை)

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, மல்லி, வாயுவிளங்கம், வால்மிளகு, தாளகம், லிங்கம், வெங்காரம், ஓமம், மயில்துத்தம், பால்துத்தம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு, நவச்சாரம், காந்தம், மரஉப்பு, ஜீரகம், கருஞ்சீரகம், குரோசாணி ஓமம், அபினி, பூலாங்கிழங்கு, சீந்தில்வேர், கடுகு, கல்மதம், வாளுலுவையரிசி, கார்போக அரிசி, மூங்கிலுப்பு, மூங்கில்விதை இவைகள் வகைக்கு 3 பலம், பரங்கிப்பட்டை 4 பலம், கந்தகம் 1 பலம், குங்குலியம் 1 சேர் இவைகளில் கந்தகத்தையும், குங்குலியத்தையும் சுத்தி செய்துகொள்ளவும். வெங்காரத்தைப் பொரித்துக்கொள்ளவும்.

தாளகம், இலிங்கம், வெங்காரப்பொரி, மயில்துத்தம், பால்துத்தம், நவச்சாரம், மரவுப்பு, கல்மதம், கல்நார், சுத்தி செய்த கந்தகம், அபின், காந்தம், குங்குலியம் இவைகளை உரலில் போட்டு நன்றாக இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து கல்வத்திலிட்டு 4 சாமம் அரைத்துப் பிறகு மேற்கூறிய மருந்துகளுடன் கலந்து மறுபடியும் 4 சாமம் அரைத்து எல்லாம் ஒன்றுபட நன்றாய் கலந்தபின் இம்மருந்தின் சம எடைக்குப் பழைய வெல்லத்தையும் கூட்டி நன்றாக நைவாக அரைத்து வெல்லப்பாகுபோல் செய்து ஒரு புதுக்கலையத்தில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

***மருந்தின் அளவும், தீரும் வியாதிகள் :*** வேளை ஒன்றிற்கு கழற்சிக்காய் அளவு எடுத்து இருவேளையும் (காலை, மாலை) தேனில் மத்தித்துக் கொடுக்கவும்.

இவ்விதம் கொடுக்க விரணங்கள், கிரந்தி, சூலை, மேகம், மேகசூலை, வாயு, சொறி இவ்வாறான சகலவித நோய்களும் தீரும்.

பத்தியம் : இச்சா பத்தியத்தை அனுஷ்டிக்கவும்.

## வாதராக்ஷஸச் சூரணம்

பாதரசம், கந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஜீரகம், கருஞ்சீரகம், திப்பிலிமூலம், சிற்றரத்தை, ஓமம், வெங்காரம் இவைகள் வகைக்கு அரை பலம். ரசம், கந்தகம் இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு பொரித்து வெங்காரத்தையும் போட்டு நன்றாக அரைக்கவும், மற்ற மருந்துகளை இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து அரைத்த மருந்துடன் கூட்டி கல்வத்திலிட்டு நான்கு சாமம் அரைக்கவும். அதன்பின் எடுத்து ஒரு டப்பியில் அடைத்துவைத்துக் கொள்ளவும்.

மருந்தின் அளவும், தீரும் வியாதிகளும் : வேளை ஒன்றுக்கு பணவிடை இருவேளையும் தேனில் கலந்துகொடுக்கவும். இவ்விதம் கொடுக்க அஜீர்ணத்தினால் உண்டாகும் கழிச்சல், விஷபேதி, உடல்வலி, வயிற்றுவலி, ஜலதோஷம், கபம், இளஞ்சுரம் இவ்வாறான நோய்கள் தீரும்.

## மாத்திரை, குளிகை வகைகள்

### கிராணி கபாடம்

(அப்புராவின் முறை)

அபின் ஒரு பலம், இலவம்பிசின் ஒரு பலம், மாசிக்காய் ஒரு பலம், ஜாதிக்காய் ஒரு பலம், மாதுளம்பழத்தின் ஓடு ஒரு பலம், காசுக்கட்டி ஒரு பலம், புளியங்கொட்டை தோல் ஒரு பலம் இவைகளை எல்லாம் ஒன்றுகூட்டி எருமைத் தயிரில் கலந்து நன்றாக நைய அரைத்து அம்மான்பச்சரிசியின் பழங்களின் அளவில் உருண்டைகள்செய்து உலர்த்திக்கொள்ளவும். பிறகு இலவங்கப்பட்டையின் கஷாயத்தில் மேற்படி உருண்டையைக் கொடுக்க சகல கிராணி ரோகமும் தீரும். இதற்கு இச்சாப்பத்தியம்.

### விரேசனத்திற்கு உருண்டை

(பேதி உருண்டை)

நேர்வாளப்பருப்பு, கோஷ்டம், அதிமதுரம், ஏலம், ஜண்பகமொட்டு இவைகள் வகைக்கு 3 வராகனெடை, எலுமிச்சம்பழச்சாற்றில் இவைகளைப் போட்டு நைவாக நான்கு சாமம் அரைத்து, மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி குழாய் புட்டியில் அடைத்துவைத்துக் கொள்ளவும்.

***மருந்தின் அளவு :*** மெல்லிய சரீரத்திற்கு ஒரு மாத்திரை, பலத்த சரீரத்திற்கு 2 மாத்திரைகள் வீதம் கொடுக்கவும். வெந்நீரில் சிறிதளவு சர்க்கரைப்போட்டு மாத்திரையை வைத்துக் கொடுக்கவும்.

***அனுபானம் :*** இஞ்சிச் சாற்றிலும் கொடுக்கலாம். அதிகமாக பேதியானால் வெந்நீரில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து குடிக்க பேதி நிற்கும். பேதியே ஆகவில்லை என்றால் மிளகு ரசச்சாதம் புசிக்கவும். நேர்வாளத்தின் முளையை எடுத்துவிட்டு சுத்திசெய்து பிறகுதான் மருந்து செய்யவேண்டும்.

## வெங்கல சஞ்சீவ மாத்திரை

வெங்கல அரப்பொடி, தாமிரப்பொடி, பித்தளைப்பொடி, லோக (அய)பொடி, சுத்திசெய்த தாளகம், திப்பிலி இவைகள் வகைக்கு 1 பலம், காந்தப்பொடி 2 பலம், கந்தகம் கை 6 பலம். இவைகளை கற்றாழை சாறுவிட்டு 24 சாமம் கைவிடாமல் அரைத்து, அடி கெட்டியாக இருக்கும்படியான மண் சட்டியில் அரைத்த மருந்துகளை பெரிய வில்லையாகத் தட்டி சட்டியின் நடுவில் வைத்து வெய்யிலில் நன்றாக உலர்த்தவும். பிறகு சட்டியின்மேல் மற்றொரு சட்டியை மூடி, சீலைமண் செய்து சிந்தூரம் செய்யும் அடுப்பின் மேலேற்றி 24 சாமம் வரை படாக்னி தீயிட்டு, மருந்து ஆறியபின் எடுத்துத் தூள்செய்து டப்பியில் வைக்கவும். அல்லது கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறும்விட்டு அரைத்து குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்துகொள்ளவும்.

***அனுபானம் :*** காலை, மாலை இருவேளையும் அரை மண்டலம் சாப்பிட்டால் சுரம், வாயு சம்பந்தமான நோய்கள் தீரும். நோயை அனுசரித்தும், சரீரத்தின் பலத்தையும், அனுபான பேதத்தையும் அனுசரித்துக் கொடுக்கவும். முக்கிய அனுபானம் தேன். இந்த மருந்து மிகவும் பிரசித்தியானது. புகழ் வாய்ந்தது. அனுபான பேதங்களுடன் கொடுத்தால் எல்லாவித நோய்களும் தீரும்.

## வாதராக்ஷஸ மாத்திரை
### (அய்யாக்கண்ணு பிள்ளை)

காந்த சிந்தூரம், இரச சிந்தூரம், லோக சிந்தூரம், தாமிர (செம்பு) சிந்தூரம் இவைகள் வகைக்கு 3 வராகனெடை, பாதரசம், பெருஞ்சீரகம், வத்ஸநாபி, பூலாங்கிழங்கு, இலிங்கம், மனோசிலை, குடசப்பாலை, நன்னாரி, சுக்கு, திப்பிலி, மிளகு, கற்றாழையின் உப்பு, நீலியுப்பு, சவுக்காரச்சுண்ணம் இவைகள் வகைக்கு 3 வராகனெடை. பொரித்த வெங்காரம், கந்தகம், நவச்சாரம், நேர்வாளம் இவைகள் வகைக்கு 5 வராகனெடை. சுக்கு, திப்பிலி, மிளகு, நன்னாரி வேர், குடசப்பாலை இவைகளை மட்டிலும் எடுத்து அம்மியிலிட்டு மெல்லியதாக அரைத்து

கல்வத்தில் போட்டு மற்ற மருந்துகளையும், கல்வத்தில் கூட்டி 7½ வராகனெடை பெருங்காயத்தையும் சேர்த்து, நொச்சியிலைச் சாறுவிட்டு யாவற்றையும் இரண்டு சாமம் (யாமம்=சாமம்=3 மணி நேரம்) நைவாக அரைக்கவும். பிறகு பூண்டு தைலத்தைவிட்டு 2 சாமம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

***அளவு, அனுபானம் தீரும் வியாதிகள்:*** விடியற்காலையில் தேனில் ஒருவேளை சாப்பிடவும். இவ்வாறு மூன்று நாட்கள் கொடுக்கவும். பத்து நாட்களுக்குப் பிறகு 2 நாட்களுக்கு ஒருவேளை கொடுக்கவும். இவ்விதமே நின்று நின்று மருந்தைச் சாப்பிட்டால் குன்மரோகம், வாயுவலி, வயிற்று நோய், குன்மம், பதினோரு பித்த நோய்கள், 80 வாயு ரோகங்கள், 26 காதின் நோய்கள், சிலேத்தும வியாதிகள், நடுக்கல் வியாதியும் தீரும். இவ்வாறு தவறாது தீரும் என்று இம்மருந்தை உலகுக்குத் தெரிவித்த அகஸ்திய முனிவர் சொல்லியிருக்கிறார்.

## ஆபத்தாரண மாத்திரை

சாஸ்த்ரவேதி, கடுகுரோகிணி, அதிமதுரம், பாதரசம், இலிங்கம், மனோசிலை, தாளகம், கந்தகம், வெட்டிவேர், விலாமிச்சைவேர், நன்னாரிவேர், தாமிரபஸ்மம், சந்தனம், புன்னாகம் வகைக்கு 2 வராகனெடை. இவைகளை முசுமுசுக்கைச் சாற்றில் மூன்று நாட்களும், இளநீரில் மூன்று நாட்களும் நைவாக அரைத்து உளுந்தின் அளவில் மாத்திரைகள் செய்துகொள்ளவும். இருவேளையும் கொடுக்க உள்தாகம் அல்லது எரிவு, பிரமஜன்னி இவைகள் தீரும்.

## சகல விஷரோகங்களுக்கும் விஷபூபதி மாத்திரை
## (அய்யாக்கண்ணு பிள்ளை)

பாதரசம், கந்தகம், வத்ஸநாபி, நேர்வாளப் பருப்பு, கடுக்காய்த்தோல், பூவந்திக்கொட்டையின் மேற்றோல் இவைகள் வகைக்கு 3 வராகனெடை வீதம் எடுத்துக்கொண்டு, வேப்பெண்ணையை இத்துடன் கூட்டி, நான்கு நாழிகைகள்

நன்றாக அரைத்து மெழுகு பதமாகச் செய்து எடுத்துவைத்துக் கொள்ளவும். வேளை ஒன்றிற்கு ஒரு குன்றிமணி அளவு உட்கொண்டால் சகலவிதமான விஷ ரோகங்களும் தீரும்.

## சன்னிபாதத்திற்குச் சுராங்குச மாத்திரை

(அய்யாக்கண்ணு பிள்ளை)

கௌரீ பாஷாணம், மனோசிலை, கந்தகம், தாளகம் இவைகளைச் சுத்தி செய்துகொள்ளவும். வகைக்கு 3 வராகனெடை எடுத்து கல்வத்திலிட்டு பாகலிலைச்சாற்றில் நான்கு சாமம் அரைத்து, பிறகு மிளகு ஒரு தோலா போட்டு கஷாயமிறக்கி அக்கஷாயத்தைவிட்டு மேலும் 4 சாமம் அரைக்கவும்.

நீலிவேரின் கஷாயத்தைவிட்டு 4 சாமம் அரைக்கவும். அதன்பிறகு கடுகு பிரமாணம் மாத்திரைகள் செய்துகொள்ளவும்.

இம்மாத்திரையை அனுபான பேதத்தில் மூன்று வேளைக் கொடுத்தால் சன்னிபாதம் முதலிய சுரம் தீரும்.

## சர்வசுராங்குச மாத்திரை

(அய்யாக்கண்ணு பிள்ளை)

பாதரசம், கந்தகம், மனோசிலை, தாளகம், பால்துத்தம், மயில்துத்தம், சங்குபாஷாணம் வகைக்கு 3 வராகனெடை வீதம் எடுத்து, மெல்லியதாய்ப் பொடிசெய்து மண் சட்டியில் போட்டு சாரணைச்சாற்றைச் சிறிது விட்டு அதன்மேல் ஒரு வெண்கலக் கிண்ணத்தை மூடி இடுக்கு இல்லாமல் சீலைமண் செய்து கிண்ணம் மறையும்படி மணலைச் சட்டியில் நிரப்பி, அடுப்பின் மேலேற்றி தீபாக்கினி முறையில் ஒரு சாமம் தீயிடவும். பிறகு ஆறியபின் எடுத்துப்பார்த்தால் மருந்து கருநிறமாயிருக்கும். எடுத்துக் கொண்ட எடையும் குறையாமல் இருக்கும். இம்மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு, தகரையின் சாறுவிட்டு 2 சாமமும், மணத்தக்காளியின் சாற்றில் நைவாக அரைத்துப் பாசிப்பயிறு பிரமாணம் மாத்திரைகள் செய்யவும்.

***மருந்தின் அளவு :*** வேளை ஒன்றுக்கு ஒரு மாத்திரை வீதம் மூன்று வேளைகள் தக்க அனுபானத்துடன் கொடுக்க எல்லாவித சுரங்களும் தீரும்.

## தேங்காய் மாத்திரை
### (அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

லோக அரப்பொடி 1 பலம், இரும்பு கிட்டத்தூள் 1 பலம், முற்றிய தேங்காய் 1, லோகப்பொடி, கிட்டத்தூள் இந்த இரண்டையும் நைவாக அரைத்துக்கொள்ளவும். தேங்காயின் ஒரு கண் வழியாகத் துவாரமிட்டு அதற்குள் அரைத்த மருந்தைப் புகுத்தித் துவாரத்தைத் தேங்காய் நாறினால் இறுகமூடி, ஒரு அங்குல கனத்திற்குப் பசுவின் சாணத்தால் கவசம் செய்து, சிறிது உலர்த்திப் புடம் போடவும். தேங்காய் தானாக வெடிக்கும் வரையில் புடத்தில் இருக்கவேண்டும். புடம் போடும்போது மேலுள்ள தேங்காய் ஓடு மட்டும் கருகும்படி, உள்ளிருக்கும் தேங்காய் சிறிது கருகும்படி பக்குவமாய் செய்யவும், பிறகு தேங்காயின் மேலுள்ள சாம்பல், கருப்பு முதலியவைகளை நீக்கி உள்ளிருக்கும் கருகிய தேங்காயைக் கத்தியால் சுரண்டி எடுத்து விட்டு, மற்ற தேங்காய், மருந்து இவைகளைக் கத்தியால் சுரண்டி எடுத்துக் கல்வத்திலிட்டு கையாந்தகரையின் சாறுவிட்டு நான்கு சாமம் வரை நைவாக அரைக்கவும். பிறகு அதை தேத்தான் கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள் செய்துகொள்ளவும்.

காலையில் 3 பலம் கையாந்தகரைச் சாற்றில் உறைத்துக் கொடுக்கவும். சாயங்காலத்தில் மருந்தைத் தேனில் உறைத்துக் கொடுக்கவும. இவ்விதம் ஏழு நாட்களுக்குக் கொடுத்தால் எப்பேற்பட்ட பாண்டு வீக்கம் தீரும். உப்பில்லா பத்தியத்தைக் கையாளவும். ஏழு நாட்களுக்குப்பின் இச்சாபத்தியத்துடன் மருந்து புசித்து பதினைந்தாவது தினத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்து மருந்து சாப்பிடாமல் இருக்கவும். பதினைந்து நாட்களுக்குப்பின் கால் மண்டலம் (10 நாட்கள்) தகுந்த அநுபானத்துடன் மருந்து சாப்பிட்டால் பாண்டு ரோகமும் இதனாலுண்டாகும் உடல் வீக்கமும் தீரும்.

## ரசபூபதி மாத்திரை

(முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

ஜாதிலிங்கத்திலிருந்து எடுத்த பாதரசம் 40 விராகனெடை, சுத்திசெய்த கந்தகம் 40 விராகனெடை, சுத்தி செய்த வத்ஸநாபி 20 விராகனெடை, தாமிரபஸ்மம் 20 வராகனெடை, வெண்மிளகு 40 விராகனெடை, இவைகளின் தாமிரபஸ்மம் செய்யும் முறையை முதலில் சொல்லுகிறார்கள். தேவையான செம்பை கொண்டுவந்து உருக்கி மூன்று முறை நொச்சியிலைச் சாற்றில் ஊற்றவும். பிறகு பிரண்டையின் சாற்றில் மும்முறை உருக்கி ஊற்றவும். பிறகு காட்டுக்கருணையின் சாற்றில் மும்முறை உருக்கி ஊற்றவும். இவ்விதம் செய்தால் தாமிரம் சுத்தியாகும். பிறகு இச்செம்பை மிக மெல்லிய தகடாகத்தட்டி அடித்து ஒரு கலயத்தின் அடியில் புளியிலையை இடித்தத் தூள் போட்டு அதன்மேல் தாமிரத் தகட்டை ஒவ்வொன்றாக வைத்து ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, இவ்விதம் புளியிலைத் தூளை மேல்போட்டு தகடுகள் யாவும் முழுகும்வரையில் வைத்த தகடுகளை அசைக்காமல், தண்ணீர்விட்டு அடுப்பின் மேலேற்றி, ஒரு சாமம் தீயிட்டு அப்படியே ஒருநாள் வைத்து, மறுநாள் தாமிரத் தகடுகளை எடுத்து நன்றாகக் கழுவி வைத்துக் கொள்ளவும்.

இச்சுத்தி செய்த செப்புத் தகடுகளுக்குச் சமஎடை இலிங்கத்தில் எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு நைவாக அரைத்துத் தாமிரத் தகடுகளின்மேல் கவசம் செய்து, ஒரு சாணாக்கியில் வைத்துத் தாமிரத் தகட்டின் சம எடை கந்தகம், அதே எடை சுவர்ணநிமளை இவ்விரண்டையும் பொடித்து சிறுதூளை சாணாக்கியின் அடியில் போட்டு, அதன்மேல் தாமிரத்தகட்டை வைத்து அவ்வாறே எல்லா தாமிரத் தகட்டையும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, இப்பொடியையும் பரப்பி சாணாக்கியின்மேல் மற்றொரு சாணாக்கியை சந்து பதியும்படி வைத்து நன்றாக மூடி சீலைமண் செய்து பெரிய வராக புடத்தில் எரிக்கவும். புடம் ஆறியபின் எடுத்துப் பார்த்தால் கையால் தூள் செய்யக்கூடிய நிலையிலிருக்கும். தாமிரத் தகடுகளின் அளவிற்கு சம அளவு கந்தகம் ஒவ்வொரு புடத்திற்கும் வைக்கவேண்டும்.

இவ்விரண்டையும் காட்டுக் கருணைகிழங்கின் சாற்றினால் அரைத்து வில்லைகளாகத் தட்டி உலரவைத்து ஏழு புடங்களில் எரிக்கவும். புடத்தின் பிரமாணம் (அளவு) முன்புகூறிய புடங்கள் ஒவ்வொன்றும் 1½ முழ உயரமும், 1முழு அகலமும், இதர ஏழு புடங்களும் 1½ முழ உயரமும் ஒரு முழ அகலமுமாக இருத்தல் தேவை. இவ்வாறு புடம்வைத்தால் தாமிரபஸ்பம் சிறிது கருநிறமாக இருக்கும்.

கந்தக சுத்தி செய்ய, கையாந்தகரைச் சாற்றில் கந்தகத்தை உருக்கி ஊற்றினால் சுத்தியாகும். அதை எடுத்து கழுவிவைத்துக் கொள்ளவும்.

***ரஸபூபதி செய்யும்முறை :*** முதலில் பாதரஸம், கந்தகம் இரண்டையும் கல்வத்திலிட்டு 3 சாமம் அரைத்தால் கருநிற மைபோலாகும். இத்துடன் தாமிர பஸ்மம் 20 வராகனெடை, வத்ஸநாபி தூள் 20 வராகனெடையில் 10 வராகனெடை தூள் மட்டும் சேர்த்து சிறு செருப்படிச் சாற்றைவிட்டு 6 சாமம் அரைத்து இலந்தைப்பழ அளவில் உருண்டைகள் செய்து உலர்த்தி காசிக் குப்பியில் போட்டு வாயை ஏழு சீலைமண் செய்து, இக்குப்பியை சிந்தூரம் செய்யும் மண் சட்டியில் வைத்து நான்கு விரல் உயரம் மணல்போட்டு குப்பியின் வாயின்மேல் வில்லையால் மூடி சட்டியை அடுப்பின் மேலேற்றி ஒரே வகையான விறகால் காடாக்னி முறையில் 8 சாமம் தீயிட்டு எரித்து குப்பி ஆறியபின் குப்பியிலுள்ள மருந்தை எடுத்து மறுபடியும் கல்வத்தில் போட்டு மீதியுள்ள 10 வராகனெடை வத்ஸநாபித் தூளையும் சேர்த்து 40 வராகனெடை மிளகையும் கூட்டி, இஞ்சிச் சாறுவிட்டு 16 சாமம், வெற்றிலைச் சாற்றில் 16 சாமமும் அரைத்து மாத்திரைகள் செய்துகொள்ளவும்.

***மருந்தின் அளவு :*** ஒரு குன்றிமணியிலிருந்து இரண்டு குன்றிமணி வரையில் வயதின் பலம், தேகபலம், காலபலம், ரோகபலம் இவைகளை அறிந்துகொடுக்கவும்.

***அனுபானம் :*** இஞ்சிச்சாறு, வெற்றிலைச்சாறு இவ்விரண்டையும் சரீரத்தின் பலத்தை அனுசரித்து 3 வராகன்

எடை அல்லது 4 வராகன் எடை அல்லது 5 வராகன் எடை வரையில் சமயோஜிதம்போல் மருந்துடன் கலந்தும், மருந்தின் எடை மிளகுத்தூளையும் கூட்டிக்கொள்ளவும்.

***தீரும் வியாதிகள் :*** மூச்சு, இருமல், கபரோகம், பாண்டுரோகம், மஞ்சக்காமாலை, வயிற்றுவலி, வாதரோகம், கபத்தினால் உண்டாகும் வாந்தி, கபத்தினால உண்டாகும் காச நோய், சன்னிபாதம், குரூரமான சுரம் இவைகள் யாவும் தீரும்.

***பத்தியம் :*** புளிப்பு, கைப்புப் பதார்த்தங்கள், புளி, பாகல், கடுகு, எண்ணெய் இவைகளை விலக்கவும்.

## குன்மகுடோரி
### (வட்டாத்து ஞானியர்)

துத்தநாகம் 3 பலம் எடுத்து உருக்கி, அதில் மனோசிலைத் தூள் 3 பலம் போட்டு கொழிஞ்சி வேரினால் நன்றாகப் புரட்டிக் கொண்டிருந்தால் பஸ்மமாகும். இத்துடன் ரசசௌவீரம் 3 பலம், இலிங்கம் 3 பலம், வடதலை வேரின் பட்டை 3 பலம. இவைகள் எல்லாவற்றையும் எலுமிச்சம்பழச்சாற்றில் 6 சாமம் அரைத்து அதனை வில்லைகளாகத் தட்டி உலர்த்தி வாலுகாயந்திரத்தில் வைத்து நன்றாகப் புடம்போட்டுத் தந்திரமாகவும் எடுத்து மாத்திரை செய்துகொள்ளவும். இம்மருந்தினால் எட்டுவித குன்மம் ,வாயு, நல்ல அனுபானத்துடன் கொடுக்கக் குணமாகும்.

## சூலைகண குடோரி மாத்திரை
### (வட்டாத்து ஞானியர்)

இலிங்கம் கட்டும் விதத்தில் கட்டிய இலிங்கம் 3 பலம், ரசகற்பூரம் 3 பலம். இவ்விரண்டையும் கலந்து கையாந்தகரையின் சாறு விட்டு எட்டு சாமம் அரைத்து வடையாகத் தட்டி, வாலுகா யந்திரத்தில் வைத்து புடம்போட்டு எரித்து மாத்திரைகள் செய்யவும். இதனால் சளி, கபம், வாயு முதலிய நோய்கள் தக்க அனுபானத்துடன் கொடுக்க நோய் தீரும்.

இம்மாத்திரை செய்ய உபயோகிக்கும் இலிங்கத்தைக் கட்டும் விதம் : ஒரே கட்டியாக 11¼ தோலா எடையுள்ள இலிங்கம், தாளகம் 11 தோலா எடை, கந்தகம் 9 தோலா எடை, 6¾ தோலை எடை கற்பூரம், சௌவீரம் 4½ தோலா. இலிங்கத்தைத் தவிர மற்ற நான்கு வகைகளை ஒன்றுகூட்டி தூள்செய்து ஒரு அண்டாவின் நடுவில் இலிங்கத்தைவைத்து அக்கட்டியின்மேல் மேற்கூறிய தூளை கட்டிக்கு அடியில் பாதியும், அதன்மேல் மற்ற பாதித்தூளையும் போட்டு வாலுகா யந்திரத்தில்வைத்து புடம்போட்டு எடுத்துக்கொள்ளவும். இவ்விதமே ஐந்து புடங்கள் போடவும். இலிங்கக் கட்டியின் பேரில் போட்டிருக்கும் தூளையும் எடுத்துவைத்துக் கொள்ளவும். இவைகளையும் மேற்கூறிய சூலிகண குடோரியுடன் சமயோதம் போலும் புத்தி சாதுர்யத்தினாலும் உபயோகப்படுத்திக் கொள்ளவும். மிகவும் உயர்ந்த மருந்து.

## ஆனந்தபைரவ மாத்திரை

(வாட்டாத்து ஞானியர் முறை)

பாதரசம் 3 பலம், கந்தகம் 3 பலம், மனோசிலை 3 பலம், இலிங்கம் 3 பலம், வெங்காரம் 3 பலம், வத்ஸநாபி 3 பலம், மிளகு 3 பலம். இவைகளை ஒன்றுகூட்டி 6 சாமம் அரைத்து, பிறகு அதே பிரகாரம் கற்றாழைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, பசுவின் பால் இவைகளை முறையே விட்டு இரண்டு இரண்டு சாமம் நைவாக அரைத்து வில்லைத் தட்டி, உலர்த்தி, வாலுகாயந்திரத்தில் வைத்துப் புடம்போட்டு எரித்து எடுத்துவைத்துக்கொள்ளவும். தகுந்த அனுபானத்துடன் கொடுக்க சன்னிபாதம், தோஷம், சந்நிவாதம் இவ்வகை நோய்கள் தீரும்.

## பூர்ணசந்ரோதய மாத்திரை

(வாட்டாத்து ஞானியர் முறை)

மனோசிலை 3 பலம், இரசசிந்தூரம் 3 பலம், அயசிந்தூரம் 3 பலம், கருவங்கபஸ்மம் 3 பலம், இரும்புச் சிட்டத்தின் சிந்தூரம் 3 பலம். இவ்வகை மருந்துகளைச் சேகரிக்கவும். கோழியின் முட்டைகளைக் கொணர்ந்து ஒரு துவாரமிட்டு அதனுள் உள்ள

கருவை நீக்கிவிட்டு, மேற்கூறிய மருந்துக்கூட்டை அதனுள் நிரப்பி, அதன்மேல் நான்கு சீலைமண் செய்து உலர்த்தி வாலுகா யந்திரத்தில் வைத்துப் புடம்போட்டு எடுத்து எல்லாவற்றையும் ஒன்று செய்துகொள்ளவும்.

இம்மருந்தை அனுபான பேதங்களில் கொடுத்தால் தோஷம், சன்னிபாதம், க்ஷயம், வாயு இவ்வாறான நோய்கள் தீரும்.

## அர்த்தநாரீஸ்வர மாத்திரை
## (வாட்டாத்து ஞானியர் முறை)

இரசசிந்தூரம் 3 பலம், இலிங்கம் ¼ சேர், கருவங்க சிந்தூரம் 1 பலம், இரும்புச் சிட்ட சிந்தூரம் 5 பலம், கந்தகம் 3 பலம். இவ்வைந்தும் சிவசக்தி என்பவை. மனோசிலை 3 பலம், தாளகம் 4½ தோலா, நாகநீர் 4½ தோலா (1½ பலம்), பாதரசம் 1½ பலம், இரசகற்பூரம் 3 பலம், கந்தகம் 3 பலம், வெள்வங்க நீர் 1½ பலம். இவ்வேழு வகையும் ஈஸ்வரி அம்சம், இவ்விரண்டு சிவனையும், சக்தியையும் ஒன்றாகக் கூட்டி வாலுகா யந்திரத்தில் வைத்துப் புடம்போட்டு எரித்து மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். இம்மருந்தை சுரம், சன்னிபாதம், குன்மம் முதலான நோய்களுக்குத் தகுந்த அனுபானத்துடன் கொடுக்க வியாதிகள் தீரும்.

## காலாநந்த வாதராக்ஷச மாத்திரை
## (வாட்டாத்து ஞானியர் முறை)

பாதரசம், கந்தகம், மூர்தார்சிங்கு, இரும்புச் சிட்டத்தின் சிந்தூரம் இவைகள் வகைக்கு 3 பலம், எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு எல்லாவற்றையும் ஒன்றுகூட்டி நான்கு சாமம் அரைத்து மாத்திரைகள் செய்துகொள்ளவும்.

அனுபான பேதங்களினால் இம்மருந்தைக் கொடுத்தால் எல்லாவித நோய்களும் தீரும்.

## உருக்கு வாத ராக்ஷஸ மாத்திரை
### (வாட்டாத்து ஞானியர் முறை)

பாதரசம், கந்தகம், லோஹகாந்தம், வத்ஸநாபி மிளகு, இலிங்கம், வெங்காரம் வகைக்கு 3 பலம் மனோசிலை 3 பலம், காந்தம் 3 பலம் இவைகள் எல்லாவற்றையும் (சுத்திசெய்து தூள் செய்தும்) வாலுகா யந்திரத்தில் புடம் போட்டு எடுத்துக்கொண்டு மாத்திரைகளாகச் செய்துகொள்ளவும். இம்மருந்து ஜன்னி, தோஷம், வாதம், வாயு முதலான நோய்களுக்குத் தக்க அனுபானத்துடன் கொடுக்க மிகுந்த குணத்தைத் தரவல்லது.

# தைல வகைகள்

## மகாசந்தனாதித் தைலம்
### (புருஷோத்தம தீர்த்தருடைய முறை)

விலாமிச்சை வேர், நன்னாரி வேர், கோரைக்கிழங்கு, அதிமதுரம், ஏலம், இலந்தமரப்பட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, கிருஷ்ண அகில் இவைகள் வகைக்கு 6 தோலா எடை, மலாக்கா சந்தனத்தூள் 2 சேர், இதை மெல்லியதாய் சீவி 32 சேர் ஜலத்திலிட்டு 3 நாட்களுக்கு ஊறவைத்து, பிறகு கமலாக்னி தீயிட்டு வேகவைத்து 4 சேர் கஷாயமிறக்கி ஒரு பெரிய பாத்திரத்தில் எடுத்துவைக்கவும். இதில் பத்து சேர் நல்லெண்ணெய் சேர்த்து, பிறகு மீதமுள்ள சந்தனச் சக்கையில் 20 சேர் தண்ணீர் மறுபடியும் சேர்த்து ஒரு சேர் கஷாயமிறக்கிக் கொண்டு பாத்திரத்திலுள்ள எண்ணெயில் கலந்துவைக்கவும்.

பிறகு விலாமிச்சை வேர் மற்றவைகளைப் பொடி செய்து ஒரு பானையில் போட்டு 32 சேர் நீர் விட்டு ஒருநாள் ஊறவிட்டு அடுப்பிலேற்றி 4 சேர் கஷாயமிரக்கி கஷாயத்தில் கலந்து வைக்கவும்.

பிறகு இலவங்கப்பட்டை, கருவாப்பட்டை, தமாலபத்திரி, கிராம்பு, பூசாந்துப்பட்டை, கிளிபூரம்பட்டை, தாளிப்பத்திரி, சரளதேவதாரு, சிற்றரத்தை, மஞ்சிஷ்டம், அமுக்கிராக்கிழங்கு,

மரமஞ்சள், வில்வவேர், ஜாதிக்காய், நன்னாரி, அகில் வகைக்கு 2 வராகனெடை, ஏலம், ஜடாமாஞ்சி, கோஷ்டம், அதிமதுரம், ஜண்பகமொக்கு, கஸ்தூரிமஞ்சள், சோம்பு வகைக்கு 3 வராகன் எடை, பெருஞ்சீரகம், கௌலா, கோரோசன கிழங்கு வகைக்கு 4 வராகனெடை, கச்சோலம் (பூலாங்கிழங்கு), கோரைக்கிழங்கு, வெட்டிவேர் வகைக்கு 5 வராகனெடை, மகிழம்பூ 6 வராகன் எடை, மரு 8 வராகனெடை, கல்பூ 10 வராகனெடை இவைகள் யாவற்றையும் நன்றாக அரைத்து எண்ணெயுடன் கலந்து 8 சேர் பசுவின் பாலையும் கலந்து வெய்யில் காலமானால் நீர் நீக்கிய தயிர்கட்டி 4 சேர் சேர்க்கவும். குளிர்காலத்தில் பாலை மட்டும் சேர்க்கவும். பக்குவமாய் எண்ணெயைக் காய்ச்சி (வஸ்திரத்தில்) வடிகட்டி அத்துடன் கோரோசனை, பச்சக்கற்பூரம், கற்பூரம் குங்குமப்பூ வகைக்கு ஒரு விராகனெடை, ஜவ்வாது அரை வராகனெடை, புனுகு அரை விராகனெடை இவைகளையும் தைலத்தில்போட்டு மேலும் ரோஜா அத்தர் கால் விராகன் எடையும் கலந்து, தாழம்பூவின் இதழ்களையும் கலந்து சீனா பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும். இச்சீனா பாத்திரத்தின்மேல் ஒரு துணியைக் கட்டி, அதன்மேல் ஜாதிப்பூ, மல்லிகைப்பூ, இருவாட்சிப்பூ, ஜண்பகப்பூ, மகிழம்பூ, மரு, மருதாணிப்பூ, ரோஜாப்பூ, வெட்டிவேர் இவைகளை மேலே ஒன்று மேலொன்று அடுக்கி நன்றாக மூடி ஓரிரண்டு நாட்களுக்கு அப்படியே வைத்து வாசனைகூட்டி உபயோகிக்கவும், எவ்விதமான ரோகங்களையும் போக்கக்கூடியது, தைலங்களில் வேந்தன் எனக்கூறலாம்.

## இலகு சந்தனாதி தைலம்
### (புருஷோத்தம தீர்த்தருடைய முறை)

சந்தன மரத்தின் சீவிய சிறிய சிறிய துண்டுகள் அரைச் சேர். இவைகளை மெல்லியதாகச் சீவல்போல் சீவி ஒரு பானையிலிட்டு 50 சேர் தண்ணீரையும் விட்டு அடுப்பின் மேலேற்றி 6 சேராகக் காய்ச்சிக் கஷாயமிறக்கிக் கொள்ளவும். மற்றொரு பானையில் விலாமிச்சைவேர் அரைச் சேர் எடுத்து இடித்து 12 சேர் தண்ணீரில் கலந்து இரண்டு சேர் கஷாயமாக்கிக் காய்ச்சி அத்துடன் 8 சேர் எண்ணெய் கலந்து முன்பு சந்தனாதித் தைலத்திற்குக் கூறியுள்ள கல்க வகைகளை மட்டும் அரைத்து

கலந்து பக்குவமாய் எண்ணெய்க் காய்ச்சி ஒரு சீனா பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவும். எண்ணெயை வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். விரும்பினால் புஷ்பங்களினால் முன்பு கூறியபடி தைலத்திற்கு வாசனையை ஊட்டி எடுத்துக்கொண்டு உபயோகிக்கலாம்.

## மேகத்தினால் உண்டாகும் சகல மேக வியாதிகளுக்கும் தைலம்

### (அய்யாக்கண்ணு பிள்ளை)

பரங்கிப்பட்டை (நல்ல வெண்ணிறம் உடையது) 2½ சேர், கல்லுரலில் போட்டு இடித்து ஒரு பானையில் போட்டு, 32 சேர் நீரையும் விட்டு 8 சேர் கஷாயமிருக்கும்படிக் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். சிற்றாமணக்கு எண்ணெய் 4 சேரும் இதில் கலந்து எலுமிச்சம்பழச்சாறு 2 சேர், வெங்காயச்சாறு 2 சேர், தேங்காய்ப் பால் 2 சேர் இவைகளையும் ஒன்றுகூட்டி நற்றேலம் 3 தோலா எடை, வெட்பாலை அரிசி ஒரு பலம், பூவந்தி மரப்பட்டை முற்றியது 6 தோலா இவைகளை நன்றாக அரைத்து எண்ணெயில் கலந்து முதல் நாள் பொன்னிறமாகக் காய்ச்சி மறுநாள் மெழுகு பதமாகக் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும்.

பத்தியமும், மருந்தின் பரிமாணமும் : கால் சேர் உட்கொண்டால் மிதமாக பேதியாகும். இவ்வாறு 5 நாட்கள் உப்பில்லாப் பத்தியமிருக்கவும். பத்தியமில்லாமல் வேண்டும் போது சாப்பிடலாம். தினமும் விடியற்காலையில் ஒரு கரண்டி வீதம் சாப்பிடலாம்

தீரும் வியாதிகள் : பரவும் இரணம், சொறி, மேக ஊரல் இவ்வகையான சரும(தோல் வியாதிகள், எல்லாம் குணமாகும். தேவையானால் சுத்தி செய்த இரசகற்பூரம் 11 பணவிடை தைலத்தில் கலந்துவைத்தும் உபயோகிக்கலாம்.

## எலும்பு முறிவு, அடிபட்டதற்கு, மூட்டு எலும்புகள் பிசகி இருந்தாலும் விரணமாயிருந்தாலும் இதற்குத் தைலம்

(சேக்கின் முறை)

வெண்ணிற பூக்களுடைய கிலுகிலுப்பை இலை, நாகநந்தி (தேள் கொடுக்கு இலை), சிறு செருப்படி இலை, செருப்படி இலை, கருஊமத்தை இலை, காட்டுத்துளசியிலை, கருந்துளசி இவ்வேழு வகை இலைகளின் சாறு 7 சேர் (ஒவ்வொன்றும் ஒரு சேர்) வீதம் எடுத்துக்கொண்டு கீழே கூறியுள்ள எண்ணெயில் சேர்க்கவும்.

பாலை மரத்தின் பட்டை, கருமருதுப்பட்டை, ஊகாபுட்டை மரப்பட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, வடவதி (இச்சி, கல்லால்) மரப்பட்டை, கலயிப்பட்டை, உவாமரப்பட்டை, முருங்கைப்பட்டை, மஞ்சள் முருங்கைப்பட்டை, இப்பட்டைகளின் கஷாயம் வகைக்கு ஒருசேர் வீதம் காய்ச்சி எடுத்துக் கீழே எழுதிய தைலத்தில் கலந்துகொள்ளவும்.

நல்ல கத்தக்காம்பு 1 சேர், நெல்லிமுள்ளி 1 சேர், சங்கவர மரப்பட்டை 1 சேர், பூதக்கரப்பான்பட்டை 1 சேர் இவைகளில் கத்தக்காம்பை நன்றாகப் பொடித்து வடிகட்டிப் போடவும். களிப்பாக்கையும் நைவாக அரைத்துச் சேர்க்கவும். பூதக்கரப்பான்பட்டை, சங்கபரபட்டை இவைகளைக் கொண்டு ஒவ்வொரு சேர் வீதம் கஷாயமிறக்கி இதையும் சேர்க்கவும். பிறகு கிராம்பு அரைச் சேர் ஒன்றிரண்டாக இடித்துச் சேர்க்கவும். சேர்க்கவேண்டிய எண்ணெய் வகைகள், நல்லெண்ணெய் 7 சேர், சிற்றாமணக்கு எண்ணெய் 1 சேர், இலுப்பெண்ணெய் 1 சேர், பின்னக்கொட்டை எண்ணெய் 1 சேர், வேப்பெண்ணை 9 தோலா (3 பலம்) இவ்வைந்து எண்ணெய்களையும் மேலே சொல்லப் பட்டவற்றையும் நன்றாகக் கலந்து மூன்று நாட்கள் சூரிய புடத்தில் (வெய்யிலில்) வைத்து, அதன் பிறகு பெரிய வாணலியிலிட்டு அடுப்பிலேற்றி மெழுகு பதமாகத் தைலத்தைக் காய்ச்சவும். பிறகு எடுத்து வஸ்திரகாயம் செய்து (துணியில் வடிகட்டி) புட்டியில் அடைத்துவைக்கவும். துணியில் தடவி சுளுக்கு, அடிபட்ட இடம்,

முறிவு, முட்டிகள் பிசகினதற்கும் எண்ணெய் தடவி நன்றாக உறுவிவிட்டு துவளையிடவும். முழங்காலின் வியாதிக்கும் தடவி உறுவிட்டு எண்ணெய் துவளையிடவும். மேலே கட்டு கட்டவும். நெருப்பு சுட்டு ஏற்படும் கொப்புளங்களுக்கும் மேலே தடவவும்.

## வீரணங்களுக்குச் சிவப்புத் தைலம்
### (சேக்கின் முறை)

வெம்பாடப் பட்டையை கொண்டுவந்து நன்றாக அரைத்து ஒரு உருண்டை எடை ஒரு சேர், கிராம்பை நன்றாக அரைத்து உருண்டை செய்தது எடை அரைச் சேர், கார்போக அரிசியை நன்றாக அரைத்து செய்த உருண்டை எடை அரைச் சேர், காசுக்கட்டி அரைத்த உருண்டை அரைச் சேர், குங்குலியம் உருண்டை அரைச் சேர், இவைகளுடன் 4 சேர் நல்லெண்ணெய் கலந்து மெழுகு பதத்தில் பக்குவமாய்க் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும்.

## வீரணங்களுக்குச் சிவப்புத் தைலம்
### (சேக்கின் இரண்டாவது முறை)

வேம்பாட மரப்பட்டை அரைத்த உருண்டை 1 சேர், நாவல் பட்டையின் கஷாயம் 1 சேர், வகுளப்பட்டையின் கஷாயம் 1 சேர், வங்கமரப்பட்டையின் கஷாயம் 1 சேர், பசலை மரப் பட்டையின் கஷாயம் 1 சேர், அரச மரப்பட்டையின் கஷாயம் 1 சேர், முருங்கப்பட்டையின் கஷாயம் 1 சேர், பலாசமரப்பட்டை (புரசம்பட்டை)யின் கஷாயம் 1 சேர், ஆலம் பட்டையின் கஷாயம் 1 சேர், நிலக்கொன்னைமரப் பட்டை சாற்றின் கஷாயம் 1 சேர், மஞ்சள் முருங்கப்பட்டையின் சாற்றின் கஷாயம் 1 சேர், இச்சிமரப்பட்டைக் கஷாயம் 1 சேர், செருப்படியின் சாற்றின் கஷாயம் 1 சேர், இச்சிமரப்பட்டையின் கஷாயம் 1 சேர், செருப்படியின் சாற்றின் கஷாயம் 1 சேர் கருவேலம்பட்டையின் கஷாயம் 1 சேர், கருந்துளசிச்சாறு 1 சேர், தேள்கொடுக்கிலைச் சாறு 1 சேர், கருஊமத்தைச் சாறு 1 சேர், புரசம்பட்டையின் சாறு 1 சேர், வெண்பூகிளுகிளுப்பை இலைச்சாறு 1 சேர், கத்தக்காம்பின் அரைத்தவிழுது 1 சேர், குங்கிலியம் அரைத்த விழுது, களிப்பாக்கு

அரைத்த விழுது 1 சேர், கிராம்பை அரைத்து அதன் விழுது 1 சேர், கார்போக அரிசி அரைத்த விழுது 1 சேர், இவைகளை எல்லாம் ஒன்றுகூட்டி அதன் நடுவில் நல்லெண்ணெய் அரை மணு போட்டுக் காய்ச்சி மெழுகு பதம் வந்ததும் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

## கணத்துக்கு எண்ணெய்
### (வாட்டாத்து ஞானியர் முறை)

ஜலபிரம்மி (பிரமிய வழுக்கை), பிரம்மி, கற்றாழை, மணத்தக்காளி, பொன்னாங்கண்ணி, வில்வ இலை, முடக்கற்றான், செருப்படி, கையாந்தகரை இவைகளின் சாறு வகைக்கு ஒரு சேர், பசுவின் பால் 1 சேர், எலுமிச்சம்பழச் சாறு 1 சேர், வெங்காயச் சாறு 1 சேர் இச்சாறு வகைகளையும் இரண்டு சேர் சிற்றாமணக்கு எண்ணெயையும் கலந்து, பிறகு கிராம்பு 2 வராகனெடை, வெந்தியம் 2 வராகனெடை இவைகளை நைவாக அரைத்துக்கூட்டி பக்குவமாய்க் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும்.

***அனுபானம் :*** காலை வேளை ஒன்றுக்கு 1 விராகனெடை வீதம் கொள்ளவும், 12 வயதுக் குழந்தைகளுக்கு ஒரு மண்டலம் (40 நாட்கள்) அல்லது 20 நாட்களுக்குக் கொடுத்தால் சகல வியாதிகளும் தீரும்.

பத்தியம் : பழைய சாதம் விலக்கவும். இச்சாபத்தியம்.

## உஷ்ணகாந்திக்குக் கற்றாழைத் தைலம்
### (வாட்டாத்து ஞானியார் முறை)

**நல்லெண்ணெய் 2 படி, கற்றாழைச்சாறு 2 படி இவ்விரண்டையும் நன்றாகக் கலந்து மெழுகு பதமாகக் காய்ச்சி எடுத்துவைக்கவும்.**

**இதனைக்கொண்டு தலைமுழுகிவர எல்லாவித உஷ்ண நோய்களும் குணமாகும். உஷ்ணமும் மிகுதியாகக் குறையும்.**

## நீலியின் தைலம்
### (அப்புராவின் முறை)

நீலியிலை, கையாந்தகரையிலை, பொற்றலை கையாந்த கரையின் இலை, வெண்காக்கரட்டான் இலை இவ்வகை இலைகளைத் தனித்தனியே உலர்த்தி இடித்துத் தூள் செய்து, துணியில் வடிகட்டி யாவற்றையும் ஒன்றுகூட்டி அத்துடன் மிளகு, பூண்டு இவைகள் வகைக்கு 6 பலம் இவைகளை அத்துடன் கலந்து கற்றாழையின் சாற்றைவிட்டு நைவாக அரைத்து ஒருபைசா அளவில் வில்லைகள் தட்டி உலர்த்தி, அரைச் சேர் வில்லைகளுக்கு ஒரு சேர் சிற்றாமணக்கெண்ணெய் வீதம் பதினோரு சேர் சிற்றாமணக்கெண்ணெய்விட்டு பதினைந்து நாட்களுக்கு சூரிய புடத்தில் வைத்துப் பிறகு உபயோகப்படுத்தவும்.

***அனுபானம், பத்தியம் :*** கால் சேர் எண்ணெய் வரையில் கர்ப்பிணிக்குக் கொடுக்கலாம். உப்பில்லாப் பத்தியம். புளி விலக்கவும், மறுபடியும் மருந்து உண்ணும்போது உப்பை விலக்கவும், சரீரம் பலஹீனமாக இருந்தால் மாதமொரு முறை கொடுக்கவும். இவ்விதம் 7 மாதம் ஏழுமுறை கொடுக்கவும். பலமான சரீரமானால் 3 மாதம் மூன்று முறையும், 5-ம் மாதம் மூன்று முறையும், ஏழாவது மாதத்தில் மூன்று முறையும் கொடுக்க பிறக்கும் குழந்தைக்கு கருங்கிராந்தி முதலானது நெருங்காது.

## லாக்ஷா தைலம்

சுத்தம் செய்த அரக்கு (கொம்பரக்கு) 4 சேர். அதில் 16 சேர் நீர் கலந்து, வெள்ளி லோத்திர மரப்பட்டை 5 வராகனெடை கலந்து நன்றாகக் காய்ச்சி, 4 சேர் கஷாயமாகச் சுண்டவைத்து இறக்கி வைத்துக்கொள்ளவும். இக்கஷாயமும், கட்டித் தயிரினின்று பிரித்தெடுத்த நீர் சத்து 16 சேர், நல்லெண்ணெய் 4 சேர் இம்மூன்றையும் நன்றாக சுண்டவைக்கும்படியான ஓர் பெரிய வாணலியை எடுத்து, அதில் இவைகளைவிட்டு, இதில் மருள்கிழங்கு, கோரைக்கிழங்கு, தேவதாரு, கடுகுரோகிணி, அதிமதுரம், அமுக்கிராக்கிழங்கு, சிற்றரத்தை, அரேணுக விதை,

பெருஞ்சீரகம், மலாகா சந்தனத்தூள், கோஷ்டம், மஞ்சள் இப்பன்னிரண்டு வகையும் வகைக்கு 4 வராகனெடை வீதம் சேர்த்து அதில் பசும்பால் 4 சேர் விட்டு நைவாக அரைத்து இவ்விழுதை எண்ணெய் இருக்கும் வாணலியில் கலந்து அடுப்பிலேற்றி தீபாக்கினி பிரமாணம் தீயிட்டு மெழுகு பதமாக வந்ததும் கீழே இறக்கிவைத்துப் பின் அதைக்கொண்டு எண்ணெய் முழுக்கு செய்துவரவும்.

***இதனால் குணமாகும் வியாதிகள் :*** இதனால் எண்ணெய் முழுக்கு செய்தால் சுரம், ஜுரவேகம், பலஹீனம் ஜுரத்தினால் அல்லது காச ரோகத்தினால் உண்டானாலும் தீரும். இதைத் தவிர சுரம், அக்கினிமந்தம், உடம்பின் எலும்பு சம்பந்தப்பட்ட ஜுரமிருந்து தேகம் மெலிந்துபோவதும் குணமடையும். உடல் உலர்ந்துபோயின் இந்த லாக்ஷா தைலத்தில் 2 வராகனெடை, நெய் சட்டியின் சாற்றில் ஒரு வராகனெடை, பூண்டின் தைலம் ஒரு வராகனெடை இம்மூன்றையும் 3 பலம் காடியில் கலந்து குடிக்கக் கொடுக்கவும். எல்லா ரோகங்களும் தீரும்.

கட்டித் தயிரினின்று பிரித்தெடுத்த நீர்சத்து என்பது. பசுவின் கட்டித் தயிரை ஒரு நாலுமூலை சவுக்கத்தில் (துணியில்) கொட்டி நன்றாகக் கயிற்றால் கட்டி தொங்கவிடவேண்டும். அதனடியில் ஈயம்பூசிய பாத்திரத்தை வைக்கவும். அப்பாத்திரத்தில் வடித்து விழும் தண்ணீரை மட்டும் எடுத்துக் கொள்ளவும். இதுதான் **ததி மஸ்த்** என்பது. துணியிலுள்ள சக்கையை விலக்கிவிடவும்.

## தலை முழுக இலந்தைத் தைலம்

இலந்தைப் பழத்தின் மேற்றோல் ஒரு சேர், ஒரு சேர் ஜீரகம் இவைகளைப் பசும்பாலில் அரைத்து, கழுவி சுத்தம் செய்த எள் எண்ணெய் 5 சேர் இத்துடன் கூட்டி மெழுகு பதம் வரும் வரையில் காய்ச்சி பதமாக எடுத்துக்கொள்ளவும். பிரதி புதன், சனிக் கிழமைகளில் தலை முழுகிவந்தால் மேக சாந்தியும், சரீர தேஜசும் ஏற்படும். சீயக்காயுடன் பயத்தம் பருப்பையும் கூட்டி அரைத்து பூசி ஸ்நானம் செய்யவும்.

## சாம்பிராணி சத்வம் அல்லது தைலம் தயாரிக்கும் முறை

### (அய்யாவையங்கார் முறை)

உயர்ந்த சாம்பிராணி 9 தோலை (3 பலம்) கடலைப் பருப்பு போல் பொடித்துக்கொள்ளவும். இரண்டு கண்ணாடிக் குடுவைகளைக் கொண்டுவந்து இவைகளின் வாய் நன்றாகப் பொருந்தும்படி தேய்த்து, ஒரு குடுவையில் சாம்பிராணியைப் போட்டு வாயை நன்றாகப் பாசிப்பயற்றின் மாவை பிசைந்து அதைக் குடுவையின் வாயில் நன்றாகக் காற்று புகாதபடியும், விழுந்து விடாதபடியும் சுற்றிலும் வேண்டிய அளவு அமுக்கி வைக்கவும், பிறகு நெய் 3 பலம், நல்லெண்ணெய் 3 பலம் இவைகளை ஒன்றுகலந்து விளக்கில் திரியிட்டு நன்றாக எரியவிட்டு குடுவையை அதன்மேல் வைத்து நெய்யும், நல்லெண்ணெயும் தீரும் வரையில் திரியை எரித்து, அதன்பிறகு அதிலுள்ள மருந்தை எடுத்துக் கண்ணாடிக் குடுவையில் வைத்துக்கொள்ளவும்.

இதன் உபயோகம் : தலைவலி, சளி தீரும். சளிக்கு மூக்கிலிடவும். தலைவலிக்கும் நசியமிடவும். நெற்றியில் தடவினால் உபத்திரவம் தீரும்.

## பூண்டின் தைலம்

### (வாட்டாத்து ஞானியர் முறை)

பூண்டைக் கொணர்ந்து நன்றாக நைவாக அரைத்து ஒரு துணியின்மேல் கனமாக அப்பி அதை ஒரு திரியாக சுருட்டி தணலின் பேரில் வாட்டி பிழிந்தால் தைலம் இறங்கும். இவ்விதம் எவ்வளவு தைலம் தேவையோ அவ்வளவை மேற்சொல்லியபடி செய்து எடுத்துக்கொள்ளவும். இந்தத் தைலம் இலிங்கம் கட்டுவதற்கு உபயோகப்படும். இத்தைலத்தினால் இலிங்கத்திற்குச் சுறுக்குக் கொடுத்தால் இலிங்கம் கட்டும். இதை சகலவிதமான வாத ரோகங்களுக்கும் கொடுக்க பயன்படும்.

## கந்தகத் தைலம்

(வாட்டாத்து ஞானியர்)

ஆமணக்கு நெய் ஒரு சேர், சேங்கொட்டை 1 சேர், கந்தகம் 3 பலம், இம்மூன்றையும் பக்குவமாகத் தைலம் காய்ச்சி இறக்கிவைத்துக்கொள்ளவும்.

***இதற்கு அனுபானம் :*** ஒரு வேளைக்கு சுமார் 2 விராகன் எடை அல்லது 5 வராகன் எடை கலந்து நன்றாக அரைத்து அதில் தேனையும் விட்டுக் கொடுக்கவும். இதை ஜன்னி, வாதம், தோஷம், மேகம், வாயு, ரணம், பக்கவாதம் இவைகளுக்குக் கொடுத்தால் குணமாகும். இச்சா பத்தியம்.

## ஸ்நானத்திற்கும், தலைக்குத் தடவவும் உயர்ந்த தைலம்

(வாட்டத்து ஞானியர் முறை)

நல்லெண்ணெய் 4 சேர், கற்றாழைச்சாறு 8 சேர், செவ்விளநீர் 8 சேர், பொற்றலை கையாந்தகரைச் சாறு, நெல்லிச் சாறு, தாமரைக்கிழங்கின் சாறு 4 சேர், கையாந்தகரைச் சாறு 4 சேர், எலுமிச்சம்பழரசம் 4 சேர், பசும்பால் 4 சேர், மலாக்கா சந்தனத்தூள் 30 பலம். இதில் மூன்று மரக்கால் தண்ணீர்விட்டு 1½ மரக்கால் நீராகச் சுண்டும்படிச் செய்துகொள்ளவும். இதற்கு வேண்டிய சம்பைச் சரக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு, கோஷ்டம், சிறுநாகப்பூ, வெட்டிவேர், அகிற்கட்டை, வால்மிளகு, கஸ்தூரி மஞ்சள், சிறுதேக்கு, ஜீரகம், மல்லி, அக்கராகாரம் இவைகள் வகைக்கு 20 வராகனெடை வீதம் பசும்பால்விட்டு நைவாக அரைத்துப் பாலில் கலந்து எண்ணெயில் கலந்து பக்குவம் மாறாமல் தைலம் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும்.தைலம் இறக்கும் பானையில் சேர்க்கும் சாமான்களின் விபரம். பீமசேனி கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை, புனுகு, இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதம் பானையிலிட்டு இறக்கிக்கொள்ளவும்.

***இதன் உபயோகம் :*** ஆரோக்கிய ஸ்நானம் தினம் செய்துவந்தால் மூலவாயு, நெற்றிச்சூலை, மேகசாந்தி, வாயு, குன்மம், உருசியின்மை (அரோசிகம்) இவ்வகையான எல்லா வியாதிகளும் அனுகூலமாகும்.

## கணை தைலம்

### (வாட்டாத்து ஞானியர் முறை)

சிற்றாமணக்கு, செவ்விளநீர், நருவிலிப் பட்டைச்சாறு, துளசியிலைச்சாறு, கையாந்தகரைச்சாறு, சீந்தில்கொடியின் சாறு, முசுமுசுக்கைச்சாறு, பிரமி (வல்லாரை)ச்சாறு, முடக்கற்றான் சாறு, கற்றாழைச்சாறு, தண்ணீர்விட்டான்கிழங்கின்சாறு, நீர்ப்பிரமியின் சாறு, கற்பூரவல்லியின் சாறு, சிறுகீரைச்சாறு, கருப்பஞ்சாறு இவைகள் வகைக்கு இரண்டு சேர், முலைப்பால் கால்சேர்.

***கஷாயமிறக்கிச் சேர்க்கும் சாமான்களின் விபரம் :*** தண்ணீர்விட்டான் கிழங்கு, நன்னாரி, வெட்டிவேர், விலாமரவேர், கோரைக்கிழங்கு, தாமரைவளையும், குட்டிக்கிழங்கு இவைகள் வகைக்கு 2 பலம் வீதம் எடுத்து நன்றாக இடித்து இரண்டு மரக்கால் தண்ணீர்விட்டு எட்டிலொரு பாகமாகக் கஷாயமாக இறக்கவும். தைலத்தில் சேர்க்கும் செம்பைச் சரக்கு : சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, அரத்தை, ஏலம், அதிமதுரம், ஜீரகம், கருஞ்சீரகம், செஞ்சந்தனம் (ரக்த சந்தனம்), வெந்தயம், மாசிக்காய், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு இரண்டு வராகனெடை கொண்டுவந்து இளநீரில் போட்டு வெண்ணெய்ப் பதமாக நைவாக அரைத்து, இளநீரிலே கலந்து பக்குவமாய் எண்ணெய்க் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இதில் பேரீச்சங்காய், சர்க்கரை, கற்கண்டு வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து எண்ணெயில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

***இதன் பரிமாணமும், தீரும் வியாதிகளும் :*** காலையில் ஒரு சிறு கரண்டி, மாலையில் ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள பதினெட்டு வகையான கணைவியாதிகள் தீரும்.

## மேகனாதி தைலம்

(பாபு வைத்தியரின் முறை)

புங்கமரப்பட்டை, பிராயப்பட்டை, கொன்னைப்பட்டை, புரசப்பட்டை, அமிஞ்சிப்பட்டை, எட்டிமரப்பட்டை, ஒதியம்பட்டை, சங்குமரப்பட்டை, நெய்ச்சட்டிப்பட்டை, உழலாற்றிப்பட்டை, நூறு வயதான வேம்பின்பட்டை, பலாசமரப் பட்டை, இலந்தைப்பட்டை, குட்டிவிளா மரத்தின் பட்டை, ஆடுதீண்டாப்பாளையின் பட்டை, சிவனார் வேம்பின்பட்டை இவைகளை வகைக்கு 45 பலம் எடுத்து இடித்து பெரிய பானையிலிட்டு 30 படி தண்ணீர் ஊற்றி அடுப்பிலேற்றி, 4 படி கஷாயமாகக் காய்ச்சி இறக்கி வடிகட்டிக்கொள்ளவும்.

***இதில் சேர்க்கும் கடைச்சாமான்கள் :*** ஆடுதீண்டாப் பாளையின் சாறு, கழற்சியிலையின் சாறு, சங்கம்குப்பியின் சாறு, வெள்ளருக்கின் சாறு, சிறுசெருப்படியிலையின் சாறு, கொட்டைக் கரந்தைச் சாறு, பொடுதலைச் சாறு இவைகளைக் கஷாயம் செய்து இவற்றுடன் நல்லெண்ணெய் 4 படி கலந்து அடுப்பிலேற்றி, அதில் மேலும் சேர்க்கவேண்டிய சாமான்கள் பரங்கிப்பட்டை 30 பலம், சேங்கொட்டை 18 பலம் (சேங்கொட்டையின் நடு நரம்பை நீக்கிவிட்டு) பரங்கிப்பட்டையுடன் கூட்டி கல்லுரலில் போட்டு இடித்துத் தூள்செய்து எண்ணெயில் சேர்த்து கிளறவும், அடுப்பின் தீயை கமலாக்கினி பிரமாணம் எரியவிட்டு மெழுகு பதத்துடன் இறக்கவும். இறக்குவதற்குமுன் விரலால் தொடுகையில் மிகுதியாக சுடாத நிலையில் இருக்கும்பொழுது இதை வடிகட்டி எடுத்துப் பாத்திரத்தில் பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

இதன் பரிமாணம் : காலை, மாலை இருவேளையும் ஒரு கரண்டி வீதம் பதினைந்து நாட்களுக்குக் கொடுக்கவும்.

***இம்மேகனாதி தைலத்திற்குப் பத்தியம் :*** முளைக்கீரை, மொச்சை, மாமிசங்களில் உடும்பு, முயல், பசுவின் மோர், உப்பு இவைகளைப் பத்தியத்திற்குச் சேர்த்துக்கொள்ளவும். பதினைந்து நாட்களுக்கு எண்ணெயைச் சாப்பிட்ட பிறகு நல்லெண்ணெயை தேக முழுவதும் நன்றாகத் தேய்த்து வெந்நீரில் முழுகவும். பதினைந்து நாட்களுக்குப்பின் பத்தியம் தேவையில்லை.

***தீரும் வியாதிகள் :*** கை, கால் இழுத்துக்கொள்ளுதல், சொறி, தேக வீக்கம், குஷ்டம், சிரங்கு, அரையாப்புக்கட்டி, பவித்திரம், ஆண்குறியில் ஏற்படும் புற்றுநோய் இவ்வாறான சகல வியாதிகளும் தீரும்.

## மஞ்சட்காமாலைக்குத் தைலம்

(அய்யாக்கண்ணு பிள்ளை)

விருகங்கிழங்கு, ஜீரகம், ஏலம், அரத்தை, மரமஞ்சள் இவைகள் வகைக்கு 2 தோலா வீதமெடுத்து நைவாக அரைத்து ஈரவெங்காயச்சாறு 1 சேர், பசும்பால் 1 சேர். இவ்விரண்டையும் 1 சேர் சிற்றாமணக்கெண்ணெயுடன் மேற்கூறியவைகளை எல்லாம் சேர்த்து ஒருநாள் முழுவதும் சிறிய தீயிட்டு (சொல்பத்தீ) மறுநாள் மெழுகு பதம் வந்ததும் இறக்கி வடிகட்டிப் புட்டியில் அடைத்துவைக்கவும்.

***மருந்தின் பரிமாணம் அல்லது அளவு :*** மஞ்சட்காமாலை வியாதிக்கு ஒருவேளைக்கு 3 பலம் வீதம் மூன்று நாட்களுக்கு விடியற்காலையில் மட்டும் கொடுக்கவும்.

***பத்தியம் :*** உப்பில்லாமல் மூன்று நாட்கள் பத்தியம் இருக்கவும். வியாதிகள் தீரும், பத்தியமில்லாமல் மருந்து சாப்பிடுவதாயின் பதினைந்து நாட்களுக்கு விடியற்காலையில் ஒரு கரண்டி வீதம் சாப்பிடவும். இச்சாபத்தியமிருக்கவும். இவ்விதம் செய்தால் காமாலை நோய் குணமாகும்.

## ஐந்து எண்ணெய்கள்

(அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய், குருந்தமர எண்ணெய் (ஒருவித வாசனையுடன் கூடிய பனை ஈங்கு?) வகைக்கு இரண்டு சேர், பூண்டு 1 சேர், மயில்துத்தம், பால்துத்தம், கௌரீ பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், இலிங்கம், தாளகம், மனோசிலை, நேர்வாளம், நிர்விஷம், தொட்டிப்பாஷாணம், எலிப்பாஷாணம்,

நவச்சாரம், மரஉப்பு, சத்திச்சாரம், சீனாக்காரம், வெங்காரம், பொட்டுலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, கருங்குங்கிலியம், வெண்குங்குலியம், சாம்பிராணித்தைலம், குக்கில், கரியபலம், பெருங்காயம், வத்ஸநாபி, ரசக்கற்பூரம் வகைக்கு 1½ பலம், வேப்பங்கொட்டை, புங்கங்கொட்டை, அழிஞ்சில்விதை, சதகுப்பை, வாயுவிளங்கம், கடுகுரோகிணி, வசம்பு, கார்த்திகைக் கிழங்கு, ஆகாசக்கருடன்கிழங்கு, ஈசுவரமூலிகை, பொடுபத்திரியின் வேர், நிலாவாரை வேர் இவைகள் வகைக்கு 6¾ பலம், ஊமத்தை விதை, சிவதைவேர், சித்திரமூல வேர், அனிச்சவேர், கடுகு, பூதசுரப்பான்பட்டை, முடக்கற்றான் இவைகள் ½ பலம். நொச்சிச்சாறு, சடச்சியின் சாறு, சாரணை, கொடிக்கள்ளி, இலைக்கள்ளி, முட்கள்ளி, சதுரக்கள்ளி, காட்டாமணக்குச்சாறு இவைகள் வகைக்கு ¼ சேர். இவைகள் யாவற்றையும் ஒன்றுகூட்டி மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கி, அடியிலிருக்கும் அடிமண்டியை எடுத்து, நன்றாக நைவாக அரைத்து இதே எண்ணெயில் கலந்து வைத்துக்கொள்ளவும்.

இந்த எண்ணெயை வாதரோக, மேகவாயு, சூலவாயு, சந்திவாதம் இவைகளுக்கு உடம்பில் எங்கு உபத்திரவம் இருக்கிறதோ அவ்விடம் பூசவும். உள்ளுக்குக் கொடுப்பதில்லை. கொடுக்கக்கூடாது.

## சுடர்த் தைலம்
## (அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

பாதரசம், கந்தகம், சங்குபாஷாணம், கௌரீ பாஷாணம், மனோசிலை, தாளகம், இலிங்கம், முர்தார்சிங்கு, வத்ஸநாபி இவைகள் வகைக்கு 3 வராகனெடை, வசம்பு ½ பலம், ஓமம் 1 பலம், ஊமத்தையிலையின் சாற்றைவிட்டு நைவாக அரைத்து ஒருசாண் அல்லது ½ முழம் மெல்லிய வெண்துணியை எடுத்து, அதனை நான்கு சமதுண்டுகளாக்கி, அரைத்த மருந்துகளையும் நான்கு பங்குகளாகச் செய்து, ஒவ்வொரு துண்டிலும் ஒவ்வொரு பாக மருந்தைத் தடவி, நாலு வர்த்தி (திரி)களாகச் செய்து, ஒரு கூறிய இரும்புக் கம்பியில் திரிகளின் முனையைச் சொருகிக்

கொள்ளவும். பிறகு 2 சேர். வேப்பெண்ணைய் எடுத்து இத்திரிகளை நன்கு நனைத்து இரும்புக் கம்பியைக் கையிலேந்தி அதனடியில் தரையில் ஒரு பாத்திரத்தை வைத்து, தொங்கும் திரிகளைத் தீயிட திரிகள் எரிந்துகொண்டிருக்கும்பொழுது, கீழுள்ள பாத்திரத்தில் தைலம் சொட்டும். வேப்பெண்ணெய் தீரும் வரையில் திரிகளின்பேரில் ஊற்றிக்கொண்டே இருக்கவும். பாத்திரத்தில் விழுந்த தைலத்தை எடுத்துப் பத்திரப்படுத்தவும். வாதரோகங்களுக்கு மேலே தடவித் தேய்த்தால் வாதரோகம் தீரும்.

## நொச்சித் தைலம்

### (அய்யாக்கண்ணு பிள்ளை முறை)

நொச்சி, கருநொச்சி இவ்விரண்டின்சாறு, சங்க இலையின் சாறு, சாரணைச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, சின்னியிலைச் சாறு, விலுட்டுமரத்தினிலைச் (ND) சாறு, செருப்படியிலைச்சாறு, பாவட்டைவேரின் சாறு, கற்றாழைச் சாறு, காட்டுத்துளசியிலைச் சாறு, கோழியாவாரைச் செடியின் இலைச்சாறு, கொட்டைக் கரந்தை இலைச்சாறு, பல்லாரிக்கீரைச்சாறு, நுணாச்சாறு, பேய் மருட்டியிலைச்சாறு, ஆடாதொடையிலைச்சாறு, கழற்சி இலைச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, வில்வயிலைச்சாறு, தேவதாளியிலைச்சாறு, நாய்வேளைச்சாறு, முன்னைவேரின் சாறு, நாயுருவியின் சாறு, வெள்ளருக்கு வேரின் சாறு, கொன்னையிலைச் சாறு, கத்திரி (கஸ்தூரி?) நாயகயிலைச்சாறு இவ்விதப் பச்சிலைகளை இடித்துத் தனித்தனியாக சாறு பிழிந்து வைத்துக்கொள்ளவும். திரவமில்லாத சில பச்சிலைகளைச் சிறிது தண்ணீர் விட்டு இடித்துச் சாறு பிழிந்து வைத்துக்கொள்ளவும். ஒவ்வொரு சாறும் தனித்தனி ஒருசேர் அளவுக்கு பிழிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். இச்சாறுகளை ஒரு பெரிய மண்பாண்டத்திலிட்டு, அதன்மேல் 1½ படி எண்ணெயும் விட்டு வைக்கவும். மறுபடியும் இதில் கீழ்க்கண்ட சாற்றையும் போடவும். வெருகன் (மெருகன்) கிழங்குச்சாறு, சத்திச்சாரணையின் சாறு, கோவையிலைச்சாறு, அமுக்கிராக்கிழங்கின்சாறு இவைகள் முறையே ஒருபடிச்சாறு எடுத்துத் தைலத்தில் கலந்துவைக்கவும்.

ஒருக்கால் எல்லா ' ıச்சிலைகளும் ஒரே சமயத்தில் கிடைக்காமல் போனால் கிடைத்தவரையில் சாறு எடுத்து எண்ணெயில் கூட்டி முழுமையாகக் கிடைக்கும் வரையில் இவைகளைத் தினம் கொஞ்சம் சேர்த்துத் தினமும் சிறிது காய்ச்சிக் கொள்ளவும். காய்ச்சாமல் மேலும் மேலும் பச்சிலைச் சாற்றை ஊற்றினால் சாறு பழையதாகிவிடும். ஆகையால் தினமும் சிறிது சிறிதாகக் காய்ச்சவேண்டியது அவசியம்.

இக்கஷாயத்திலும், எண்ணெயிலும் போடவேண்டிய கடைச்சரக்குகள் : செங்கத்தாரிப்பட்டை, காட்டுமிளகு, பூதகரப்பான்பட்டை, வில்வவேர், கருஞ்சீரகம், கடுக்காய், காட்டுச்சீரகம், பூலாங்கிழங்கு, மிளகு, ஏலம், சாதிக்காய், ஜாதிபத்திரி, மாசிக்காய், கிராம்பு, அதிமதுரம் இவைகளை வகைக்கு ½ பலம் வீதம் எடுத்து ஒன்றுகூட்டி நைவாக அரைத்து எண்ணெய் கலந்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு எரித்து மெழுகு பதமாக எடுத்துக்கொள்ளவும். ஆறியபின் கண்ணாடிப் புட்டியில் பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

***மருந்தின் பரிமாணம் :*** வேளை ஒன்றுக்கு ½ பலம் வீதம் கொடுக்கவும்.

***அனுபானமும், பத்தியமும் :*** மருந்து சாப்பிடும் நாட்களில் உப்பு, புளி இவைகளை விலக்கவு;ം. மருந்தை ஒன்று அல்லது இரண்டு, மூன்று, ஐந்து நாட்களுக்கும் ஒன்பது நாட்கள் வரையில் கொடுக்கலாம். மருந்து சாப்பிடும் நாட்களில் மட்டும் பத்தியம், வியாதியைப் பொருத்து மருந்து சாப்பிடவும். பாதி வியாதி குணமாகி, பாதி குணமாகாவிடில் 10 நாட்களுக்குப்'பின் மறுபடியும் மருந்தை உட்கொள்ளலாம்.

***குணமாகும் வியாதிகள் :*** 20 வகை மேக வியாதிகள், விரணம், சொறி, விஷபாதை, அண்டவாதம், மேகத்தாலுண்டாகும் எட்டுவிதக் குன்மம், சூலரோகம், மேகசூலை இவைகள் தீரும். இதற்கு இச்சாபத்தியம்.

## வெள்ளருகுத் தைலம்
### (அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

வெள்ளருகு, சர்க்கரை நார்த்தையின் வேர், விஷ்ணுகிராந்தி, திப்பிலி மூலம், சித்திரமூலம் வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து நன்றாக இடித்து 6 படி தண்ணீருடன் கலந்து எட்டில் ஒரு பங்கு கஷாயமாக இறக்கி வடிகட்டி அத்துடன் 3 சேர் நல்லெண்ணெய் கலந்து அடுப்பிலேற்றி சிறிய தீயிட்டு, அதில் சதகுப்பை, கார்போக அரிசி, வசம்பு, பூண்டு, திப்பிலி, கருஞ்சீரகம், மரமஞ்சள், டிக்குமலி, கத்தக்காம்பு, கருங்குங்குலியம், செங்கத்தாரிபட்டை, குடசப்பாலை, மயில்துத்தம், கந்தகம், ரஸகற்பூரம், லிங்கம் வகைக்கு 1 வராகனெடை இவைகள் எல்லாவற்றையும் நான்கு நாழிகை நன்றாக அரைத்து, இதைக் கஷாயத்தில் சிறிது கலந்து அல்லது கஷாயத்தின் அடி மண்டியில் சிறிது தண்ணீர்விட்டு அதை கசக்கிப் பிழிந்தெடுத்த நீரைவிட்டு அரைக்கவும். அரைத்த விழுதை எண்ணெயில் கலந்து அடுப்பிலேற்றி மெழுகு பதத்திற்கு வந்ததும் இறக்கி தைலத்தின் அடிவண்டலுடன் எடுத்து பெரிய வாயுள்ள புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

மருந்தின் பரிமாணம், அளவு, தீரும் வியாதிகள் : காலை, மாலை ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் (40 நாட்கள்) உட்கொண்டால் சொரி, சிரங்கு, விரணம், குஷ்டத்தின் விரணம் முதலிய பல விரணங்கள் தீரும். நான்கு மண்டலம் (160 நாய்கள்) சாப்பிடவும். இம்மருந்தை உட்கொள்ள குஷ்டரோகம் மேற்கொண்டு வளராது. பெரிய வியாதிகளுக்கு எண்ணெய் தீரத்தீர புதிதாய்ச் செய்துகொடுக்கவும்.

இந்த எண்ணெய்க்குப் பத்தியம் : பச்சை மாங்காய், பழுத்த மாம்பழம், மாங்காய் உறுகாய், மாங்காய் வடு இவைகளை முக்கியமாக விலக்கவேண்டும். கதளி பஞ்சகம், வாழைப்பழம், வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பூ இவைகளையும் விலக்கவும்.எண்ணெய் உட்கொள்ளுவதை நிறுத்தினாலும் 6 மாதங்களுக்குச் சேர்க்கக்கூடாது. கோபஞ்சகம் (பால், தயிர், நெய், வெண்ணை, மோர்) இவைகளையும் விலக்கவும். சரீரத்தில்

உஷ்ணங்காணின் நெய், மோர் இவைகளைச் சிறிது சேர்க்கவும். இந்த எண்ணெய் மிகவும் பிரசித்திபெற்றவை. நெடுநாள் தீராத விரணங்களுக்கு அநேக பேர்களுக்கு அநேக தடவை கோபாலகிருஷ்ண பிள்ளை செய்துகொடுத்து, வியாதியைத் தீர்த்திருக்கிறார். சாப்பிடும்போது எண்ணெயை நன்றாகக் கலக்கிச் சாப்பிடவும்.

குறிப்பு : அய்யாகண்ணு பிள்ளையின் தகப்பனார் கோபால பிள்ளை.

## நெய், வெண்ணெய், மெழுகு வகைகள்

### ஜீவந்தி நெய்

(முத்துசாமி தீக்ஷிதர்)

ஊசிப்பாலை சமூலம், அதிமதுரம், தீரதிராக்ஷை இனிப்பான வெட்பாலையரிசி, கோஷ்டம், அகலாகாரம், கண்டங்கத்திரி சமூலம், நெருஞ்சில் வேர், நீலத்தாமரையின் கிழங்கு, கீழாநெல்லி வேர், துராலப்பை, திப்பிலி இவைகள் வகைக்குக் கால் சேர் வீதம் எடுத்து யாவற்றையும் ஒன்றுபட இடித்துத் தூள்செய்து ஒரு பதுப்பானையிலிட்டு 44 சேர் நீரையும் ஊற்றி ஒருநாள் ஊறவைத்து அடுத்த நாள் அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு 10 சேர் கஷாயமாகச் சுண்டி எடுத்துக்கொண்டு அதில் 2½ சேர் பசுவின் நெய் விட்டு மூன்று நாட்கள் வைத்திருந்து பிறகு மெல்லிய தீயால் எரித்துப் பக்குவமாய் எடுத்துவைத்துக் கொள்ளலாம். நெய்யுடன் மேலே கூறிய 12 வகை சாமான்களை 2 விராகனெடை வீதம் எடுத்து நைவாக யாவற்றையும் அரைத்து நெய்யில் கூட்டி அதன்பிறகு மெல்லிய தீயால் எரித்து நெய்யைப் பக்குவமாய்க் காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

இம்மருந்தை 1¼ வராகனெடையிலிருந்து 2½ வராகன் எடை வரையில் அனுபான பேதத்தில் கொடுக்கவும். இந்நெய்யுடன் (தங்க) ஸ்வர்ணபஸ்மம் அல்லது வேறு உயர்ந்த மருந்துகளோடும் சேர்த்துக்கொடுத்தால் பதினோரு வகை க்ஷயரோகம் (காசரோகம்), கடினமான இதர வியாதிகளும் குணமாகும்.

## பல்லாரி கீரை நெய்

வல்லாரையின் சாறு 4 சேர், பசும்பால் 4 சேர், பசுவின் நெய் 2 சேர், நீலிவேரின் கஷாயம் 2 சேர், இளநீர் 2 சேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, கருப்பஞ்சாறு 2 சேர். இவைகளை ஒரு மண் பாண்டத்தில் போட்டுவைக்கவும். சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, இலவங்கப்பட்டை, தமாலபத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய் இவைகள் வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து, பாசும்பால்விட்டு நைவாக அரைத்து மேற்கூறிய சாற்றில் கலந்து மண்பாண்டத்தில் போட்டு அடுப்பிலேற்றி மெழுகு பதமாக எரித்து எடுத்துக் கொள்ளவும்.

ஸ்தாவர விஷயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2½ வராகன் எடை நெய், தேங்காய்ப்பால் ½ சேர், எண்ணெய் இம்மூன்றையும் கலந்து கொடுக்கவும்.

***மருந்தின் அளவு :*** 2 வராகனெடை முதல் 5 வராகனெடை வரையில் கொடுக்கவும். பேதியாகவில்லை எனில் அடுத்த நாள் பேதிக்கு மருந்து கொடுத்துவிட்டு, பிறகு மூன்றாம் நாள் மேற்கூறியபடி மருந்து கொடுக்கவும். இவ்விதம் இரு வேளையும் அரை மண்டலம் (20 நாட்கள்)வரை கொடுத்து வந்தால் வியாதி குணமடையும்.

## கல்யாண நெய்
### (முத்துசாமி தீக்ஷிதர் முறை)

பேய்த்தும்மட்டி வேர், கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, அரேணுகவிதை, வால்மிளகு, முசுமுசுக்கை வேர், மூக்குத்திப்பூண்டின் வேர், கௌலாவேர், ஏலம், நற்றேலம், மஞ்சிட்டம், இலவமரத்தின் வேர், கஸ்தூரிமஞ்சள், மஞ்சள், தகரை, நன்னாரிவேர், மலை நன்னாரிவேர், வாயுவிளங்கம், கோஷ்டம், மலாகாசந்தனம், தமாலபத்திரி, கண்டங்கத்திரி வேர், முள்கத்திரிவேர், ஜாதிப்பூ, தாமரை, சிறுநாகப்பூ, ஜாதிக்காய், சிவதை வேர்,

தாமரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், தீபதிராக்ஷை, முன்னை வேர் இவ்வகைகள் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து ஒரு பாத்திரத்தில் யாவற்றையும் போட்டு 40 சேர் நீரையும் ஊற்றி ஒருநாள் ஊறவைத்து, அடுத்த நாள் அடுப்பிலேற்றி காட்டெருவால் தீபாக்கினி அளவு தீயிட்டு 10 சேர் கஷாயமாகச் சுண்டவைத்து எடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். இதில் ஒரே பசுமாட்டின் பால் 5 சேர், கருப்பஞ்சாறு 5 சேர் இவைகள் எல்லாவற்றையும் முன்பு வைத்திருக்கும் கஷாயத்தில் சேர்த்து, நெய் காய்ச்சுவதற்குத் தகுதியான பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். மேலே குறிப்பிட்ட மருந்துகள் வகை ஒன்றுக்கு 1 வராகனெடை வீதம் எடுத்துக்கொள்ளவும். பீமசேனிகற்பூரம் 1 வராகனெடை, குங்குமப்பூ 1 வராகனெடை இவைகள் எல்லாவற்றையும் ஒன்றுகூட்டி பசும்பால்விட்டு நைவாக அரைத்து நெய், கஷாயம், இவ்விழுது இவைகளை நன்கு கலந்து அடுப்பிலேற்றிக் காட்டெருவால் தீயிட்டு தீபாக்கினி பிரமாணமாக எரித்துப் பக்குவமாய் எரித்து வடித்து இஷ்டதேவதையைப் பூஜைசெய்து நெய்யை வெகு ஜாக்கிரதையாக எடுத்துவைத்துக்கொள்ளவும்.

***மருந்தின் அளவு :*** வேளை ஒன்றிற்கு 2 வராகனெடை முதல் 4 வராகனெடை வரை தங்கபஸ்மம் அல்லது வேறு உயர்ந்த மருந்துகளுடன் கூட்டி இருவேளையும் கொடுக்கவும். இம்மருந்து அதிக உயர்தரமான மருந்து. மிகவும் பயன் தரவல்லது.

***இக்கல்யாண நெய்யினால் தீரும் வியாதிகள் :*** உன்மத்தம், காக்காய் வலிப்பு, சுரம், இருமல், உடல் இளைத்தல், அக்னிமந்தம், க்ஷயரோகம், வாதரோகம், சளி, பீனிசம், ஒருநாள் விட்டு ஒருநாள் வரும் சுரம், இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வரும் சுரம். வாந்தி, மூலவியாதி, உஷ்ணம், மூத்திரரோகம், உடல் வீக்கம், உடலில் உண்டாகும் அரிப்பு, சிரங்கு, பாண்டு, ஸ்தாவர விஷங்களினால் ஏற்படும் வியாதிகள், ஊர்வனங்களின் விஷங்களினால் ஏற்படும் வியாதிகள், செயற்கை விஷத்தினால் ஏற்படும் வியாதிகள், பேய் பிசாசுகளினால் உண்டாகும் புத்தி சுவாதீனமின்மை, பெண்களின் உதிரசூலை, இடுப்புசூலை,

இரத்தசூலை, மேகம் இவைகள் எல்லாம் தீரும். குழந்தை பிறந்து இறந்துவிடுகிற ஸ்திரீகளுக்கு இதைக் கொடுத்ததினால் அநேக ஸ்தீரகளுக்குக் குழந்தைகள் பிறந்து தீர்காயுசுடன் இருக்கிறார்கள். கர்ப்பம் தரித்து கர்ப்பச் சிதைவு ஏற்படும் பெண்களுக்கும் இம்மருந்தைக் கொடுத்ததினால் அவர்கள் கர்ப்பம் தரித்து குழந்தைகள் பிறந்து வாழ்கின்றனர்.

இவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆயுள் விருத்தி ஏற்படும். மற்றும் பாப ரோகங்கள், பேய், பிசாசு இவைகள் எல்லாம் நிவாரணம் ஏற்படும்.

இம்மருந்தானது கர்ப்பம் தரிப்பதற்கு அவசியமான பும்ஸவன மருந்துகளில் மிகவும் சிரேஷ்டமான ஒன்றாகும் என்று நன்றாகத் தெரிந்துகொள்ளவும்.

இம்மருந்துடன் சேர்க்கவேண்டிய நெய்யும், பாலும் ஜீவத்வத்ஸ பசுமாடா இருத்தல் அவசியம். இதன் கருத்து நெய், பால் எப்பசுமாட்டினின்று கிடைத்திருக்கிறதோ அப்பசுவின் கன்று உயிருதன் இருத்தல் மிகவும் அவசியம். இவ்விதமாக இருக்கிறதா என்ற தெரிந்து இம்மருந்தைச் செய்யவும்.

## மூல வியாதிக்கு நெய்

### (புருஷோத்தம தீர்த்தரின் முறை)

ஒன்பது தோலா (3 பலம்) நெய்யில் ஒரு கை கொள்ளும் அளவுக்கு ஜாதி மல்லிகை இலையின் சாற்றைவிட்டு நன்றாகக் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும்.

***இந்நெய்யின் குணம் :*** மூலத்தின் முளைக்குத் தடவ உபயோகமானது. மூலத்தின் முளைக்கு மேற்கூறிய நெய்யைத் தடவிவர முளை நிவர்த்தியாகி மூல வியாதியும் குணமாகும்.

## புளியாரை நெய்

### (முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

புளியாரை இலையின் சாறு ஒரு சேர். உலர்ந்த இலந்தை வற்றல் ஒரு சேர். இவ்விரண்டையும் 4 சேர் தண்ணீருடன் ஒரு

பாத்திரத்தில் போட்டு ஒருநாள் முழுவதும் ஊறவைத்து மறுநாள் அடுப்பிலேற்றி ஒரு சேர் கஷாயமாகச் சுண்டவைத்து எடுத்துக் கொள்ளவும். பசும்பால் 2 சேர், பசு நெய் ஒரு சேர் இவைகளைக் ஒன்றுகூட்டி, அத்துடன் சுக்கு 1 பலம் எடுத்து ஒருசேர் பசும்பால் விட்டு நைவாக அரைத்து இவ்விழுதைப் பாத்திரத்திலுள்ள கஷாயத்தில் மற்றவைகளுடன் கூட்டி சிறு தீயிட்டு மெழுகு பக்குவத்தில் இறக்கி நெய்யை எடுத்துக்கொள்ளவும்.

***மருந்தின் அளவு :*** இந்நெய்யில் 2 வராகனெடை முதல் 5 வராகனெடை வரையில் நோயாளியின் பலத்தை அறிந்து தங்கபஸ்மம் அல்லது மற்ற உயர்ந்த மருந்துகளுடன் கலந்து கொடுத்தால் சகல ரோகங்களும் தீரும்.

## அருகம்புல் நெய்

அருகம்புல் (சமூலம்) இதன் சாறு 10 சேர், ஆம்பல் கிழங்கு 2½ வராகனெடை, மஞ்சிட்டம், விலாமிச்சைவேர், வெட்டிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு வகைக்கு 2½ வராகனெடை. இவைகளை வெள்ளாட்டுப் பால்விட்டு நைவாக அரைத்து அத்துடன் தாமரைப்பூவின் கேசரத்தையும் அரைத்து நன்றாகக் கலந்து, யாவற்றையும் அருகம்புல் சாறு முதலானவைகளை அரைத்த விழுதுகளையும் ஒன்றுசெய்து வெள்ளாட்டு நெய் 2½ சேர், வெள்ளாட்டுப்பால் 10 சேர், அரிசிக் கழுநீர் 10 சேர் இவைகளையும் ஊற்றி ஒருநாள் ஊறவைத்து, மறுநாள் தீபாக்கினி தீயால் எரித்து, மெழுகு பதமாகக் காய்ச்சி எடுத்துப் பத்திரப் படுத்திக்கொள்ளவும்.

***இந்நெய்யின் அளவு மற்றும் குணமாகும் வியாதிகளும் :*** இரண்டரை வராகனெடை முதல் 5 வராகனெடை வரையில் நோயின் பலத்தை அனுசரித்து அதிகம் அல்லது குறைவாகவோ கொடுக்கவும்.

இம்மருந்தினால் மூன்று விதமான இரத்த பித்த வியாதிகள் தீரும். வாந்தி நிற்கும். நாசியிலிருந்து ஒழுகும் இரத்தம் தடைப்படும். காதிலிருந்து வரும் இரத்தம், சீழ் இம்மருந்தைக்

காதிலிட்டால் நிற்கும். கண்களிலுண்டாகும் இரத்த படலம் குணமாகும். ஆசன வழியாக விழும் இரத்தக் கசிவும் தீரும்.

## குழந்தைகளுக்குரிய மஹாதிக்த நெய்
### (முத்துசாமி தீக்ஷிதர் முறை)

ஆடாதோடையிலை, சீந்தில்கொடி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, கசப்பு, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, பழைய வேம்பின்பட்டை, முன்னைவேர் பட்டை இவைகளை வகைக்கு ¼ சேர். இதில் 10 சேர் தண்ணீர் சேர்த்து 2½ சேர் கஷாயமாகச் சுண்டவைத்து, அதில் பசுவின் நெய் 2½ சேர், மேற்கூறிய ஆடாதொடை முதல் முன்னை வேர் பட்டை வரையிலுள்ள சாமான்கள் வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து, சிறிது தண்ணீர் விட்டு நைவாக அரைத்து நெய்யை, கல்கம் முதலியவற்றுடன் கலந்து மெழுகு பதமாக எரித்து எடுத்துக்கொள்ளவும்.

***இம்மருந்தின் அளவும், தீரும் வியாதிகளும் :*** இதன் அளவு 2 வராகனெடை. அயசிந்தூரம், தங்கபஸ்மம் முதலிய பெரிய மருந்துகளுடன் தகுந்த அளவுடன் இம்மருந்ததையும் கலந்து கொடுக்க ஜீர்ண (நெடுநாளைய) சுரம், பாண்டுரோகம் (சோகை), இருமல் இவ்வாறான வியாதிகள் தீரும்.

## பதினெண்குட்டத்திற்குக் கந்தக மெழுகு
### (உள்ளுக்குச் சாப்பிட உகந்தது)
### (அய்யாக்கண்ணு பிள்ளையின் முறை)

கந்தகம் 1 சேர் எடுத்து ஒரு இருப்புக் கரண்டியில் போட்டு உருக்கி கையாந்தகரைச் சாற்றில் ஊற்றவும். இவ்விதம் மூன்று முறை செய்யவும். இவ்விதமே கீழாநெல்லிச்சாறு, பொன்னாங் கண்ணிச்சாறு, தாழைவேரின் சாறு இந்நான்கு சாறுகளிலும் ஒவ்வொரு சாற்றிலும் மும்மூன்றுமுறை கந்தகத்தை உருக்கி ஊற்றவும். கந்தகத்தை உருக்கும்பொழுது ஒவ்வொரு முறையும் 3 பலம் நெய்யுடன் கூட்டி உருக்கவும், மேற்கூறிய சாறுகளையும் நன்றாக வஸ்திரத்தில் வடிகட்டிவிட்டு ஊற்றவும். கந்தகத்தை

உருக்கி ஊற்றும்பொழுது கந்தகம் முழுமையும் சாற்றில் முழ்கும் அளவுக்கு சாறு எடுக்கவும். ஒவ்வொரு சாறும் ஒரே அளவாக இருத்தல்வேண்டும். ஆக 12 முறை கந்தகத்தை உருக்கி ஊற்றவும்.

அதன்பிறகு மேற்படி கந்தகத்தை இரும்புக் கரண்டியில் வைத்து உருக்கி அதன்மேல் தாழைச்சாற்றில் சுறுக்கு இருமுறை கொடுக்கவும். பிறகு ¼ சேர் வெங்காயச்சாற்றில் இருமுறை சுறுக்குக் கொடுக்கவும், இவ்விதம் நான்குமுறை சுறுக்குக் கொடுத்த பிறகு கந்தகத்தை எடுத்து கல்வத்திலிட்டு நைவாகத் தூள்செய்து, அத்துடன் கொஞ்சம் தேனைக் கூட்டி மெழுகு பதமாகச் செய்து அதை நான்கு ஜாமங்கள் அரைத்து எடுத்து வைத்துக்கொள்ளவும்.

வேளை ஒன்றிற்கு மிளகுப் பிரமாணம் எடுத்து இரு வேளையும் ஒரு மண்டலம் சாப்பிட்டுவர குஷ்டரோகம் குணமாகும். குணமாகமாக மேன்மேலும் இம்மருந்தைக் கொடுத்தால் முழுமையாக வியாதி தீரும். இச்சாபத்தியம் கையாளவும்.

## பஞ்சரத்ன மெழுகு
### (அய்யாக்கண்ணு பிள்ளை முறை)

**லோஹசிந்தூரம், தாளகசிந்தூரம், கட்டிய வெள்ளைப் பாஷாணம், இலிங்கம், இரசசிந்தூரம் வகைக்கு 1 வாரகனெடை, சர்க்கரை நாரத்தை அளவிற்குச் சுண்ணாம்பைத் தண்ணீரில் கரைத்து, கரைசலின் தெளிவை மட்டும் எடுத்து இவ்வைந்து மருந்துகளில் கலந்து கல்வத்திலிட்டு இருசாமம் சுண்ணாம்புத் தெளிவைவிட்டு அரைக்கவும். இவ்விதமே முலைப்பால்விட்டு இரண்டு சாமம் அரைத்து திரவ முழுமையும் சுண்டும்வரை அரைத்து மெழுகு பதமாகக் கெட்டியானதும் எடுத்து தந்த டப்பியில் அல்லது *சீனா* டப்பாவிலாவது அடைத்து வைத்துக் கொள்ளவும்.**

***அளவு, அனுபானம், தீரும் நோய்கள் :*** வேளை ஒன்றிற்கு ஒரு பயத்தம் பருப்பு அளவு வீதம் மூன்று வேளை கொடுக்க குளிர்சுரம், உஷ்ணசுரம் முதலான எல்லா சுரங்களும் தீரும். சுக்கு, பற்பாடகம் இவைகளின் கஷாயத்துடன் மருந்தைத் தேனில் கலந்து கொடுக்கவும். கஷாயத்தை மருந்து சாப்பிட்டபின் குடிக்கக்கொடுக்கவும்.

## திரிவிக்கிரம மெழுகு

கந்தகம், பாதரசம், வெள்ளைப் பாஷாணம், தாளகம், வத்ஸநாபி, நேர்வாளம், கொட்டாங்கச்சியை எரித்துக் கரியாக்கிய கரி இவைகள் வகைக்கு 2 வராகனெடை. இவ்வேழு மருந்துகளையும் கல்வத்திலிட்டு தேங்காய்ப்பால் ஊற்றி 4 ஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து டப்பியில் வைத்துக்கொள்ளவும். இம்மெழுகை எட்டு நாட்களுக்கு ஒருமுறை ஒரு குன்றிமணியளவு கொடுத்துவர மலவிசர்ஜனம் (பேதி) ஆகும்.

***இதற்கு அனுபானம், தீரும் வியாதிகள் :*** சர்க்கரை அல்லது சர்க்கரைக் கரைசலில் கலந்து கொடுக்கவும். எட்டு நாட்களுக்கு ஒருமுறை பேதிக்குக் கொடுத்துவந்தால், நான்கு நாட்களுக்கு ஒருமுறை, எட்டு நாட்களுக்கு ஒருமுறை, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை, மாதமொருமுறை வரும் சுரங்கள் தீரும். வாயு உபத்திரவத்திற்கு நோயாளியின் தேக பலம், வயிற்றின் நிதானம் அறிந்துகொடுக்கவும். மருந்து சாப்பிடும்பொழுது, பேதிக்குக் கொடுக்கும்போது அனுசரிக்கும் பத்தியத்தைக் கையாளவும்.

## கஷாய வகைகள்

### தனுர்வாயு கஷாயம்

(அய்யாக்கண்ணு பிள்ளை)

எருக்கம் பழுப்பு, உத்தாமணி, கையாந்தகரை, சீந்தில், நொச்சியின் கொழுந்து, முருங்கப்பட்டை, கோஷ்டம், சாரணை வேர், வசம்பு, பூண்டு, தேங்காய்த் திருவல் (பூ) இவைகள் வகைக்கு 3 பலம். இவைகளை ஒன்றுகூட்டிக் கஷாயம் செய்துகொள்ளவும்.

முருங்கப்பட்டையை வெதுப்பி எடுத்த சுரசத்தில் திப்பிலியைச் சுட்டு (வறுத்து) தூள்செய்து, அதில் போட்டு தினமும் இருவேளையாக ஏழு நாட்களுக்குக் கொடுக்கவும். உப்பு, புளி இவைகளை நீக்கவும். தனுர்வாயும் தீரும்.

### வத்ஸகாதி கஷாயம்

(முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

வெட்பாலையரிசி, அதிவிடயம், உலர்ந்த முற்றாத வில்வப்பழம், விளாமிச்சை வேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, கிராம்பு இவைகள் வகைக்குக் கால் வராகனெடை எடுத்து சிறிது வறுத்து ஒரு மண் சட்டியில் போட்டு அதில் 2 சேர் கழநீர் சேர்த்து அடுப்பிலேற்றி தீபாக்னி முறையில் தீயிட்டு கால் சேர் கஷாயமாகச் சுண்டியதும் இறக்கி வைத்துக்கொள்ளவும், இக்கஷாயத்தை மறுபடியும் மண் சட்டியைச் சூடாக்கி அதிலூற்றி முறித்துக்கொள்ளவும், இந்தக் கஷாயத்தில் தேனைக் கூட்டிக் கொடுக்கவும், சுரமிருந்தால் சிறுநாகப்பூவிற்குப் பதிலாக வட்டத்திருப்பியை சேர்த்துக் கொள்ளவும்.

### ஆடாதோடை கஷாயம்

(முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

ஆடாதோடை இலை, தூதுவளையின் இலை இவ்விரண்டும் 5 தோலா வீதம் எடுத்து இவைகளை

மெல்லியதாக அரிந்து, நெருப்பில் வறுத்து அத்துடன் திப்பிலி ஒரு தோலாவும், ஒரு சேர் தண்ணீரும் கலந்து 9 தோலா எடை கஷாயமிறக்கிக் கொள்ளவும், அத்துடன் சீனாகற்கண்டும், இஞ்சிச்சாறும் கலந்து பல மருந்துகளோடு அனுபானமாகக் கொடுத்தால் அதிகமாகக் குணமளிக்கும்.

## பேராமுட்டியின் கஷாயம்
### (முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

பேராமுட்டி, சுக்கு, சித்தரத்தை, சீந்தில், குமிழம்வேர் இவைகள வகைக்கு இரண்டு பலம் வீதம் கொண்டுவந்து அம்மியில் வைத்து நன்றாக இடித்து இரண்டு சேர் தண்ணீருடன் கலந்து கால் சேராக சுண்டவைத்துக் கஷாயமிறக்கி உபயோகப் படுத்திக்கொள்ளவும்.

## விளாமிச்சவேர் கஷாயம்
### (முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

விளாமிச்சம்வேர், துல்கொன்றிவேர் (துராலபாவேர்), பற்பாடகம், கோரைக்கிழங்கு, நிலவேம்பு, ஆடாதோடை, கடுகுரோகிணி இவைகளை வகைக்கு ஒரு தோலாப் பிரமாணம் எடுத்து இடித்து இவைகளை இரண்டு சேர் தண்ணீருடன் கலந்து எட்டிலொரு பங்காகக் காய்ச்சிக் கஷாயமிறக்கி, ரோகியின் தேக பலத்தை அனுசரித்து கால் சேர் வரையில் கொடுக்கும்பொழுது கஷாயத்துடன் ஒரு தோலா தேனையும் கூட்டிக்கொடுக்கவும்.

## கோஷ்டாதி கஷாயம்
### (முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

கோஷ்டம், வெட்பாலை அரிசி, மருள்கிழங்கு, பேய்புடல், சுக்கு வகைக்கு 5 தோலா. அதில் இரண்டு சேர் தண்ணீர்விட்டு எட்டில் ஒரு பங்காகக் காய்ச்சி கஷாயமிறக்கி, இதில் மிளகு, திப்பிலி இவ்விரண்டின் தூள் வகைக்கு அரைத் தோலா வீதம் போட்டு நன்றாகக் கலந்து சூடாக இருக்கும்பொழுது குடிக்கக் கொடுக்கவும்.

## திரிபலாதிக் கஷாயம்
(முத்துசாமி தீக்ஷிதரின் முறை)

கடுக்காய், தானிக்காய் (தான்றிக்காய்), நெல்லிமுள்ளி இவைகளின் விதைகளை நீக்கி தோலை மட்டும் எடுத்துக் கொள்ளவும், பேய்ப்புடல், ஆடாதோடை, சீந்தில், நிலவேம்பு, கடுகுரோகிணி, சுக்கு, சிற்றரத்தை இவைகள் பத்து வகைகளும் வகைக்கு 1 தோலா வீதம் எடுத்துக்கொண்டு இவைகளுடன் 2 சேர் தண்ணீர்விட்டு எட்டிலொரு பாகமாகக் கஷாயமிறக்கி அதில் தூள்செய்த மிளகு, திப்பிலி வகைக்கு அரை தோலா வீதம் போட்டு நன்றாகக் கலந்து உபயோகப்படுத்தவும்.

## கண்டங்கத்தரிக் கஷாயம்
(முத்துசாமி தீக்ஷிதர்)

கண்டங்கத்திரி, சீந்தில், சிறுதேக்கு, சுக்கு, வெட்பாலை அரிசி, துராலபா (துல்கொன்றி), நிலவேம்பு, செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு, பேய்ப்புடல், கடுகுரோகிணி வகைக்கு 2 தோலா எடை வீதம் எடுத்துக்கொண்டு இதில் 2 சேர் தண்ணீர்விட்டு எட்டிலொரு பாகமாகக் காய்ச்சி இதில் இரண்டு தோலா தேனையும் கூட்டி உபயோகப்படுத்தவும்.

## தான்யாதிக் கஷாயம்
(முத்துசாமி தீக்ஷிதர்)

கொத்தமல்லி, செஞ்சந்தனம் (ரக்த சந்தனம்), கோஷ்டம், பேய்ப்புடல், மருள்கிழங்கு, பொன்முசுட்டை, நிலவேம்பு, சீந்தில் இவைகள் வகைக்கு ஒரு தோலா. இவற்றில் 2 சேர் தண்ணீர்விட்டு நன்றாகக் காய்ச்சி எட்டிலொரு பங்காகக் கஷாயம் இறக்கிக்கொண்டு, அதில் இரண்டு தோலா எடை தேனையும் கூட்டிப் பருகக் கொடுக்கவும்.

## சதுர்தசாங்கக் கஷாயம்
(முத்துசாமி தீக்ஷிதர்)

குமிழ்வேர், முன்னைவேர், பாதிரிவேர், வாகைவேர், பேராமுட்டிவேர், நெருஞ்சில் வேர், முள்ளுக்கத்தரிவேர், கண்டங்கத்தரிவேர், சிறுபூளை வேர், நிலவேம்பின் வேர், துராலபா (துல்கொன்றி), சிறுதேக்கு, கடுக்காய், பேய்ப்புடல் இவைகளை வகைக்கு முக்கால் தோலா எடை எடுத்துக்கொண்டு 2 படி தண்ணீரில் கலந்து எட்டிலொரு பங்காகக் கஷாயமிறக்கி அதில் அரை தோலா திப்பிலித்தூளையும் கூட்டிக் குடிக்கக் கொடுக்கவும்.

## அஷ்டாதசாங்கக் கஷாயம்
(முத்துஸாமி தீக்ஷிதர்)

குமிழம் வேர், முன்னை வேர், பாதிரி வேர், வாகை வேர், பேராமுட்டி வேர், நெரிஞ்சில் வேர், முள்ளுக்கத்திரி வேர், கண்டங்கத்திரி வேர், சிறுபூளை வேர், நிலவேம்பின் வேர், துராலபா (துல்கொன்றி), சிறுதேக்கு, கடுக்காய், பேய்ப்புடல் இப்பதினான்கு வகைகளும் வகைக்கு ¾ தோலா வீதம் எடுத்துக் கொண்டு இத்துடன் கற்பூரமஞ்சள், கற்கடகச்சிங்கி, கோஷ்டம், வெட்பாலை அரிசி இவைகளையும் ஆக 18 வகைகளும் வகைக்கு ½ தோலா வீதம் எடுத்துப் பின்பு சதுர்தசக் கஷாயத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல் கஷாயமிறக்கி உபயோகிக்கவும்.

## பிளாஸ்திரி, பத்து, லேபன வகைகள்

## மஞ்சள் பிளாஸ்திரி
(பொன்னம்பலம்)

மிருதார்சிங்கு 2 விராகனெடை, மனோசிலை அரை விராகனெடை, சுமார் ஐந்து எலுமிச்சம்பழத்தின் சாற்றில் இவைகளை வேகவைத்து சுத்திசெய்து எடுத்துக்கொண்டு இவைகளைச் சுத்தமான தண்ணீரில் நன்றாகக் கழுவி அரைத்துக் கொள்ளவும். பிறகு தேன்மிளகு 2 விராகனெடை, வெள்ளைக்

குங்குலியம் 5 விராகனெடை, 3½ விராகனெடை பசுவின் நெய்யும் கூட்டி நன்றாகக் காய்ச்சி வஸ்திரகாயம் செய்து இதில் மிருதார்சிங்கு, மனோசிலை இவைகளையும் போட்டுக் கல்வத்தில் போட்டு இரண்டு மணிநேரம் நைய அரைத்து ஒரு டப்பியில் எடுத்துவைத்துக்கொள்ளவும். இவைகளை விரணம், நரம்பு சிலந்தியின் விரணத்திற்குப் போடவும்.

## வெள்ளை பிளாஸ்திரி
### (பொன்னம்பலத்தின் முறை)

கற்பூரசிலாசித்து 2 வராகனெடை, எலுமிச்சம்பழம் ஐந்தின் சாற்றில் போட்டுவைக்கவும். எல்லா சாறும் சுண்டிய பிறகு எடுத்து, நல்ல நீரில் கழுவி பசுவின் நெய் 1½ பலத்தைவிட்டு நன்றாக அரைத்து, மரத்துவெள்ளை 1½ பலமெடுத்து ஒரு கம்பியில் ஒட்டவைத்துத் தணலில் வாட்ட அது உருகும் தருவாயில் இருக்கையில் எடுத்து நன்றாகப் பிசைந்து மறுபடியும் தணலில் காட்டிப் பிசைந்து, இவ்விதம் மூன்றுமுறை செய்து, சிறிது ஆறியபின் அரைத்த கற்பூரசிலாசத்தின் விழுதை இத்துடன் கூட்டி அரைக்கவும். பிறகு மரத்து வெள்ளை 2 வராகனெடையும், வெண்மெழுகு 2 வராகனெடையும் கூட்டித் தணலில் உருக்கி வஸ்திரகாயம் செய்து மேற்கூறிய மருந்தில் போட்டு ஒருமணி நேரம் நைவாக அறைத்து, அறைக்கும்போது தண்ணீரைத் தெளித்து மருந்தின் வெண்மை நிறம் வெளிப்படும்படி அரைத்து, பிறகு ஒரு டப்பியில் அடைத்துவைத்துக்கொள்ளவும். இந்த பிளாஸ்திரி வெண்மையாக இருக்கும்.

## பச்சை நிற பிளாஸ்திரி
### (பொன்னம்பலத்தின் முறை)

மயில்துத்தம் 1 பலம், 15 வெற்றிலையின் சாறு எடுத்து ஒரு கரண்டியிலிட்டு அதில் மயில்துத்தத்தையும் போட்டு சாறு வற்றும் வரையில் காய்ச்சவும். பிறகு மயில்துத்தத்தை எடுத்து நன்றாகக் கழுவிக் கல்வத்திலிட்டு அதில் மஞ்சள்பொடி 1 வராகனெடை

போட்டு, நெய் 13 பலம் எடுத்து, அதில் கொஞ்சம் கல்வத்தில் போட்டு அரைக்கவும். மரத்து வெள்ளை 1½ பலம், ரசக்கற்பூரம் கால் விராகனெடை, மஞ்சள் மெழுகு 1½ பலம், மீதியுள்ள நெய் இவைகளை எல்லாம் கூட்டி நன்றாகக் காய்ச்சி வடிகட்டி (வஸ்திரகாயம்) இதை கல்வத்திலிருக்கும் மயில்துத்த விழுதையும் கலந்து மறுபடியும் 3 மணி நேரம் அரைக்கவும், பச்சை நிறம் அதிகமாகத் தேவையாயின் ஒன்று அல்லது 1½ வராகனெடை ஜங்காளி பச்சை நிறத்தை (வர்ணத்தை)க் கலக்கவும். அதன்பிறகு ஒரு டப்பியில் எடுத்துவைத்துக் கொள்ளவும். விரணத்தில் கெட்ட மாமிசம் வளர்ந்திருப்பனும், வெளுத்திருந்தாலும் இவ்விரணங்கள் காய்ந்துவிடும். இது மிகவும் உயர்தர பிளாஸ்திரி என்றறிக.

## *சிகப்பு நிற பிளாஸ்திரி*

(பொன்னம்பலத்தின் முறை)

அரைச்சேர் மோரை ஒரு கரண்டியிலிட்டு, அதில் உயர்ந்த ஜாதிலிங்கம் இரண்டு வராகனெடை போட்டு, நன்றாகக் காய்ச்சி மோர் முழுமையும் சுண்டும் வரையில் காய்ச்சிப் பிறகு ஜாதிலிங்கத்தை எடுத்துக் கழுவி கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் சிறிது சேர்த்து அரைக்கவும். பிறகு மரத்து வெள்ளை 1 சேர், நல்லெண்ணெய் 1 சேர் இவ்விரண்டையும் கலந்து ஒரு கரண்டியில் போட்டுக் காய்ச்சி வஸ்திரகாயம் செய்து இலிங்க விழுதில் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணி நேரம் நேவாக அரைத்து, வெண்மெழுகு 1½ பலம், கற்பூரம் 1 பண எடை இவ்விரண்டையும் காய்ச்சி, மேல்கூறப்பட்ட அரைத்த இலிங்கம், மரவெள்ளை இவைகளின் விழுதில் கலந்து மறுபடியும் நன்றாக அரைத்து ஒரு டப்பியில் எடுத்துவைத்துக் கொள்ளவும்.

இம்மருந்தைக் கட்டிகள் உடையாமலேயே (ஜீரணம்) அமுக்கிப் போவதற்காக உபயோகிக்கவும்.

## **கருப்புப் பிளாஸ்திரி** *(மிகவும் தீவிரமானது)*
## (பொன்னம்பலத்தின் முறை)

கருப்பு மரத்து வெள்ளை (கருங்குன்றிகம்) 1 சேர், நல்லெண்ணெய் 4½ பலம் இவைகளைக் கலந்து அதில் கற்பூரம் ½ வராகனெடை சேர்த்துக் காய்ச்சவும். இவை சிவந்தநிறம் அடைந்ததும் கீழே இறக்கிவைக்கவும். பதம் பார்த்து மிருதுவாக இருந்தாலும் மேலும் நல்லெண்ணெய் விட்டு நன்றாகக் காய்ச்சவும். ஒரு கரண்டியில் பசும்பால் ½ சேர் விட்டு அதில் அரை வராகனெடை ரசசெளவீரத்துண்டை போட்டு பால் வற்றும் வரைக் காய்ச்சி பிறகு எடுத்து ஆற்றின் நீரில் கழுவி தூள்செய்து கருங்குன்றிகத்தின் விழுதில் கலந்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். இது கொஞ்சம் கெட்டியானதும் டப்பியில் எடுத்து வைத்துக்கொள்ளவும். இப்பிளாஸ்திரியைப் போட்டால் உடையாத கட்டிகள் உடைந்து ஆறிவிடும்.

## **காயம், புண் ஆறுவதற்கு மஞ்சள் பிளாஸ்திரி**
## (சேக்கின் முறை)

மஞ்சள் மெழுகு எடை 3, முர்தார்சிங்கு எடை 9, வெள்ளை குங்குலியம் எடை 1, இலிங்கம் 2 விராகனெடை, மஞ்சள் 2 விராகனெடை, பசுவின் நெய் 1 சேர். இவைகளுள் மெழுகை முதலில் நன்றாக உருக்கி வஸ்திரகாயம் செய்யவும். பிறகு மெழுகை தண்ணீரில் ஊறவைத்து எடுத்துக்கொள்ளவும். மறுபடியும் மெழுகை உருக்கிமேல் சொல்லப்பட்ட சாமான்களை நன்றாக இடித்துத் தூளாக்கி இவைகளையும் மெழுகில் போட்டு நன்றாக உருக்கி வஸ்திரகாயம் செய்து சிமிழில் எடுத்துவைத்துக் கொள்ளவும். இப்பிளாஸ்திரி மஞ்சள் நிறமாக இருக்கும்.

## **பத்து வகைகள்**
## (சேக்கு சாயபுவின் முறை)

உராய்வதினால் உண்டான காயம் அல்லது இரத்தம் கட்டுவது, மூட்டு நழுவி அங்கு இரத்தம் கட்டியிருப்பினும், ஊமைக்காயம் உண்டாயிருப்பினும், எலும்பு முறிவால் இரத்தம் கட்டியிருப்பினும் அல்லது வாயு வியாதியால் வலி இருப்பினும் இவ்வகையான நோய்களுக்குப் போடும் பத்து.

***இதன் விபரம்:*** பாளையின் மேற்றோலின் கஷாயம் 9 சேர், கரியபலம் 9 தோலா (3 பலம்), கத்தைக்காம்பு 3 பலம், கடுக்காய் 2 சேர், எலுமிச்சம்பழச்சாறு 1½ சேர், எலுமிச்சம்பழச்சாற்றைத் தவிர மற்றதை மெல்லியதாக இடித்து அதில் பழரசத்தைவிட்டு ஒரு சாமம் அரைக்கவும். திப்பி அல்லது சிறியமணி (கணு) இல்லாமல் அரைத்து மிஞ்சிய பழரசத்தையும் விட்டுக் கலந்து வைத்து பத்து (பற்று)ப் போட உபயோகிக்கவும்.

## கட்டி, விரணம் முதலியவைகளுக்கு மேலே போட துவளை

விரணம் (புண்) ஆனால் கட்டி இருந்தால் ஆறாத புண் இவைகளுக்கு மேலேபோட (துணியின்மேல் தடவி) அல்லது பஞ்சில் நனைத்து மேலேவைக்க மேற்படி புண்கள் ஆறிவிடும்.

***இது செய்யும்முறை:*** சாராயம் (பட்டைச்சாராயம்) 2 சேர், துருசு 2 சேர் இவைகளை ஒரு கண்ணாடி சீசாவில் போட்டு நன்றாகக் குலுக்கி ஒருநாள் முழுவதும் வெய்யிலில் வைத்து, ஒருநாள்விட்டு ஒருநாள் வீதம் இருமுறை வெய்யிலில் வைத்து பிறகு உபயோகிக்கவும்.

## வாயு கட்டிக்கு லேபனம் (பத்து)
### (வாட்டாத்து ஞானியர் முறை)

கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், பெருமருந்தின் (ஈசுரமூலி) வேர், கழற்சியின் வேர், அமுக்கராக்கிழங்கு, மரமஞ்சள் இவைகள் வகைக்கு 1 வராகனெடை எடுத்துத் தண்ணீர்விட்டு வேகவைத்து எடுத்து பத்து போட்டால் வாயுக் கட்டி, அதன் வலி, குத்தல் தணிந்த கட்டி பழுக்காதிருந்தால் அமுங்கிவிடும். பழுத்திருந்தால் உடைந்து பிறகு புண் ஆறிவிடும்.

## பிரகீரணம் (கலம்பகம்)
## தாம்பிரகிண்ணி பதங்கம்
(அய்யாக்கண்ணு பிள்ளை முறை)

பாதரசம் 1 பலம், கந்தகம் 1 பலம், தாளகம் 1 பலம், மனோசிலை 1 பலம். இந்நான்கையும் தூள்செய்து மண் சட்டியின் நடுப்பாகத்தில் வைக்கவும். 18 பல எடையில் தாமிர உலோகத்தினால் ஒரு கிண்ணம் செய்து அக்கிண்ணத்தைச் சட்டியின் மையத்தில் வைத்திருக்கும் மருந்தின்மேல் மூடி இடுக்குகளை சீலைமண் செய்து அடுப்பிலேற்றி நான்கு யாமம் எரித்துப் பிறகு கிண்ணத்தை எடுத்து ஒரு பலகையின் மேல் குப்புறவைத்துத் தட்டினால் அதிலுள்ள மருந்துகள் கீழே விழும். இம்மருந்தை எடுத்து நன்றாகத் தூள் செய்துவைத்துக் கொள்ளவும்.

***இதனால் தீரும் வியாதிகள்:*** ஜன்னி, சுரம், மூச்சு முதலான சகல நோய்களும் தீரும். அனுபான பேத விசேஷங்களிலும் கொடுக்கலாம்.

## ஒரு மூலிகைப் பிரயோகம்
(அய்யாக்கண்ணு முறை)

நுணாக்காய், நுணாயிலை, நுணாப்பட்டை, மருதோன்றிப் பட்டை வகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு வீதம் எடுத்து அரைத்து உட்கொண்டு அதன்மேல் கால் சேர் வெந்நீர் குடித்தல் வேண்டும். இவ்விதம் மூன்று நாட்களுக்கு உட்கொண்டால் கிராந்திநோய் தீரும், உப்பில்லாப் பத்தியம் இருக்கவும்.

## இலிங்கத்தைக் கட்டும் விதம்
(அப்புராவின் முறை)

இலிங்கக் கட்டிகள் 10 விராகனெடை எடுத்து, கட்டி தெரியாதவண்ணம் நூலால் முழுமையும் சுற்றி அரை சேர் முலைப்பாலில் நாள் முழுவதும் ஊறவிட்டுப் பிறகு அடுப்பின் மேல் ஒரு மண் சாணாக்கி வைத்து அதில் இலிங்கத்தை வைத்து அதன்மேல் முலைப்பாலைவிட்டு அப்பால் முழுவதும் தீரும்

வரையில் படாக்னி தீயால் எரித்து கருக்குக் கொடுக்கவும். இதுதான் இலிங்கத்தின் சுத்தியாகும்.

அதன்பிறகு வெண்ணிற வெங்காயச்சாறு 2 சேரில் லோமானி சாம்பிராணி 24 வராகனெடையைத் தூள் செய்து அதில் கலந்து, அந்த கலவையைக் கொண்டு சுத்தி செய்த இலிங்கத்திற்கு எட்டு சாமம் சுருக்குக் கொடுக்கவும். இவ்விதம் செய்தால் கெட்டிப்படும். அதை எடுத்து அதன் மேலுள்ள கருப்பு முதலியவற்றைத் தேய்த்து எடுத்துவிட சிவந்த நிறமாகக் காணும்.

இம்மருந்தினால் தீரும் நோய்கள் : ஜன்னி, சீதளம், சுரம், வாயு, சளி, வாதரோகம் இவ்வாறான நோய்களுக்கு 1 பண எடை அல்லது அரை பணவிடை கொடுக்க வியாதிகள் குணமடையும்.

## இலிங்கத்தைப் பொன்னிறமாகச் செய்யும் விதம்
### (அப்புராவின் அபூர்வமான முறை)

இலிங்கத்தை முன்பு கூறியபடி சுத்தி செய்து அவ்விதம் சுத்தி செய்த இலிங்கம் 5½ வராகனெடை எடுத்து, தாமிர தாலத்தில் குப்பமேனியின் சாறு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு இவைகளைவிட்டு, மேலும் கந்தகம், மனோசிலை, தாளகம் நவச்சாரம், பாதரசம், இரசக்கற்பூரம் கற்பூரம் இவைகள் வகைக்கு 1 வராகனெடை பிரமாணம் எடுத்து, இதில் பாதரசம், ரசக்கற்பூரம் இவ்விரண்டையும் வெற்றிலைச்சாறும், குப்பைமேனிச் சாறும் போட்டு நன்றாக அரைத்து இலிங்கக் கட்டியின் சாறும் போட்டு நன்றாக அரைத்து இலிங்கக் கட்டியின்மேல் கவசம்செய்து மற்ற ஐந்து வகை மருந்துகளைத் தூள்செய்து தாலத்தில் போட்டு அதன் நடுவில் சாமனத்தால் லிங்கத்தை எடுத்து நழுவாமல் வைக்கவும். தாலத்தின் வாயின்மேல் ஒரு மண் ஓடு வைத்து தாலம் சுற்றிலும் சீலைமண் செய்து பூமியில் முழங்கால் வரையில் ஆழமாக வெட்டி, அதில் சீலைமண் செய்த தாலத்தை வைத்து மண்ணால்மூடி ஒருமாத காலம் புதைத்துவைத்து அதன்பின் எடுத்துக்கொள்ளவும். ஒருமண் ஓட்டை வைத்து, அதன் நடுவில் ஒரு துளையிட்டு, துளை மூடும்படி கிருஷ்ணாப்பிரகம் வைத்து சுற்றிலும் ஆலம்

பிசினைத் தடவி ஒட்டவைக்கவும். மேலும் ஒரு மண் ஓட்டை வைத்து ஒட்டவைத்த இடத்தில் சீலைமண் செய்யவும். பிறகு இந்த அப்பிரகத்தின்மேல் இலிங்கத்தை வைக்கவும். ஒரு மரத்துண்டு எடுத்து அதன்மேல் துணி கட்டி அத்துணியுடன் இருக்கும் மரத்துண்டை மேற்கூறிய சாற்றில் நனைத்து இலிங்கத்தின் பேரில் சாற்றைச் சுற்றிலும்விட்டு சாறு தீரும்வரை சுறுக்குக் கொடுக்கவேண்டும். ஒரு நாளானாலும் இரண்டு நாளானாலும் சாறு முழுமையும் தீரும் வரையில் சுறுக்குக் கொடுக்கும்போது இலிங்கம் கருகக்கூடாது.

எலுமிச்சம்பழ ரசம் 3 பலம், இளநீர் 3 பலம், காடி 3 பலம் இம்மூன்றையும் கலந்து, பிறகு பஞ்சலவணம் 2½ வராகனெடை சௌவீரம் 1 விராகனெடை இவ்விரண்டையும் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து இலிங்கத்தின் மேல் கவசம் செய்து மேற்கூறிய எலுமிச்சம்பழ ரசம், இளநீர், காடி இவைகளை தாலத்தில் போட்டு அதன் நடுவில் கவசம் செய்த இலிங்கத்தை வைத்து 8 நாட்கள் வரையில் அப்படியே வைத்திருக்கவேண்டும். அதன்பின் எடுத்துக்கொள்ளவும். ஒரு சிறிய அடுப்பை ஏற்றி அதன்மேல் ஒருமண் ஓடு வைத்து, அம்மண் ஓட்டின் நடுவில் ஒரு துளையிட்டு அத்துளையில் சரியாக பொருந்தி இருக்கும்படி காசிக் குப்பியின் ஒரு துண்டைதுளையின்மேல் வைத்து அதற்குச் சீலைமண் செய்து இலிங்கத் துண்டை இதன்மேல்வைத்து ஒரு குச்சியில் துணியைச் சுற்றி அச்சாற்றில் நனைத்து மேலூற்றிக் கொண்டே அடுப்பை எரிக்கவேண்டும். இலிங்கம் கருகாமல் இருக்குமாறு தீயிடவும். ஓரிரண்டு நாட்களானாலும் சாறு தீரும்வரை சுறுக்குக் கொடுக்கவேண்டும். அதன்பிறகு ஒரு இரும்புப் பாத்திரத்தை அடுப்பின்மேல் வைத்து, அதில் இலிங்கங்களை வைத்து இளநீராலும், பிறகு 3 சேர் பதனியாலும் முன்பு கூறியவிதமே சுறுக்குக் கொடுக்கவும். இவ்விதம் ஒன்றும் தவறாது செய்தால் பொன்னிறமாகும். இதுவே ஸ்வர்ணலிங்கம் என்று பெயர். மேற்கூறியதை ஒன்றையும் விடாது சரியாக செய்தால் இலிங்கம் ஒரு பக்கம் பொன்னிரமாகவும் மறுபக்கம் கருநிறமாகவும் ஆகாது.

## பாதரசத்தினால் வாய் வெந்ததற்குக் கொப்பளிக்கத் தண்ணீர்
## (நாயகத்தின் முறை)

ரோஜாப்பூவின் இதழ்களை எடுத்துக்கொண்டு சுடுநீரில் போட்டு நன்றாக வேகவைத்து, அத்தண்ணீரை எடுத்து வாய் கொப்பளித்துவந்தால் வாயின் வேக்காளம் முதலானது குணமடையும்.

## புடபாகம்

புடபாகம் என்பது வனஸ்பதி (தாவரங்கள்) அல்லது பழ வகைகள் இவைகளின் சாற்றை எடுத்து மருந்துகளுடன் சேர்க்கும் முறை.

எவற்றிலிருந்து சாறு எடுக்கவேண்டுமோ அதை நெருப்பில் நன்றாக வாட்டி அதன் சாற்றைப் பிழியவேண்டும். இதைத்தான் புடபாகம் என்று சொல்லுவது. இப்புடபாகத்தை ஒவ்வொரு தடவையும் தேவையானால் புதிதாகவே அவ்வப்பொழுது எடுக்கவேண்டும்.

## மாதுளை புடபாகம்

நன்றாக முற்றிய பக்குவமுள்ள ஒரு மாதுளம் பழத்தை எடுத்து அதன்மேல் வெட்பாலை இலைக்கொழுந்து அல்லது நாவல் இலைக்கொழுந்து அல்லது மாவிலைக் கொழுந்து இவைகளில் ஏதேனும் ஒன்றின் கொழுந்தை பழம் தெரியாமல் சுற்றி, அதன்மேல் நூலைச் சுற்றி, அதன்மேல் பசுவின் சாணத்தால் கனமாக கவசம் செய்து, உலரவைத்து அவ்வுருண்டையைத் தணலில் சுடவேண்டும். பிறகு மேலுள்ள சாணம், நூல் இவைகளை நீக்கிவிட்டு பழத்தைப் பிழிய சாறு வரும்.

மாதுளம்பழம் பக்குவமானதற்கு அறிகுறி : மேல் கவசம் செய்திருக்கும் சாணம் முழுமையும் எரிந்ததும் பக்குவமானதாக அறிக. இச்சாற்றில் 1½ பலம் எடுத்து தேன் 1 வராகனெடைக் கூட்டி நன்றாகக் கலந்து குடிக்கவும். ஒவ்வொரு தடவையும் புதிதாக இவ்விதம் சாறு எடுத்து உபயோகப்படுத்தவும்.

## வெட்பாலையின் புடப்பாகம்

குடசப்பாலையின் பட்டையைக் கொண்டுவந்து தண்ணீர் விட்டு நைய அரைத்துச் சர்க்கரை நாரத்தையின் அளவுக்கு உருண்டை செய்து வைத்துக்கொள்ளவேண்டியது. முன்பு மாதுளம் பழத்திற்கு புடபாகம் செய்யும்முறை சொல்லப்பட்டு இருப்பதுபோல் இதையும் செய்துகொண்டு, மேற்படி வெட்பாலை ரசத்தைப் பிழிந்து தேன் கலந்து மருந்துகளுடன் கூட்டிக் கொடுக்கவேண்டியது.

## ஏலாதி குடிகா (குளிகை)

நற்றேலம் ¼ பலம், திப்பிலி ½ பலம், கருவப்பட்டை ¼ பலம், தாளிசப்பத்திரி பலம், கற்கண்டு 1 பலம், அதிமதுரம் 1 பலம், விதை நீக்கிய பேரீச்சங்காய் 1 பலம், விதையில்லாத திராக்ஷை 1 பலம். இவைகளைத் தூள்செய்து தேன்கூட்டி இளகலில்லாமல் கொட்டைப்பாக்களவு உருண்டைகளாகச் செய்துகொள்ளவும்.

மருந்தின் அளவு, தீரும் வியாதிகள் : வேளைக்கு ஒரு உருண்டைவீதம் கொடுத்த பிறகு ஏதாவது சாப்பிடக் கொடுக்கவும். இவ்வுருண்டையை சுவர்ணமால்யவசந்தம் முதலிய உயர்ந்த மருந்துகளுடன் கொடுக்க மிகுதியான பலன் தரும், பித்தக்ஷயம், ரத்தபித்தம், இருமல், இழைப்பு, பித்தசுரம், விக்கல், வாந்தி, மூர்ச்சை, மயக்கம், பிரமை, இரத்தம் உமிழ்தல், முதுகு விலா வலி, வாயு, உஷ்ணத்தால் (வாய்) தொண்டை கம்மல், நெஞ்சு க்ஷயம், இதைத் தவிர சாதாரண நோய்களும் தீரும். பிரமதேபாங்குசரசம், பூர்ணசந்திரோதயம், காமதேவரசம், பஞ்சபாணரசம் இவ்வகையான வீரிய விருத்தி செய்யும் மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்க மிகுதியான பலனளிக்கும்.

## பஞ்சலவண உப்பு (ஐந்துப்பு)
### (அப்புராவின் முறை)

இந்துப்பு, பொட்டுலுப்பு, கந்தவிட (கருஉப்பு), சூண்டு மண் (சூண்டுப்பு), சமுத்திர உப்பு (கறியுப்பு) இவைகள் வகைக்கு 1 வராகனெடை. ஒரு படி உவர் மண்ணில் ஒரு படி நீர்விட்டுக்

கலக்கித் தெளியவைத்து மேல் வரும் தெளிவை எடுத்து அதில் இவ்வைந்து உப்பு வகைகளைப் போட்டு, சௌவீரம் ஒரு வராகனெடை, அன்னபேதி 2 வராகனெடை, சவுக்காரம் 2 வராகனெடை இம்மூன்றையும் மேற்கூறிய தண்ணீரில் போட்டு ஒரு மண் சட்டியில் வைத்து வெய்யிலில் வைத்தால் நீர் முழுவதும் வற்றிவிடும். வற்றியபின் சட்டியிலுள்ள உப்பை எடுத்துக்கொள்ளவும். இதுவே பஞ்சலவணம் என்று சொல்வது.

## சுத்தி வகைகள்

### தாமிர சுத்தி

ஆகாசதாமரை அல்லது கலியாண முருங்கையின் பூவின்சாற்றை ஒரு கலயத்திலிட்டு அதில் தாமிரத் தகட்டை ஏழு தடவை உருக்கி ஊத்த சுத்தியாகும்.

### கருவங்கம், வெள்வங்கத்தின் சுத்தி

நல்லெண்ணெய், கோமூத்திரம், காடி, புளித்தமோர், கொள்ளுக்கட்டு, எருக்கம் பால், வெள்ளாட்டுப் பால் இவைகளில் ஈயத்தை உருக்கி ஒவ்வொரு வகையிலும் எவ்வேழு தடவை ஊத்த வங்கம், ஈயம் சுத்தியாகும். இவ்வே வழுவகை திரவத்திலும் எவ்வேழு தடவை உருக்கி ஊத்தவேண்டும். ஆக 49 தடவை ஈயத்தை வங்கத்தை உருக்கி ஊற்றியதும் சுத்தியாகும்.

### இரசக்கற்பூரத்தின் சுத்தி

வெற்றிலை, மிளகு இவைகளின் சாற்றில் டோலா யந்திர முறைப்படி இரசக்கற்பூரத்தைத் தொங்கவிட்டு பிறகு நன்றாகக் காய்ச்சி எடுத்தால் சுத்தியாகும்.

### இலிங்க சுத்தி

தேன், முலைப்பால் இவைகளில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் எலுமிச்சம் பழச்சாறு, குப்பமேனியிலைச்சாறு, முலைப்பால் இவைகளை ஒன்றுகூட்டி அதனால் ஒரு சாமம் இலிங்கத்தை அரைக்க சுத்தியாகும்.

## இரசசௌவீரத்தின் சுத்தி

இளநீரில் 1¼ வராகனெடை கற்பூரம் கலந்து ஒரு பானையிலிட்டு சௌவீரத்தை டோலா யந்திர முறைப்படிப் பானைக்குள்ளிருக்கும் திரவத்தில் படாதவாறு தொங்கவிட்டு நன்றாகக் காய்ச்சவும் (ஆவியினால்) சுத்தி அடையும்.

## மனோசிலை சுத்தி

மனோசிலையை ஒரு சீனி பாத்திரத்திலிட்டு அது முழுகும் வரை எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு இரவு முழுவதும் ஊறவைத்துக் காலையில் எடுக்கச் சுத்தியாகும்.

## சிவதையின் சுத்தி

கோமூத்திரத்தில் மூன்று நாட்கள் ஊறவைத்தால் சுத்தியாகும்.

## எட்டியின் சுத்தி

நெல்லுடன் வேகவைத்து சிறுகீரைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து நீலியின் சாற்றில் வேகவைக்க சுத்தியாகும்.

## கௌரீ பாஷாண சுத்தி

கௌரீ பாஷாணத்தின் எடையில் பாதி எடை மிளகு மறுபாதி எடை உளுந்தும் சேர்த்து எருக்கம்பால் விட்டுக் கவசம் செய்து வெய்யிலில் உலரவைத்து அதன்மேல் துணியைச் சுற்றி நீராவியில் வைத்து நன்றாக வேகவைத்து பிறகு நீலிச்சாற்றில் கழுவி எடுத்துக் கொள்ளவும்.

## மூர்தார்சிங்கின் சுத்தி

வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு சாமம் வேகவைக்க சுத்தியாகும்.

## வத்ஸநாபியின் சுத்தி

கோமூத்திரத்தில் 3 நாட்கள் ஊறவைத்து பிறகு எடுத்து சுத்தமான நீரில் கழுவி எடுத்துக்கொள்ளவும் சுத்தியாகும்.

## துருசு சுத்தி

கழுதைத் தும்பையிலைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து பிறகு அதிலேயே போட்டு வேகவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

## நேர்வாளத்தின் சுத்தி

நேர்வாளத்தை உடைத்து அதிலுள்ள பருப்பை மட்டும் எடுத்துக்கொண்டு ஒரு மெல்லிய துணியில் முடித்து ஒரு பானையில் எருமை மாட்டின் மூத்திரத்தைவிட்டு அதனுள் இந்த துணிமுடிப்பை வைத்து அதில் சிறிது சாணத்தைப்போட்டு கலந்து வண்டலை நீக்கிவிட்டு அடுப்பிலேற்றி திரவம் வற்றும்வரை கொதிக்கவைத்து பிறகு எடுத்து பருப்பின் நடுவில் உள்ள நஞ்சுள்ள நரம்புகளை (முளைகளை) எடுத்துவிட சுத்தியாகும்.

## சேங்கொட்டையின் சுத்தி

சேங்கொட்டையைச் சிறிய துண்டுகளாக வெட்டி ஒரு பானையில் போட்டு எருமைச்சாணி சிறிதும், எருமையின் மூத்திரம் ஒரு படியும் போட்டு அடுப்பின் மேலேற்றி திரவம் இல்லாதபடிக் காய்ச்சி சுண்டவைத்து, அவ்விதம் செய்த சேங்கொட்டையின் தைலம் கீழ் இறக்கி சாணி கருநிறமாக மாறிவிடும். இச்சமயத்தில் அடுப்பிலிருந்து இறக்கி பருப்பை மட்டும் எடுத்துக்கொள்ளவும். சுத்தமாகக் கழுவி மற்றொரு பானையில் போட்டு எருமை மோரை விட்டு மோர் தீரும் வரையில் தீயிட்டு திரவம் சுண்டியதும் பருப்பை எடுத்துக் கொள்ளவும்.

## வெங்கார சுத்தி

வெங்காரத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து வெய்யிலில் உலரவைக்கவும். இவ்விதம் மும்முறை செய்ய சுத்தியாகும்.

## பொட்டுலுப்பு சுத்தி

பொட்டுலுப்பிலுள்ள கல், மண் முதலியவற்றை நீக்கி சுத்தம் செய்து ஒருதடவை சுத்த ஜலத்தினால் கழுவி உடனே துணியில் துடைத்து எடுக்க சுத்தியாகும்.

## குங்குலிய சுத்தி

பசுவின் பாலில் நன்றாக ஊறவைத்துப் பிறகு எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

## பூரத்தின் சுத்தி

முலைப்பாலில் அல்லது பசுவின் பாலில் ஊறவைத்து எடுத்தால் சுத்தியாகும்.

## தாளகத்தின் சுத்தி

கழுதையின் சிறுநீரைக் கொண்டுவரவும். தாளகத்தை சுண்ணாம்புக்கற்கள் நடுவில் வைத்து கழுதையின் சிறுநீரை சுண்ணாம்புக் கற்களின் மேல்விட சுண்ணாம்புக் கற்கள் மலர்ந்து விடும். பிறகு எடுத்துக்கொள்ளவும். இவ்விதம் ஏழு தடவைகள் மேலே கூறியவாறு செய்தால் தாளகம் சுத்தியாகும்.

## லோக அரப்பொடியின் சுத்தி

லோக அரப்பொடியைப் பீங்கான் பாத்திரத்திலிட்டு ஆறு மாத காடி ஊற்றி பொடி முழுவதும் முழுகும்படி காடி ஊற்றவும். அதில் 4 எலுமிச்சம்பழச் சாற்றை பிழிந்து வெய்யிலில் வைக்கவும். அதிலுள்ள சாறு வற்ற வற்ற மேன்மேலும் சாறு ஊற்றிக்கொண்டிருக்க, இவ்வாறு ஏழு நாட்களுக்குப் பிறகு தண்ணீர்விட்டு ஏழு தடவை கழுவி சுத்தம் செய்தால் அரப்பொடி சுத்தமாகும்.



## எடை, அளவு, பரிமாணம் முதலியவற்றின் விளக்கம்

| | |
|---|---|
| ஒருகடி | - ஐந்து விரலில் கொள்ளுமளவு |
| உழக்கு | - கால்படி |
| கழஞ்சி | - 1¼ விராகனெடை |
| காசிடை | - ஒரு பைசா எடை |
| குன்றிடை | - குன்றிமணியளவு எடை |
| சேர் | - 24 ரூபாய் எடை |
| திருகடி, திரிகடி | - மூவிரல்கொண்ட அளவு |
| துட்டிடை | - ஒரு தோலாவில் 48ல் 1பங்கு |
| தூக்கு | - 144 ரூபாய் எடை |
| தோலா | - 1 ரூபாய் எடை |
| நாழிகை | - 60 விநாடி |
| நெல்லிடை | - ஒரு நெல்லின் எடை |
| பணவிடை | - ஒரு விராகனெடையில் 10ல் 1 பங்கு $3^1/_5$ குன்றுமணி எடை |
| பலம் | - 3 தோலா எடை |
| பிடி | - ஒரு கைப்பிடியில் கொள்ளும் அளவு |
| மணங்கு | - 40 சேர் அல்லது 900 தோலா |
| மண்டலம் | - 48 நாட்கள் |
| மரக்கால் | - 2 படி கொண்டது |
| சாமம், யாமம் | - ஜாமம் அல்லது 7½ நாழிகை கொண்ட கால அளவு |
| விராகனெடை | - 32 குன்றிமணியெடை |
| வெருகடி | - ஐ.விரலில் கொள்ளுமளவு. |

## எரிப்புத்திட்டம், புடம், இயந்திரம் இவைகளின் அட்டவணை

**அடிமண்டி** : அடிவண்டல்

**அர்க்கயந்திரம்** : திரவங்களைக் காய்ச்சி அவைகளின் சத்துவத்தை எடுக்க உபயோகிக்கும் வாலையந்திரம். திராவகம் வடிக்கும் பாத்திரம்.

**அஸ்தி** : எலும்பு, எலும்பு சம்பந்தமான.

**இச்சாபத்தியம்** : வீடு பத்தியம், வாயு பதார்த்தங்களையும், மைதுனம் முதலியது நீங்கலான மனதுக்குகந்தபடி சாதாரண பத்தியத்தைக் கையாளுதல்.

**ஊதி எடுத்தல்:** ஒரு தாது அல்லது சரக்கை நெருப்பிலிட்டு சிவக்கக் காய்ச்சி எடுத்துக்கொள்ளுதல்.

**கடுகு** : எண்ணெய், கஷாயம், தைலம் இவைகளைக் காய்ச்சியதும் அதிலிருக்கும் வண்டல் அல்லது கடுகு எண்ணெய்.

**கமலாக்னி** : மட்டான தீ, 2 விரல் கனமுள்ள 3 விறகால் எரிப்பது.

**கல்வம்** : மருந்தரைக்கும் கருவி.

**கவுதாரி புடம்** : 3 விறகால், எருவால் போடப்படும் புடம்.

**கஜ புடம்** : 100 எரு முட்டைகளாலான புடம்.

**காடாக்கினி** : 5 விறகில் எரிக்கும் தீ. இரண்டு விரற்கனமுள்ள 5 விறகால் போடப்படும் தீ.

**காட்டெருவு** : வறட்டி

**குக்குட புடம்** : கோழிப்புடம், 10 வறட்டியால் போடப்படும் புடம்.

**குப்பி, காசிக்குப்பி** : மெல்லிய கண்ணாடியினால் செய்யப்பட்ட பாத்திரம். முன்பு காசி நகரத்தில் செய்யப்பட்டதால் இப்பெயர்.

**சாண்புடம்** : ஒருசாண் நீளம், ஒருசாண் அகலம், ஒருசாண் உயரம் விரட்டிகளை அடுக்கிப் புடம் போடுதல்.

**சுரசம்** : சாறு, சிகிர்த சாறு.

**சுருக்குக் கொடுத்தல்** : ஒரு பதார்த்தத்தை சிவக்கக் காய்ச்சி அதன்மேல் திரவத்தை ஊற்றி சுருக்குக் கொடுத்து அப்பதார்த்தங்களில் அத்திரவங்கள் ஊறும்படி செய்வது. சுர் என்று சப்திப்பதால் இப்பெயர் கொண்டது.

**சூரிய புடம்** : வெய்யிலில் குறிப்பிட்ட நேரம் வைத்து எடுப்பது.

**டோலாயந்திரம்** : எந்த சரக்கை திரவத்தில் சுத்தி செய்ய வேண்டியதோ அந்தத் திரவத்தை ஒரு பானையிலிட்டு சுத்தி செய்யும் மருந்தையும் ஒரு துணியில் முடித்து பானையின் வாயின்மேல் ஒரு சிறு குச்சிவைத்து இத்துணி முடிப்பை அதன் நடுப்பாகத்தில் கட்டி, பானையில் உள்ள திரவத்தில் படாதவாறு தொங்கவிட்டு அப்பானையை அடுப்பிலேற்றி வேகவைத்து மருந்து நீராவியால் சுத்தியானபின் எடுத்துக்கொள்வது. டோலா என்றால் தொங்கட்டான் என்று பெயர்.

**தீபாக்கினி** : ஒரு விறகால் தீ எரிப்பது. தீபம் போல் எரிப்பது.

**படாக்கினி** : காட்டுத்தீ, பெருந்தீ.

**பாதாள யந்திரம்** : தைலம் எடுக்கும் தைல யந்திரம்.

**புட்டவியல்** : பச்சிலைகளை மற்றவைகளை சாறு எடுக்க நீராவியால் வேகவைத்து, சாறு பிழிய சாறு சுலபமாகக் கிடைக்கும்.

**பூ புடம்** : பூமியில் புதைத்துவைத்து குறிப்பிட்ட காலங்களுக்குப்பின் எடுத்துக்கொள்வது.

**முழப்புடம்** : ஒருமுழ நீளம், ஒருமுழ அகலம், ஒருமுழ உயரம் வறட்டி அடுக்கிப் புடம் போடுதல்.

**வராகப்புடம்** : ஐம்பது வறட்டிகொண்டு போடும் புடத்திற்கு வராகபுடம் என்று சொல்லப்படுகிறது.

**வஸ்திரகாயம்** : சூரணித்த அல்லது திரவப் பதார்த்தங்களை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீலையினால் வடிகட்டிக் கொள்வது. மிகவும் சன்னமானதும், தெளிவாகவும் இவைகளிருக்கும்.

வாலுகாயந்திரம் : அகன்ற வாயுடைய மண் பானை அல்லது சட்டியில் பாதி அளவுக்கு மணல் நிரப்பி அதன்மீது மருந்து இருக்கும் குப்பியோ அல்லது வேறு பாத்திரங்களோ நடுவில் வைத்து மேலும் மணலைப் போட்டு நிரப்பி மேலொரு மூடியைப் போட்டு மூடி சீலைமண் செய்து எரித்தல்.